# ஜகன் மோகினி

ஜூன் 1954

JAGAN MOHINI

ESTD. 1923

அணா நான்கு



N54·31·6.

## அசல் × தழுவல் வாதப் போரில்
## தினமணியின் "வெற்றிகரமான வாபஸ்"

**சென்ற இதழில் 51-52 பக்கங்களில் வை. மு. ஸ்ரீ. எழுதியிருந்ததற்கும், அதன் பின்னர் அனுப்பப்பட்ட நோட்டீஸுக்கும் பதிலாக 5-5-54 தினமணியில் தலையங்கத்தையடுத்து கீழ்க் கண்ட விளக்கம் வெளியிடப்பட்டுள்ளதை மோகினி வாசகர்களுக்குத் தெரிவித்து, இந்த விஷயத்தை—வேறுவ்யாக்யானமின்றி—இத்துடன் நிறுத்திக்கொள்கிறோம்.**

### "வை. மு. கோ"வின் நாவல்கள்
### ஒரு விளக்கம்

சென்னை, மே 4௳—நாவலாசிரியை ஸ்ரீமதி. வை. மு. கோதைநாயகி அம்மாள் சார்பில் நமக்கு எழுதப்பட்டுள்ள கடிதமொன்றில் அவர் எழுதிய 110 நவீனங்களும் சொந்தக் கற்பனைகள் தாம் என்று அறிவிக்கப்படுகிறது. நவீன தமிழ் இலக்கியத்தைப் பற்றி ஏப்ரல் 21௳ இப்பக்கத்தில் வந்த ஒரு கட்டுரையில் குறிப்பிடப்பட்டிருந்ததுபோல தழுவல் அம்சம் அவற்றில் இல்லை என்று அறிவிக்கப்படுவதை மகிழ்ச்சியுடன் பிரசுரிக்கிறோம். அவருடைய நவீனங்களுக்கு இன்னமும் நல்ல கிராக்கி இருப்பதாக அறிவிக்கப்படுகிறது. ஒரு நூற்றாண்டின் நிலைபற்றிய விமர்சனத்தில் "வை.மு.கோ." அவர்களின் பெயரைச் சேர்த்தது நாவலாசிரியை என்ற வகையில் அவர் அடைந்த பெருமையைக் குறிக்கத்தான். எனவே அவருக்கு மனவருத்தம் ஏற்படும்படியான பதம் ஒன்று அதில் சேர்ந்தது குறித்து வருந்தி, அந்த வாக்கியத்தையே இதன் மூலம் வாபஸ்பெற்றுவிடுகிறோம். —**தினமணி, 5-5-54**

---

# நள்ளிரவில் ஒரு தர்ம விளக்கு

### பி. ஸ்ரீ.

சங்க காலத்திற்குப் பின் தமிழ் நாகரிகம் கோயில் நாகரிகமாகத் தழைத்து ஓங்கியது. கோயில்கள் சமயத்தை வளர்த்ததுடன் சிற்பம் சித்திரம் ஆடல்பாடல் முதலான நுண்கலைகளையும் பேணி வளர்த்தன; இலக்கிய வளர்ச்சிக்கும் அரும்பெருந்துணையாக அமைந்தன. பதினான்காம் நூற்றாண்டுத் தொடக்கத்தில் முஸ்லிம் படையெடுப்பு ஏற்பட்டபோது நமது கோயில் நாகரிகம் ஒருவாறு வீழ்ச்சிநிலையுற்றது எனக் கருதலாம்.

எனினும் விஜயநகரப் பேரரசு சுமார் 250 ஆண்டுகளாகக் கோயில்களைப் பழுது பார்த்தும் புதுப்பித்தும் பூஜைகளையும் விழாக்களையும் மேன்மை பெறச்செய்தும் கோயில் நாகரிகத்தைத் தொடர்ச்சியாக வளர்த்து வந்திருக்கிறது. பதினாறும் நூற்றாண்டின் முற்பகுதியில் கிருஷ்ணதேவராயரின் போராற்றலும் பக்திப் பெருக்கும் நமது கோயில் நாகரிகத்திற்குப் பேராணாக அமைந்தன.

அந்த நூற்றாண்டிலே தமிழிலக்கியம் சிறந்த வளர்ச்சி நிலையில் இல்லாவிட்டாலும் கிருஷ்ணதேவராயராலும் அவரது நாயக்கப் பிரதிநிதிகளாலும் பேணப்பெற்று வந்தது என்பதில் ஐயமில்லை. இந்நூற்றாண்டின் இடைக்காலத்திலே மடாலயங்கள் சமயப் பயிற்சியோடு தமிழிலக்கியப் பயிற்சிக்கும் உதவி செய்தன.

வைணவ மடங்கள் பொதுவாக வைணவபக்தி மதத்தையும் ஆழ்வார்களின் கொள்கைகளையும் பரப்புவதிலேயே கண்ணுங் கருத்துமாயிருந்தன. வைணவ சமயத் தலைவர்களின் முயற்சிதான், கிருஷ்ணதேவராயரை வைணவராக்கி "ஆமுக்த மால்யதா" என்னும் சிறந்த தெலுங்கு நூல் வாயிலாக ஆண்டாள் வைபவத்தையும் வைணவக் கொள்கைகளையும் ஆந்திர நாட்டில் பரப்பவும் தூண்டியது. சோழநாட்டில் தோன்றிய வைணவ சமயத் தலைவர்கள் வட இந்தியாவி லும் ஆழ்வார்—ஆசாரியர்களின் ஸ்ரீ வைஷ்ணவத்தை நன்கு பரவச் செய்தனர். ஆனால் இத்தலைவர்களோ, வைணவ மடங்களோ தமிழிலக்கியப்பணியில் சைவமடங்களைப்போல் சிரத்தை கொண்டிருந்த தாகச் சொல்லமுடியாது.

சைவ மடங்களுக்கே தமிழிலக்கியப் பணியில் பெரும் பங்கு உரிய தாகும். பதினாறும் நூற்றாண்டின் பிற்பகுதியில்-அதாவது கி. பி 1561-க்கும் 1566-க்கும் இடைப்பட்ட காலத்திலே, குருஞான சம்பந்த சுவாமிகள் என்ற பெரியார் தருமபுர ஆதீன ஸ்தாபகராகத் திகழ்ந்தார். அந்த நாளிலேயே நம் தமிழ் நாட்டில் இஸ்லாம் மதமும் காணப்பட்டது. மாலிக் காபூர் படையெடுப்பினால் தங்களுக்குக் கிடைத்திருந்த அரசியல் ஆதிக்கத்தின் விளைவுகளையும் ஒருவாறு பயன்படுத்திக்கொண்டு இஸ்லாம் கொஞ்சங் கொஞ்சமாகப் பரவிவந்தது. விஜயநகரப் பேரரசை முஸ்லிம்கள் வீழ்த்திய பின், இஸ்லாம் சமயத்தின் செல்வாக்கு நம் தமிழகத்திலும் அதிகரித்திருக்க வேண்டும். கிறிஸ்தவ சமயமும் தமிழகத்தில் நிலைபெறலாயிற்று. கி. பி. 1570-ம் ஆண்டில் ஆனந்த பரவசமூர்த்தி தருமபுர ஆதீனகர்த்தரானார்: இதற்கு ஏழாண்டுகளுக்குப் பின் 'கிறிஸ்தவ வேதோபதேசம்' என்னும் பெயருடன் ஒரு தமிழ் வசன நூலை ஏசு சங்கப் பாதிரிமார் எழுதி வெளியிட்டனர்.

ஆனந்த பரவசமூர்த்தி அருளாட்சி புரிந்த அக்காலத்திலேயே 'கிறிஸ்தவ வணக்கம்' என்னும் தமிழ்வசன நூலும் அச்சேறிக் கிறிஸ்து சமயத்தைக் கொஞ்சங்கொஞ்சமாகப் பரப்பமுயன்றது. எனவே அந்தக் காலத்திலே தருமை ஆதீனம் சைவத்திற்கு ஒரு நல்லரணாக அமைந் தது தமிழர்களின் நல்லதிர்ஷ்டம்தான்.

கி. பி. 17-ம் நூற்றாண்டின் முற்பகுதியில்தான் ஆங்கிலக் கம்பெனி யார் இப்போது சென்னை நகரமாக விளங்கும் இடத்தில் ஒரு பண்டக சாலையை ஏற்படுத்திக்கொண்டனர். அப்போது ஆங்கிலேயருக்கு வர்த்தக நோக்கம் தவிர வேறு நோக்கம் இல்லையென்றாலும்; அக் காலத்திலே தமிழர்களை மதமாற்றம் செய்வித்துச் சைவ வைணவ சம யங்களை அழித்து நமது கோயில் நாகரிகத்தை ஒழித்துத் தமிழ் நாட்டை யும் கிறிஸ்தவ நாடாக்கிவிடவேண்டுமென்னும் நோக்கம் பாதிரிமார் உள்ளத்தில் உறுதிப்பட்டிருந்தது.

இந்தப்பதினேழாம் நூற்றாண்டிலேதான் ராபர்ட்.டி. நொபிலி என்ற இத்தாலியர் தமிழ் நாட்டில் வாழ்ந்து சில கிறிஸ்தவத் தமிழ் வசன நூல் களை எழுதினார். இவர் 'தத்துவபோதக சுவாமி' என்னும் இந்தியப் பெயர் தாங்கித் தமிழர்களைக் கிறிஸ்தவராக்க முயன்று வந்தார். 'அரு ளானந்த சுவாமி' என்னும் புனைபெயருடன் வேறொரு ஐரோப்பியப் பாதிரியாரும் தமிழ் வசனநூல்கள் எழுதிக் கிறிஸ்துமதத்தைப் பரப்பி வந்தார். இக்காலத்திலே தமிழ் நாகரிகத்தையும் தமிழர் சமயத்தையும்



183180

பாதுகாத்தவர் தருமபுர மடத்தின் நான்காம் குருமூர்த்தியான மாசிலாமணி தேசிகர். இப்பெரியாரால் ஆட்கொள்ளப்பெற்ற குமரகுருபரசுவாமியையும் அவரது தமிழிலக்கியப் பெரும்பணியையும் சமயப்பணியையும் அறியாதார் அறியாதாரே!

குமரகுருபரரின் 'சகலகலாவல்லிமாலை' யைத் தமிழ் மாணுக்கர்களும் அறிந்திருப்பார்கள்.

**"தெளிக்கும் பனுவல் புலவோர் கவிமழை சிந்தக் கண்டு**
**களிக்கும் கலாப மயிலே! சகலகலா வல்லியே!"**

என்ற வாக்கின் அழகைத்தான் என்னென்பது?

குமரகுருபரர் சகலகலாவல்லியை—சகலமொழிகளுக்கும் தாயைச் சிறப்பாக "வட நாற்கடலும், தேக்கும் செழுந்தமிழ்ச் செல்வமும் தொண்டர் செந்நாவினின்று காக்கும் கருணைக்கடலே!" என்று விளிக்கிருர். இவர் திருப்பனந்தாள் காசிமடத்து ஸ்தாபகர். திருப்பனந்தாள் மடமும் தருமை ஆதீனமும் தமிழ்ச் செல்வத்தைச் செழுமையாக்கிக் காக்க முயல்வதுடன், வடமொழி வெறுப்பு ஒரு சிறிதுமின்றி அம்மொழியையும் நம் பொதுமொழியாகப் பாதுகாத்து வந்திருக்கின்றன.

சகலகலாவல்லியாகிய கலைமாமகளைப்போல் கண்கண்ட தெய்வம் உளதோ என்று பாடும் குமரகுருபரர், ஆனந்த நடராஜமூர்த்தியின் தாண்டவத்தை அனுபவித்து அனுபவித்துப் பாடியிருக்கிருர். இந்தப் பாடல்களில் சில தமிழிலக்கியத்தின் சிரஞ்சீவிப் பாடல்கள்! ஆனந்த தாண்டவம் போலவே இத் தாண்டவப் பாடல்களும் என்றும் புது விருந்து!!

ஸ்ரீ காசிமடத்து முதல்வராகிய இக்கவிப் பெருஞ்செல்வருக்கு ஆனந்தக்கூத்தின் அனுபவப்பொருளை உணர்த்தியவர் மாசிலாமணி தேசிகர் என்பதை நினைத்துப் பார்க்கும்போது, தருமபுரம் குமரகுருபரரைத் தமிழகத்திற்கு வழங்கித் தமிழையும் நடராஜபக்தியையும் எவ்வாறு பேணி வளர்த்து அழியாப் புகழை அடைந்திருக்கிறது என்பதை ஊகஞ்செய்து கொள்ளலாம்.

தமிழகத்திற்கு மட்டுமா உரியவர் குமரகுருபரர்? இவர் வட இந்தியாவுக்குச் சென்று ஹிந்தி கற்றுச் சைவசித்தாந்தக் கொள்கைகளைப் பரப்பி வந்தார். ஹிந்தி வாயிலாகக் கம்பராமாயணப் பிரசாரமும் செய்து துளஸிதாஸரின் கவிதைப் பெருமுயற்சியிலும் வித்திட்டு விளைவு செய்தவர் குமரகுருபரர் என்ருல், தமிழுக்கு இம்மடாலயங்கள் ஆற்றியிருக்கும் பணி கொஞ்சமோ?

பதினேழாம் நூற்ருண்டின் முற்பகுதியில் குமரகுருபரர் புகழ் விளைத்தாரென்ருல் அதே நூற்ருண்டின் இடைப்பகுதியில் சிவப்பிரகாச சுவாமிகள் தமிழ்த்தொண்டும் சைவத்தொண்டும் புரிந்தார். இவர் 'ஏசுமத நிராகரண நூல்' இயற்றித் தம் காலத்தில் பரவிவந்த கிறிஸ்து மதத்தைக் கண்டித்தார் என்று சொல்வதுண்டு.

இந்த நூற்ருண்டில் முஸ்லீம்களும் சைவ வைணவ சமயங்களை ஒடுக்கித் தங்கள் கொள்கைகளைப் பரப்ப முயன்றனர். இக்காலத்தில் வாழ்ந்த உமறுப்புலவர் என்ற முஸ்லிம் கவிஞர் தமது 'சீறப்புராண'த்திலே இஸ்லாம் சமய ஸ்தாபகராகிய நபிநாயகத்தின் வரலாற்றைப் பாடியிருக்கிருர். இதே காலத்தில் வாழ்ந்தவர் சீதக்காதி வள்ளல் என்ற ஷைகு அப்துல் காதிறு. இவரது வள்ளன்மை தமிழிலக்கியத்தை

ஆதரித்தபோதிலும் இவர் செல்வாக்கிலும் இஸ்லாம் பரவிவந்தது என்றே ஊகிக்கலாம். கி. பி. 17–ம் நூற்றுண்டின் பிற்பகுதி அவுரங்க சேபு சக்கரவர்த்தியின் காலம் என்பதை நினைவில் வைத்துக்கொண்டாலே, அது நமது சமயத்துக்கும் கலைகளுக்கும் எவ்வளவு ஆபத்தான காலமாக இருந்திருக்கவேண்டுமென்பது புலனுகும். அந்நாளில் வடக்கே இந்து சமயத்தைக் காப்பாற்றியவர்கள் வீர மராட்டியர்; தெற்கே சாதுக்களான தருமை ஆதீனகர்த்தர் போன்ற மடாதிபதிகளே.

பதினெட்டாம் நூற்றுண்டும், நமது தருமத்திற்கும் கலைகளுக்கும் இருள்சூழ்ந்த காலம்தான். இந்நூற்றுண்டிலேதான் பெஸ்கி என்னும்வீர மாமுனிவர் வாழ்ந்து 'தேம்பாவணி'முதலான நூல்கள் செய்து கிறிஸ்து மதத்தைப் பரப்பிவந்தார். இவருக்குத் 'தைரியநாத சுவாமிகள்' என்ற புனைபெயரும் உண்டு. இவருடைய தைரியம் தமிழைப் போற்றிச் சைவத்தையும் இந்து தர்மத்தையும் தூற்றியது. இக்காலத்தில் ஜெர்மன் தேசத்திலிருந்து வந்திருந்த சிலபாதிரிமார்களும் தமிழ் வசன நூல்கள் இயற்றி இந்து தருமத்தையும் கலைகளையும் நாகரிகத்தையும் தாக்கி நாசம் செய்ய முயன்றனர். இதே நூற்றுண்டில் திருவாவடுதுறைஆதீனத்தைச் சார்ந்த ஸ்ரீ மாதவச் சிவஞான சுவாமி இலக்கியத் தொண்டுடன் சைவப் பெருந்தொண்டு ஆற்றுவாராயினர்.

மிகவும் குழப்பமாக இருந்தது அக்கால நாட்டு நிலை. தடி பிடித்தவன் தண்டற்காரன் ஆனுன். இக்குழப்ப நிலையைப் பயன்படுத்திய வண்ணம் ஆங்கிலேயர் ஏகாதிபத்திய வெறிகொண்டு நாட்டின் சுதந்திரத்தை அறவே ஒழிக்க முயன்று வெற்றியும் பெற்றுவிட்டனர். ஐரோப்பியப் பாதிரிமாரும் மதவெறி கொண்டெழுந்து தங்கள் சமய ஏகாதிபத்தியத்தையும் இந்நாட்டில் நாட்டமுயன்றனர். இக் காரிருளில் வடக்கே ராஜா ராமமோகனர் 'பிரமசமயம்'என்னும் கைவிளக்கை ஏற்றிப் பார்த்தார். தெற்கே இராமலிங்கர் என்ற அருட்சோதியும் இருள் போக்க முன்வந்தது. இராமலிங்கருக்கு முன் தாயுமானவரும் ஒருஞான விளக்காக ஒளிர்ந்தார். பொதுவாகத் தருமபுர மடாலயத்தின் பத்துக் குருமூர்த்திகள் காலத்திலே பண்டார சாத்திரங்கள், தோத்திரங்கள் முதலிய சிவானுபவ நூல்கள் தோன்றி ஒளிகாட்டி நெறிகாட்டலாயின.

இப்போது ஆதீனகர்த்தராக வீற்றிருப்பவர் 25-வது குருமூர்த்தியாகிய மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞான சம்பந்த பரமாசரிய சுவாமிகள். இவர் தமது ஆதீனத்தைச் சார்ந்த இருபத்தேழு தேவஸ்தானங்களையும் தக்க முறையில் பரிபாலித்துத் 'திருநெறிய தெய்வத் தமிழ் மாநாடு' முதலான நன்முயற்சிகளால் தேவாலயங்களை உண்மையான அறநிலையங்களாகவும் அறிவு நிலையங்களாகவும் திகழச் செய்து வருகிருர். பொதுவாக இந்து தர்மத்திற்கும் சிறப்பாகச் சைவத்திற்கும் தமிழுக்கும் தக்கமுறையில் பிரசாரம் நடத்தி வருகிருர்.

ஆதீனத்தில் பல்கலைக் கல்லூரி உண்டு; தேவாரபாடசாலையோடு வேதாகம பாடசாலையும் உண்டு. காலத்திற்கிசையப் பலவகையிலும் இவர் ஆற்றிவரும் பணிகள் பெரிதும் பாராட்டத்தக்கவை.

நமது சரித்திரத்தின் இருண்ட பகுதியாகிய நூற்றுண்டுகளில் தருமவிளக்காக ஒளிர்ந்து வந்திருக்கும் இந்த ஆதீனம், இப்போதுள்ள மகாசந்நிதானத்தின் அருளாட்சியில் வாடாமணி விளக்காக மேன்மேலும் ஒளிவீசி இன்றைய நாத்திகக் காரிருளிலும் நல்ல வழிகாட்டும் என்பது என் நம்பிக்கை.

# மேனாட்டுத் தத்துவம்

## சனபனீஸ் (Xenophanes)

ரா. ஸ்ரீ. தேசிகன் M. A.

சென்ற இதழ்த் தொடர்ச்சி

சனபனீஸ்ஸின் காலத்தைத் தக்கபடி நாம் குறிக்க இயலவில்லை. பைத்தகோராஸ்ஸைப்பற்றி இவர் கூறுகின்றார். ஹெராகிளிட்டஸ்ஸோ சனபனீஸ்ஸைப் பற்றிப் பேசுகின்றார். இக்காரணத்தால் இவர் பைத்தகோராஸ், ஹெராகிளிட்டஸ் இவ்விருவர் காலங்களுக்கிடையே தோன்றியிருக்கவேண்டும். இவர் தழைத்த காலம் கி. மு. 540-537 நூற்றாண்டாக இருக்கலாமென்று பர்னட் கருதுகின்றார். பிறப்பிலே ஐயோனியாவைச் சேர்ந்தவர். ஆனால், இத்தாலியா நாட்டின் தென்பாகத்தில் அநேகமாய்த் தம் வாழ்நாள் முழுவதும் கழித்ததாகத் தெரிகின்றது.

இவர் கண்ட தத்துவத்தின் விஷயங்கள் நமக்கு இரண்டு மூலங்கள் வாயிலாகக் கிடைக்கின்றன. இவரெழுதிய நூல்களின் சிதைந்த துண்டுகளைக் காலவெள்ளம் அடித்துக்கொண்டு போகாமல் ஒதுக்கித் தள்ளியிருக்கிறது. மேலும் இவரைப் பற்றிப் பண்டைய நூலாசிரியர்கள் நமக்குச் சில குறிப்புக்களும் தந்திருக்கின்றனர்.

சனபனீஸ்ஸின் நூல்களின் துண்டுகளை முதலில் குறிப்போம்:

(1) மனிதர்களே கண்டு நாணக்கூடிய திருட்டுத்தனம், விபசாரம், ஏமாற்றம் முதலிய தீச்செயல்களைத் தெய்வங்கள் புரிந்ததாக ஹோமரும் ஹெசியட்டும் கூறுகின்றனர்.

(2) மனிதர்கள் தெய்வங்களைக்கூடத் தம்மைப்போலக் கருதுகின்றனர். உடையிலுஞ்சரி, உருவத்திலுஞ்சரி, குரலிலுஞ்சரி--சுருங்கக்கூறுமிடத்து, எல்லாவற்றிலும் மனிதனைத் தெய்வங்கள் ஒக்கின்றன.

(3) எருதுகள், குதிரைகள், சிங்கங்கள்—இவைகளுக்குக் கைகளிருந்து ஓவியங்களைத் தீட்டுவதாயிருந்தால், எருதுகள் தங்களைப்போலவே தெய்வங்களை வரைந்திருக்கும், குதிரைகள் தங்களைப்போலத் தீட்டியிருக்கும், சிங்கங்களோ தங்களைப்போலவே படைத்திருக்கும்!

(4) எத்தியோப்பாவில் இருக்கிற கருநிறமுள்ள ஜனங்கள் கறுப்பாகவும், சப்பை மூக்குகள் உள்ளவைகளாவும் தெய்வங்களைக் கருதுவார்கள். திரேஸ்நாட்டு ஜனங்களோ தெய்வங்களுக்கு நீலக்கண்களும், சிவப்பு மயிரும் இருக்கின்றன என்று எண்ணுகின்றனர்.

(5) முதலிலிருந்தே தெய்வங்கள் மனிதர்களுக்கு எல்லாவற்றையும் காண்பித்துவிடுகிறதில்லை. காலக் கிரமத்தில் அதை மனிதர்கள் கண்டு கொள்ளுகின்றனர்.

(6) தெய்வங்களுக்கும் மனிதர்களுக்கும் மேலான ஒரே தெய்வமுண்டு. அத்தெய்வம் உருவத்திலுஞ்சரி, எண்ணத்திலுஞ்சரி மனிதனைப்போல இல்லை,

(7) அவர் எல்லாவற்றையும் பார்க்கிறார், எல்லாவற்றையும் சிந்திக்கிறார், எல்லாவற்றையுங் கேட்கின்றார்.

(8) தம் சங்கற்பத்தினாலே எல்லாவற்றையும் ஆட்டி வைக்கிறார்.

(9) அவர் சலனமற்றவர்.

(10) மண்ணிலிருந்தும் நீரிலிருந்தும் எல்லாம் உண்டாகின்றன.

இக் குறிப்புக்களிலிருந்து அவர் கண்ட தெய்வத்தின் தன்மை வெளியாகின்றது. முன்பு பல தெய்வங்களை மனிதர்கள் வணங்கி வந்தனர். இவர் ஒரே தெய்வந்தான் உண்டு என்று கூறினார். பண்டைத் தெய்வங்கள் காலத்தில் தோன்றின. இவர் போற்றுந் தெய்வம் காலங் கடந்தது; அழிவற்றது. கால தேசத்தால் மாறாமல் நிற்கின்றது. மனிதர்களைப்போலவே தெய்வங்களுமிருக்கின்றன என்ற கொள்கையை வேரொடு மாய்த்தார். இத்தெய்வம் படைக்கப்படவில்லை. படைக்கப்படுகிறதெல்லாம் அழிவுறுகின்றன. இது அநாதியாயிருந்துகொண்டு எல்லாவற்றையும் தூண்டுகின்றது.

தெய்வசம்பந்தமாய் ஒன்றும் நிச்சயமாய்ச் சொல்லமுடியாது. ஏதாவது மனிதன் ஒன்றைச் சரிவரச் சொன்னாலும் அதுவும் ஓர் ஊகமே தவிர, பிறிதில்லை. எல்லா விஷயங்களிலுஞ் சந்தேகந்தான் இவரைத் தொடர்கின்றது. அறிவுக்கெட்டியவரையில் சொல்லுகிற 'ராஷனிலிஸ்ட்' (Rationalists) குழுவைச் சார்ந்தவரென்று சொல்லலாம் என்று ரசல் அபிப்ராயப்படுகின்றார்.

பகவான் ஒருவர்தான் என்று வாதிக்கத் தொடங்கினால், பகவானுக்கும் இந்த உலகத்திற்கும் என்ன தொடர்பு என்ற சர்ச்சை எழுமன்றோ? பகவான் நித்தியமானால், இந்தப் பிரபஞ்சமும் நித்தியமென்று சொல்லத்தான் வேண்டும். இதுவும் அநாதிதானா? என்ற கேள்விகளை ஸெல்லர் எழுப்புகின்றார். இந்த உலகத்திற்கு அந்தர்யாமியாய் பகவான் இருக்கிறார் என்று சனபனீஸ் அபிப்ராயப் படுகிறதாய்த் தெரிகின்றது. முதல்முதலில் ஏகவாதத்தைத் தொடங்கினவர் சனபனீஸ்தான் என்று அரிஸ்டாடில் கூறுகின்றார். இவர் பிளேட்டோ சொன்னதைத்தான் மீண்டும் மொழிகின்றார். எலியாடிக்கிஸ் (Eleatics) ஏகவாதிகள் என்றும் அந்தக் குழுவு சனபனீஸ்ஸோடோ அல்லது சற்று முன்போ தோன்றியிருக்கவேண்டும் என்றும் பிளேட்டோ கருதுகின்றார்.

'ஒன்றுதான் சத்தியம், பிரபஞ்சம் பொய்,என்று பார்மினிடீஸ் சொல்லுகிறதுபோல இவர் சொல்லவில்லை. இவர் பிரபஞ்சத்தின் நித்தியத்தை ஒப்புக்கொள்ளுகிறார். இந்தப் ப்ரபஞ்சமும் அநாதியாய்ப் பகவானுக்குச் சரீரமாக இருக்கிறது என்றமுடிவுக்கு வந்திருப்பாரோ என்ற சந்தேகம் நம் மனத்தில் பிறக்கின்றது.

கம்பர்ஸ்ஸின் (Comperz) கருத்துக்களும் இங்கே நோக்கத் தருந்தவை.

'தெய்வம் உலகத்தைப் படைக்கவில்லை. அது உலகத்திற்கப் பாலில்லை. எல்லாவற்றையும் ஊடுருவி நிற்கின்றது- இந்தப் ப்ரபஞ்சத்திற்கு அது ஆத்மாவாயிருக்கிறது என்றுசொன்னால் பொருந்துமென்கிருர்.

'ஆர்பிக்கொள்கையர்' அநேக தெய்வங்களின் நிலையை மறுக்கவில்லை. ஹெராகிலிட்டஸ்ஸும் மறுக்கவில்லை. பிளேடோவும் அரிஸ்டாடிலும் ஏகவாதத்தைப்பற்றிப் பேசினலும், இதர தெய்வங்களை மறுப்பதற்கு முன்வரவில்லை. அப்படி மறுப்பது ஒரு பாவ காரியமாகக் கிரேக்கர்கள் கருதினர்கள். அதனல் சனபனீஸ்ஸும் மறுத்திருக்கமாட்டார். பகவான் ஒருவன் என்ற கொள்கைக்கு (Monotheism) மூலபுருஷர் இவரில்லை. பிரபஞ்சமும் பகவானும் ஒன்றே என்ற கொள்கைக்கு(Pantheism) விடிவெள்ளியாகத் திகழ்கின்ருர் என்று முடிக்கின்ருர். பர்னட்டும் இந்த முடிவுக்கு வருகின்ருர். ஆனல் சித், அசித், ஈச்வரன் இந்த மூன்றும் அநாதியாய் உடலும் உயிரும்போலத் திகழ்கின்றன என்று சொன்ன வைணவ சித்தாந்தத்தின் நிழல் சனபனீஸ் கண்ட தத்துவத்தில் அடிக்கின்றது என்று சொல்லலாம்... இப்படியெல்லாம் தம்மைப்பற்றிப் பலவாறு சிந்திக்கிறமனிதர்களைப் பார்த்து, சனபனீஸ் தெய்வப் புன்னகை கொள்ளலாம்.

## ஹெராகிளிட்டஸ் (Heraclitus)

இவர் கி. மு. 504—503—501 இந்த நூற்ருண்டுகளில் பிரபலத்தை அடைந்திருக்கலாம் என்று தோன்றுகிறது. இவர் ஐயோனியாவைச் சார்ந்தாலும், பௌதிகப் பண்பு மரபில் இவர் இருந்ததாகத் தெரியவில்லை. இவர் ஒருபரோட்ச ஞானியாகக் (Mystic) காட்சி அளிக்கின்ருர். இவருடைய வாழ்வைப்பற்றி நமக்கு அநேகமாய் ஒன்றுமே கிடைக்கவில்லை என்று சொல்லி விடலாம். ஏதோ ஒரு பழைய வேந்தர் வம்சத்தில் தோன்றியவர் என்ற விஷயம் மட்டும் நம் பார்வை வட்டத்திற்கு மிதந்து வருகின்றது.

இவர் எழுதிய நூலின் பெயர்கூட நமக்குத் தெரியவில்லை. அது மூன்று பாகங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கலாம். பிரபஞ்சத்தைப் பற்றியும், அரசியலைப்பற்றியும், தெய்வ நிலையைப்பற்றியும் இவர் எழுதியிருக்கக் கூடும்.

இவருடைய நடையில் தெளிவில்லை. எளிதில் விளங்குகிறதில்லை. 'இவர் ஓர் இருளாயிற்றே!' என்ற பெயரையும் இவர் அடைந்துவிட்டார்.

இவர் எழுதிய நூலின் சிதைவுகளைக் குறிப்போம்.

(1) என்னை நீங்கள் பின்பற்ற வேண்டாம். நான் கண்ட உண்மைக்குச் (Word) செவிசாயுங்கள். எல்லாம் ஒன்றே என்று ஒப்புக்கொள்ளுவதே அறிவாகும்.

(2) உண்மை அநாதியாயிருந்தாலும் மனிதர்கள் அதை அறிய முடிகிறதில்லை. தூக்கத்தில் எப்படியோ அப்படியே விழித்த நிலையிலும், தாங்கள் எதைச் செய்கிறோம் என்றதை மனிதர்கள் தெரிந்துகொள்ளுகிறதில்லை.

(3) அறிவிலிகள் கேட்டாலும் அவர்கள் செவிடர்களே. அவர்களைப் பற்றி பழமொழி ஒன்றுண்டு. அவர்கள் இருந்தாலும், இல்லாதது போலவேதான் காட்சி அளிக்கின்றனர்.

(4) பொறிகளின் பாஷையை அறியமுடியாத ஆத்மாவைப் படைத்த மாந்தர்களுக்குக் கண்களும் செவிகளும் சரியான சாட்சிகளல்ல,

(5) மனிதர்களுக்கு விஷயத்தைக் கேட்பதற்கும் தெரிகிறதில்லை; பேசுவதற்கும் தெரிகிறதில்லை.

(6) எதிர்பாராததை நீ எதிர்பார்க்காமற் போனல், அதை நீ அடையமுடியாது.

(7) தங்கத்திற்காகப் பூமியைத் தோண்டுகிறவர்களுக்கு அது கொஞ்சந்தான் கிடைக்கின்றது.

(8) இயற்கை அன்னை மறைப்பதற்கு விரும்புகின்ருள்.

(9) பல விஷயங்களைக் கற்றுக்கொண்டாலும் அறிவு தோன்றுகிறதில்லை.

(10) ஞானம் என்பது இதுதான்: எந்தச் சங்கற்பத்தால் எல்லாம் ஆடுகின்றனவோ, அந்தச் சங்கற்பத்தைத்தெரிந்து கொள்வதே. (எதை அறிந்தால் எல்லாவற்றையும் அறிந்து கொள்ளுகிருனே அதுதான் ஆத்மஞானமென்று நாமும் சொல்லுகிருமன்ருே)

(11) இந்தப் பிரபஞ்சம் எல்லோருக்கும் ஒன்றுதான். இதைத் தெய்வங்களும் படைக்கவில்லை; மனிதர்களும் சிருஷ்டி செய்யவில்லை; இது இருந்தது, இருக்கிறது, இருக்கப் போகின்றது. அழியாத அக்னிதான் அது. அது எரியும்; அவிந்து போகும். மீண்டும் எரியும்; அவிந்துபோகும்.

(12) அக்னி முதலில் கடலாய் மாறுகின்றது. கடலில் பாதி பூமி, மற்ருரு பாதி புயற்காற்று.

(13) அக்னி எல்லாப் பொருளாக ஆகின்றது; எல்லாப் பொருள்களும் அக்னியாக ஆகின்றன. தங்கத்தால் எல்லாப் பொருள்களும் வருகின்றன ; எல்லாப் பொருள்களும் தங்கமாய் மாறுகின்றன.

(14) அக்கினி வறுமையாயுமிருக்கிறது, மிதமிஞ்சிய பொருளாகவுமிருக்கிறது.

(15) அக்னி காற்றிற்குக் கூற்ருயிருக்கிறது; காற்ரே அக்கினிக்குக் கூற்ருயிருக்கிறது. நீரே மண்ணிற்குக் கூற்ரு யிருக்கிறது; மண்ணே நீருக்குக் கூற்ருயிருக்கிறது.

(16) அக்னிதான் எல்லாவற்றிற்கும் நியாயம் வழங்கும்; எல்லாவற்றின் மீது குற்றம் விதிக்கும்.

(17) சூரியன் தன் நெறியை விட்டு அகலான்; அப்படி விலகினல் நியாயத்தின் பணிப்பெண்கள் கண்டுபிடித்துவிடுவார்கள்.

(18) ஒவ்வொரு நாளும் புதியபுதியசூரியன்தோன்றுகின்ருன்.

(19) பகல்இரவு அறியாதஹெரசியட் அநேகமாய் எல்லோருக்கும் குருவாயிருக்கிருர்.

(20) பகல், இரவு, குளிர்காலம் வேனிற்காலம், போர், அமைதி, மிதமிஞ்சிய போகம், பசி எல்லாம் பகவான்தான்: அவர் அநேக உரு எடுக்கின்ருர். அக்கினி எந்தஎந்த வாசனைத் திரவியத்தோடு சேர்கின்றதோ, அந்தஅந்த வாசனையை அது வெளியிடுகின்றது. அதைப்போல ஆண்டவன் இருக்கின்ருர்.

(21) எல்லாம் புகைகளாக மாறினலும், மூக்கு அவைகளை உணர்ந்து விடுமன்ருே!

(22) அதே ஆற்று நீரில் இரண்டாம் அடி ஒருவன் வைக்க முடியாது. ஏனெனில் புது வெள்ளங்கள் வந்து கொண்டே இருக்கின்றன.

(23) மனிதர், தெய்வங்கள்—இவர்கள் மத்தியிலிருந்து சண்டை சச்சரவுகள் மறைந்தால் எத்தனையோ நன்ருயிருக்குமே என்று ஹோமர் சொன்னர். ஹோமர் கூறினது முற்றிலுந் தவறு; சண்டை மறைந்தால், பிரபஞ்சமே போய் விடும்!

(24) எல்லாவற்றிற்கும் தகப்பனும் வேந்தனுமாயிருக்கிறது போராகும்.

(25) சிலரை இது தெய்வங்களாகச் செய்துவிடுகிறது. சிலரை அடிமைகளாக்கிவிடுகிறது; சிலரை விடுதலை செய்து விடுகிறது.

(26) நல்லதும் கெடுதலும் ஒன்றுதான்.

(27) ஆண்டவனுக்கு எல்லாப் பொருளும் அழகாயும், நல்லதாயும், ஒழுங்காயும் காட்சி அளிக்கின்றன; மனிதர்கள்தான் நல்லது கெட்டது என்று சொல்லுகின்றனர்.

(28) போர்தான் எல்லாவற்றிற்கும் பொதுவாயிருக்கிறது. போர்தான் நியாயத்தை அளிக்கும். பொருள்கள் தோன்றுகிறதும் போர் மூலமேதான்.

(29) போரில் மாண்டவர்களைத் தெய்வங்களும் மனிதர்களும் போற்றுகின்றனர்.

(30) சிலர் ரத்தத்தால் மாசடைந்துகொண்டே தங்களைத் தூய்மைப் படுத்துக்கொள்ளுவதாக நினைக்கின்றனர், இது காலிலுள்ள சகதியை அகற்றுவதற்குச் சகதியிலேயே காலை வைப்பதை ஒக்கும். (தொடரும்)

## உதிர்ந்த மலர்கள் — வை. மு. கோ.

- உன்னைப் பார்க்கும்பொழுது உன் உள்ளத்தை அறிய முடியாது. ஆனால் உன் வீட்டையும், உன் மனிதர்களையும், உன் சிநேகிதர்களையும் பார்க்கும்போது கண்ணாடியில் முகம் பார்ப்பதுபோல் அறியலாம்.

- ஆசை—ஆர்வம்—என்பது மனத்தில் உண்டாகும்போது அதை ஒரு விஷயத்தில் தேக்கிச்செப்பனிட்டு வளர்த்தால் உருப்படியான பயனை அடையமுடியும். பலபல விஷயங்களிலும் சிதறவிட்டுவிட்டால் எதுவுமே உருப்படுவதில்லை. ஒரு விஷயத்தில் ஊன்றிநின்று ஸ்திரப்படுத்திக்கொண்டு பிறகு சிலசில இதர விஷயங்களில் செலுத்தினால் நற்பயன் அடையலாம்.

“உள்ளத்தால் உள்ளலும் தீதே பிறன்பொருளைக்
கள்ளத்தால் கள்வே மெனல்” —பொய்யாமொழி

✱ கடன்வாங்கிப்பிழைப்பதும் களவாடிப் பிழைப்பதும் ஒன்றுதான். களவாடிப் பிழைப்பதில், “பல நாளைத் திருடன் ஒரு நாளைக்கு அகப்பட்டுவிடுவான்” என்பது போல் ஆபத்து அவனை எதிர்த்து உறுமிக்கொண்டே காத்திருந்து மென்னியைப் பிடித்துவிடும். இம்மையிலும் சங்கடம் மறுமையிலும் பாபம். எத்தனை ஜென்மமெடுத்தாலும் தொடர்ந்து கொண்டேவரும். கடன் வாங்குவதும் ஏறக்குறைய அதே ரகத்தில்தான் முடிகிறது. திருப்பிக்கொடுக்கச் சக்தியின்மையால், அல்லது பேராசையால் மோசம் செய்யவும், ஏமாற்றவும், வீண் சண்டைக்கு இழுத்து உபத்திரவப்படுத்தவும் தீக்குணம் உண்டாகித் தாமும் மனத்தை பாழாக்கிக்கொண்டு பாவமூட்டைக்குப் பங்குதாரியாவதோடு, பிறரையும் மனம் நோகச்செய்து அவர்கள் இடும் சாபத்திற்கு ஆளாகி அவதிப்பட நேருகிறது! கள்ளனுக்குத் தண்டனை கிடைப்பதுபோல் கடனை மோசம் செய்ததற்காகத் தண்டனையும் பாவமும் இவர்களையும் துரத்தியடிக்கிறது.

“திடங்கொண்ட ராமபாணம் செருக்களத்துற்றபோது கடன்பட்டார்நெஞ்சம்போலக் கலங்கினான் இலங்கை வேந்தன்”...

ஆகையால் வாழ்க்கையில் கூடுமானவரையில் கடன்வாங்காமல் குடும்பத்தை நடத்தப் பழகுவதில் முக்யமாகக் கவனத்தைச் செலுத்தினால் ஆபத்தும் பாபமும் விலகி நிற்கும்.

ராகமாலிகை நாட்டை

1. லகு

பா ஸ்ா ஸ் — ஸ் ஸ்ா ஸ் — பா ப ஸ — ஸ் ஸ் ஸ் ஸ்
பல் லாண்டு — பல்லாண்டு — ப ல் லா — யி ர த் தாண்டு
ப ஸ்ா நி — ப நி ப ம — ம க ப ம — ம க ஸ ஸ
மல் லாண்ட — திண் தோள் — ம ணி வண் — ணா . உன்

2. சுரடி

ம ம ம ம — ம ம ம க — ரி ரி ரி ம — ரி ஸ நி ஸ
அ டி யோ . — மோ . டும் — நின் னோ . — டு ம் பி ரி
ப ப ப ப — ப ம நி த — ம ம ம ம க — ரி ம ரி ஸ
வ டி வா ய் — நி ன் வ ல — மா ர்பி . . . — னி ல் வாழ்
நி ப நி ப — ப நி நி ம — ப நீ த — நி நி ஸ் ஸ்
வ டி வா ர் — சோ . . தி — வ ல த் து — றை . யு ம்
நி நி நி நி — நி நி நி நி — நி த ஸ் ஸ் — ஸ்ா ஸ் ஸ்
படைபோர் — பு க் கு . — மு . ழ ங் — கு ம் . அப்

3. கேதாரம்

ஸ ம க ம — ப நி ப ம — க ம க ரி — ஸ ரி ஸ நி
வா ழா ட் — ப ட் டு — நின் றீ . — ரு ள் ளீ .
ஸ ம க ம — ப நி ஸ நி — ப நி ப ம — க ம க ரி
கூ . ழா ட் — ப ட் டு . — நி ன் றீ ர் — க . ளோ .
ஸ ம க ம — ப ப ப ப — ம ப ஸ் ஸ் — ஸ் ஸ் ஸ் ஸ்
ஏ . ழா ட் — கா . லு ம் — ப ழி . ப் பி — லோம் நா ங்
ஸ் ம மகாரி — ஸ ரி ஸ நி — ப நி ப ம — க ம ப நி
பா ழா . . — ளா க ப் — படைபொரு — தா னு க் குப்

4. நீலாம்பரி

க க க ம — ப ப ப ப — ப ப ப ப — தப மா மா மா
ஏ . . டு — நி ல . த் தி — லிடுவ த ன் — முன் . - ன ம்
க கா ம — ப நி த நி — ப த ப ம — ம ப ம க
கூ . டு — ம ன மு டை — யீ . ர் க ள் — வ ர ம் பொழி
ஸ ஸ ஸ ஸ — ஸ ப ப ப — ம ப ஸ் ஸ் — ஸ் ஸ் ஸ் ஸ்
நா . டு ம் — ந க ர மு ம் — ந ன் . க — றி . ய .
ஸ் ஸ் ஸ் நி — ஸ் ரி ஸ் நி — ப ப ப ம — ப நி த நி
பா . டு — ம ன முடை — ப் ப த் த . — ரு ள் ளீ ர்

# பல்லாண்டு

ஏ. ராஜம்மாள்

தாளம்: ஆதி

| த்ரு | த்ரு |
|---|---|
| நீ ஸ் க — க க க ஸ் | நி ரி ஸ் நி — ப ம க ம ‖ |
| பலகோ . — . . . டி | நா . ரு . — யி . ர ம் ‖ |
| ஸ ஸ ம ம — க ஸ ஸ ஸ | க ம ப ம — ப ப ப ப ‖ |
| சே . வடி — செவ்வி . | திருக்காப் — . . பு . ‖ |
| | |
| ரி ரி ம ம — ப ப ப ம | பஸ் ஸ்நிரிஸ — நி த பா பா ‖ |
| வின்றி . — ஆ . யிரம் | பல்லா . . — ண் . . டு ‖ |
| ரி ரி ம ம — ப ப ப ம | பஸ ஸ்நிரிஸ் — நி த பா பா ‖ |
| இன்ற . — மங்கையும் | பல்லா . . — . . ண் டு ‖ |
| நி நி ஸ் ஸ் — ரி ம ரி ஸ் | நீ நீ ரி ஸ் நி த — நிஸ்நி தபாபா ‖ |
| சு . ட . — ரா ழியும் | பல்லா . . . — ண் . . . டு ‖ |
| நி ஸ் நி த — ம ப நி த | மகரிமகரிஸா — ரி ம ம ப ‖ |
| பாஞ்ச . — சன்னிய | மும் . . . . பல் — லாண்டே . ‖ |
| | |
| ப ப ஸ ஸ — ஸ ம க ரி | க ப ரி க ஸ — ஸ ஸ ஸ ஸ ‖ |
| ரேல் வந்து — மண்ணும் | மணமும் — கொண் . மின் ‖ |
| ரி ரி ஸ ஸ — ஸ ம க ரி | ஸ ரி க ஸ — ஸ ஸ ஸ ஸ ‖ |
| . எங்கள் — குழுவினில் | புகுதலொட் — டோ . . ம் ‖ |
| ஸ் ஸ் ஸ் ரி — க க க ஸ் | ஸ் ரி ஸ் ஸ் — ஸ் ஸ் ஸ் ஸ் ‖ |
| கள் இராக் — க . த ர் | வாழ் இ — லங்கை . ‖ |
| ஸ் ரி ஸ் நி — ஸ நி ப நி ப ம | கமகரிஸாஸரி — . ரி க க ஸ ‖ |
| பல் . லா — . ண்டு . . . | கூ . . . றுது — . மே . . . ‖ |
| | |
| ப ம ப ஸ் — ஸ் ஸ் ஸ் நி | நீ நீ நி ரி ஸ் நி — பமமககாகா ‖ |
| வந்தெங் — கள் கு | ழாம்பு . . . — குந் . . து . ‖ |
| கமபமமபதப — பத நித பம மக | ரி ம ரி ப — பபமகமாமா ‖ |
| வந் . தொல் . . — லை . . . . . . க் | கூ . டு மி — னோ . . . . . . ‖ |
| ஸ் ம க ம — ரி க ரி ம | மகரிககாஸா — ஸ் ஸ் ஸ் ஸ் ‖ |
| ந . மோ . — நா . ரா | ய . ணா ய — வென்று . ‖ |
| ஸ்ரிஸாஸாஸ்நி- ப நி பா பா ப ம | ரி க ரி ப — பபமகமாமா ‖ |
| வந் . . . து . — பல் . லாண்டு | கூ . று மி — னே . . . . . ‖ |

# வாழ்க்கை தீபம்

**வை. மு. கோ.**

"சௌபாக்யவதி லக்ஷ்மிக்கு அனேக மங்களங்கள் உண்டாவதாக! உபயகுசலம்!

ஜெய நாம வருஷம் ஜெயப்ரதமாகப் பிறந்துவிட்டது. சீதாசாரியன் கருணையினால் சகல ஸௌபாக்யங்களுடனும் நமக்கு அருள்புரிய வேண்டுகிறேன். உன்னுடைய புதுவருஷ வாழ்த்துக் கடிதம் கிடைத்தது; மெத்த சந்தோஷம்! என்னுடைய கடிதம் சென்றமுறை வராததுபற்றி நீ மட்டும் குறைபட்டதோடல்லாமல், உன் சினேகிதைகள், உறவினர்களும், "ஏன் உன் மாமி கடிதம் போடவில்லை?" என்று கேட்டதாக எழுதியிருப்பதைக் கண்டு சந்தோஷப்படுகிறேன். பலவித ஜோலிகள் இருந்ததால் போன தடவை என்னால் எழுதமுடியாதுபோய்விட்டது. மன்னிக்கும்படி எல்லோரிடமும் சொல்லு. புத்தாண்டில் புதியபுதிய விஷயங்களை எதிர்பார்ப்பதாக எழுதியிருக்கிறாய். புத்தாண்டின் ஆரம்ப தினத்தன்றே எதிர்பாராத பல புதுமைகளை நீ ரேடியோவின் மூலமும் பத்திரிகைகள் மூலமும் அறிந்திருக்கலாம். இந்தப் புதுமைகளைத் தொடர்ந்து உண்டாகப்போகும் புதுமைகள் நீயே அறியாதது ஏதாவதிருந்தால் எழுதுகிறேன். எனக்குத் தோன்றும் ஒரு விஷயத்தை உனக்கு எழுதுகிறேன்.

அதாவது, புத்தாண்டின் புனிதமான ஜெயப்ரதமான ஜெய வருஷத்தில், உண்டிப் பெட்டிகள் வாங்கு. அதன்மேல், தர்மத்திற்கு—திருப்பதிக்கு—அடுத்த வருஷத்தில் சினேகிதர்கள் உறவினர்கள் கல்யாணங்களில் பரிசளிக்க வேண்டியதற்காகக் கல்யாண உண்டி...என்று தனித்தனி சீட்டுகள் எழுதி ஒட்டிவிடு. மாதாமாதம் உனது எஜமானருக்குச் சம்பளம் வந்தவுடனேயே இருவரும் மனமொத்த ஐக்யபாவத்துடன் சம்பளத்தைப் பகவான் திருவடிகளில் வைத்து நமஸ்கரித்த பிறகு, ஸ்ரீநிவாஸர் உண்டியில் ஒருரூபாய், தர்ம உண்டியில் 2 ரூபாய், கல்யாண பரிசு உண்டியில் 5 ரூபாய் ஆக 8 ரூ. சம்பளத்தில் குறைவாகவந்தது என்று எண்ணிக்கொண்டு தைரியமாய்ப் போட்டுவிடு. 2 ரூபாய் கைச்செலவுக்கு என்று வைத்துக்கொள்ளு. ஆக 10 ரூபாய் குறைவாகவே உன் கணவர் சம்பாதிப்பதாக எண்ணுங்கள்.

கைச்செலவுக்கு 2 ரூபாய் எதற்கென்றால் கோயிலுக்கோ அல்லது வீட்டைவிட்டு வெளியில் எங்குச்சென்றாலும் கைவரண்டு செல்வது கூடாது; கை வரண்டால் மனது வரண்டுவிடும்!......... என்பது எனது அனுபவம். கையில் சில்லரைக் காசு கட்டாயம் இருக்கவேண்டும். நொண்டி, குருடு, முடம் போன்ற பிச்சைக்காரர்களுக்குக் காலணாவாவது போடலாம். கோயிலுக்கு எதிர்பாராமல் திடீரென்று செல்ல நேர்ந்தால் சடக்கென்று ஒரு அணவுக்குப் புஷ்பமோ, பழமோ வாங்கிக்கொண்டு போகலாம். அல்லது தட்டிலாவது சமர்ப்பிக்கலாம். கையை வீசிக்கொண்டு தடிமரம் போல் போவது உசிதமில்லை என்பது பெரியவர்களின் கொள்கை. ப்ரதிதினம் கட்டாயம் போகிறவர்களின் விஷயம் வேறு. என்றைக்கோ போகிறவர்களுக்கு நான் சொல்கிறபடி செய்ய வேண்டும் என்பார்கள் பெரியவர்கள்,

ஆகையால் 10 ரூபாய்க்கு இப்படித் திட்டம் வகுத்துக் கொள்ளு. இதைத் தவிர நீ யார் வீட்டிற்குக் கல்யாணங்களுக்குப் போனாலும் அங்குக் கட்டாயம் பலதானத்தில், ஆரத்தி எடுப்பதில்; கூரை விளையாடல் தட்டு எடுப்பதில்,... தக்ஷிணையில்சில்லரைக் காசு கட்டாயம் கையில் வரும். தவிர சிலர், 'ரவிக்கை வாங்கிக் கொள்ளு' என்று ஒன்றோ, இரண்டோ, ஐந்தோ வைத்துத் தாம்பூலம் கொடுப்பார்கள். இது விஷயத்தில் பரிபூர்ண த்ருப்தி யுடன் மனத்தைத் திடப்படுத்திக்கொண்டு ஒரு தீர்மானமான முடிவுக்கு வரவேண்டும். நமக்கு வேண்டிய ரவிக்கையோ, புடவையோ, பகவான் கொடுப்பார். தீபாவளி, கார்த்திகை, பொங்கல், புதுவருஷம், பிறந்த நாள்......முதலிய நன்னுட்களில் சக்தியானுஸாரம் வாங்கி ஒரு ரவிக்கையாவது தைத்துக்கொள் ளலாம்... நூல் புடவையாவது வாங்கி அந்த நல்ல நாளில் கட்டிக் கொள்ளலாம். ஆகையால் மேல் குறித்த மூலமாக வரும் சில்லரைக் காசுகளை உன்னிஷ்டப்படி இந்தமூன்று உண்டிகளிலும் பணம் சேர்த்துவிடு. முக்யமாய் ஆரத்தி எடுத்த தட்டில் வரும் தக்ஷிணைக் காசை ஸ்ரீநிவாஸர் உண்டியில் சேர்த்துவிட்டு, "ஏழுமலையானே! என்னுயுள்வரையில் இத்தகைய பாக்யத்தைக் கொடுத்துக்கொண்டிருக்கவேண்டும்" என்று ப்ரார்த்தனைசெய்து கொள். இந்த மங்களகரம் நமக்கு உயிரினும் மேலானது. ஆரத்தி எடுப்பதைச் சில பணக்கார வீட்டுப் பெண்டுகள் மிகவும் கேவல மாக எண்ணிப் போவதற்கே வெட்கப்படுகிறார்கள். ஆரத்தி எடுக்கிறவர்களைப் பார்த்துச் சிரிக்கிறார்கள். ஆரத்தித் தட்டில் காசு கிடைக்கும் என்கிற ஆசைக்காகப் போகிறார்கள் என்று சிலர் ஏளனம் செய்து பரிகஸித்துப் பேசுவதை என் காதால் கேட்டிருக்கிறேன். ஆரத்தி எடுக்கக்கூடிய பாக்யமும்மங்களகரமும் பெண்களின் ஆனந்த வாழ்க்கைக்கு எவ்வளவு முக்யமானது, எத்தனை உயர்ந்த தத்துவங்கள் அந்த ஒரு சுபமான காரியத்தில் அடங்கியிருக்கிறது என்பதைச் சில பணக்காரச் செல்வச் செருக்குப் படைத்த சீமாட்டிகள் நினைத்துப் பார்ப்பதே இல்லை.

ஒரு வெள்ளிக்கிழமை லக்ஷ்மி பூஜைசெய்தால் ஒருநெல்லிடை மாங்கல்யம் உயரும்; பல கிழமைகள் செய்தால் மலைபோல் மாங்கல்யம் வளரும்.........என்பார் பெரியவர்கள். அதுபோல ஆரத்தி எடுப்பது என்பதில் தட்டில் விழும் சில்லரைக் காசுக்காக என்று எண்ணுவது மிகமிகக் கேவலமான எண்ணமாகும். ஒரு பெண்மணி சதஸ்ஸில் வந்து மங்களகரமாய்ச் சந்தோஷமாய், ஆரத்தி எடுப்பதற்கு அவளுக்குள்ள ஸௌபாக்ய வாழ்வின் உயர்வை எடுத்துக்காட்டி வளரச்செய்கிற பெருமை உண்டா கிறது. மனத்தில் எந்த விதமான சிறுகுறையும் உண்டாகாமல் பரிபூர்ண சந்தோஷமும் சுபமும் கூடியிருக்கும் பெண்கள்தான் பந்தலில் முன்னால் வந்து கம்பீரமாக நின்று பாடவும் ஆசீர் வதித்து வாழ்த்தவும் ஆரத்தி எடுக்கவும் கல்யாணப் பந்தலில் செய்யக்கூடிய சகல சடங்குகளையும் செய்து மகிழவும் முடியும். இத்தகைய பாக்யம் நமக்கு என்றென்றும் நீடித்துக் கொடுத்து பகவான் ரக்ஷிக்கவேண்டும் என்பதை நாம் மனதார ப்ரார்த்தனை செய்தபடியே இச்சுபகாரியங்களைச் செய்து பேறு பெறவேண்டும்,

ஒரு பெரிய பணக்கார வீட்டுக் கல்யாணத்திற்குப் போயிருந்தேன்; கல்யாணம் என்பது சாமான்ய சடங்கா?... அக்கினி சாட்சியாய் மணந்த தம்பதிகள்...என்று ப்ரமாணம் பறை சாற்றுகிறது. அத்தகைய அக்கினியை இரண்டு சுமங்கலிப் பெண்டுகள்தான் தாம்பாளத்தில் கொண்டுவந்து லக்ஷ்மி கல்யாணம் பாடிச் சேர்க்க வேண்டும். அவர்களுக்குச் சந்தன தாம்பூலம் கொடுத்து வாழ்த்துவார் புரோகிதர். அந்த பாக்யத்தின் பெருமையைப் பணமும் நாகரீகம் என்கிறத் திரையும் சேர்த்து மறைத்துவிடுகிறது. அந்தப் பந்தலில் புரோகிதர்... அக்னியை இரண்டு சுமங்கலிகள் கொண்டு வந்து சேர்க்கவேணும்...என்று ஒரு முறைக்குப் பத்து முறை கூவினர். ஒரு பெண்மணிகூட அசையவே இல்லை! எனக்கோ மனது பதைக்கிறது. அங்குள்ள ஷோக் பேர்வழிகளையும் தடபுடல் சிங்காரங்களையும் பார்த்தால் நாட்டுப்புரத்து அநாகரீகமாய் நான் உட்கார்ந்திருப்பதே சிறிதும்பொருத்தமில்லாதிருந்தது. இந்த லக்ஷணத்தில் நான் என்ன செய்ய முடியும்?

புரோகிதரே உள்ளேபோய்த் தாம்பாளத்தில் அக்கினியைக் கொண்டுவந்துவிட்டார். லக்ஷ்மீ! இந்த சந்தர்ப்பத்தில் இன்னொரு முக்யமான விஷயத்தைக் கட்டாயம் கூறியே தீரவேண்டும். அதாவது, அனேக பணக்காரர்கள் வீடுகளில் வாசலில் ப்ரம்மாண்டமான பந்தலை வெகு தடபுடலாக அமைத்துவிட்டு அதில் தான் ப்ரதானமான மாங்கல்யதாரண முகூர்த்தத்தைச் செய்கிறார்கள். அவர்கள்வீட்டுக்கென்று அமைந்துள்ள புரோகிதர்கள், வைதீகர்கள்கூட பயந்து கொண்டோ, அல்லது பணத்தாசைக்குக் கட்டுப்பட்டோ, விஷயத்தைச் சொல்வதில்லை! தாளம் போட்டுத் தலையாட்டிவிடுகிறார்கள் என்றுதான் தோன்றுகிறது. வீடு பெரியதோ, சிறியதோ, வீட்டின் உள்பாகத்தில்தான் கல்யாணச் சடங்கு(முக்யமாய் அக்கினி சம்பந்தப்பட்டகாரியத்தை) மங்களகரமாக நடத்த வேண்டும். இதுதான் சாஸ்திரம்; சம்பிரதாயம்; சுபம், மங்களம்...எல்லாமாகும். வாசல்படி தாண்டி வீதியில் அக்கினி மூட்டுவது என்பது எவ்வளவு கேவலமான பயங்கரமான—அமங்களகரமான காரியம்!...என்பதை ஒரு சிறிது நினைத்துப் பார்த்தால் வாசலில் அக்கினி மூட்டக் கனவில்கூட சம்மதிக்கமாட்டார்கள்.

நாட்டுப்புரங்களில் முன்பெல்லாம் அடுப்பு மூட்டுவதற்கு அண்டை அயல் வீடுகளில் நெருப்பு வாங்கி வரட்டியில் மூட்டிக் கொண்டு வருவார்கள். அதுகூட வாசல் பக்கத்தால் போக மாட்டார்கள். புழக்கடைப் பக்கமாகத்தான் போவார்களாம். அதைக்கூட சிலர் செய்யமாட்டார்களாம். அப்படி இருக்க வாழ்க்கையின் பாதையை மங்களகரமாக வகுத்துப் புனிதப் பாதையில் தம்பதிகளைச் சேர்த்துவைக்கும் அதிமுக்யமான சடங்கை வாசலில் நெருப்பு வைத்துச் செய்வது மிகமிக மோசமானதாகும். இதைப்பற்றி நான் சில புரோகிதர்களிடம்கூடக் கேட்டுவிட்டேன். இது இந்தக் காலம்...பணக்கார காரியம்...ஏராளமான சிநேகிதர்கள் வரவேணுமாம்'' என்று ஏதோ உளறுகிறார்கள். இது சமாதானமாகுமா? சில பணக்காரர்கள் வீட்டில் முக்யமான கல்யாண முகூர்த்த சடங்கை மட்டும் வீட்டு உள்புறம்

நடத்திவிட்டு மிச்சச் சகலவித சடங்குகளையும் வாசல் பந்தலில் செய்கிறார்கள். அவர்கள் விஷயமறிந்தவர்கள் என்று சந்தோஷப் படுகிறேன். சிநேகிதர்கள் பார்ப்பதற்காக வீதியில் அபசகுனம் போல் அக்கினி மூட்டலாமா? இந்த நல்ல காரியமும் அதன் தத்துவமும் எப்படித் தெரியப்போகிறது?..................என்று நான் வருத்தப்படுவேன்.

அதே போலத்தான் அந்த பங்களாவிலும் நினைத்துக் கொண்டு உட்கார்ந்திருந்தேன். செல்வச் சீமாட்டிகளில் இரண்டு பேர்கள் யோசித்து யோசித்துப் பிறகு தாமே எழுந்துவந்து அக்கினியைச் சேர்த்தார்கள். அதன் பிறகு அரை விநாடியில் முகூர்த்தமாகிவிட்டது. ஆரத்தி எடுக்க யாருமே வரவில்லை. கடைசியில் நானே போய் ஆரத்தி எடுத்தேன். லக்ஷ்மீ! இது விஷயத்தில் நான் பெருமையேயடைகிறேன். அதுபோல் நீயும் பெருமையுடன் மங்களகரமாக ஆரத்திக்கு அழைத்தால் கட்டாயம் போய்ச் செய்து பேறு பெறு. அந்தத் தக்ஷிணை காலணாவானாலும் சரி......ஒத்தை ரூபாயானாலும் சரி, ஸ்ரீநிவாஸர் உண்டியில் போட்டு வேண்டிக் கொள்ளு. அந்த பாக்யம் நமக்குஎன்றென்றும் வேண்டும். ஆகையால் அதற்கு வெட்கப்படாதே.

தவிர, வீட்டுக்கு சாமான்கள் வாங்கிச் சில்லரைக் காசுகள் மிச்சமானால்—முடிந்தால்—மற்ற உண்டிகளில் அவைகளையும் போட்டுவிடு. பழய பேப்பர்கள் விற்கும் காசையும் இவைகளில் சேர்த்துவிடு. இப்படியாக சிறுகச்சிறுகச் சேர்த்துவந்து அடுத்த வருஷப் பிறப்பன்று மூன்று வேறு உண்டிகள் வைத்து விட்டு இவைகளை உடைத்து எண்ணிப்பாரு. தர்மத்திற்கு என்று சேர்த்துள்ளவைகளை, ஏழைச் சிறுவர், சிறுமிகளுக்கு, இலவசச் சம்பளம் கொடு. "எழுத்து அறிவித்தவன் இறைவனாகும்" என்பது முதுரை. அதுபோல் கல்வி விஷயமாய் புத்தகம், பலகை, சம்பளம் ...முதலியவைகளில் சிலவு செய். கல்யாண உண்டியிலுள்ளதை தராதரமறிந்து பரிசுகள் வாங்கித் தம்பதிகளுக்குக் கொடு.வருஷம் ஒரு முறை தாராளமாய்த் திருப்பதிக்குச் சென்று தரிசனம்செய்து இன்புற்று வா! இத்தனைக்கும் சிரமப்படாமல் எடுத்துச் செலவு செய்ய முடியும். இதைவிட்டு எல்லாம் அப்போது பார்க்கலாம்... என்றிருந்தால் நெருக்கடியும், உபத்திரவமும் அதிகமாகிச்சலிப்பும் அலுப்பும் தட்டிவிடும். இந்த மாதிரி விஷயம் பல இடங்களில் நாம் பார்க்கிறோம். இம்மாதிரி ஒரு திட்டம் வகுத்துக்கொண்டு கூடுமான வரையில் செய்தால் முற்றிலும் இல்லை என்றாலும் ஒரு சிறிதாவது அனுகூலம் உண்டாகுமேயன்றி, பலனில்லாது போகாது. முதலில் கஷ்டமாகத் தோன்றும். பிறகு வழக்கமாகி விடும். உன் கணவருக்குச் சம்பளம் உயர்வு உண்டாகிறமாதத்தில் அந்த உயர்வுத் தொகையை மட்டும் அப்படியே உண்டியில் முதல் மாதம் சேர்த்துவிடு; பிறகு வழக்கபடிச் செய்.

உனக்குக் கார்த்திகைக்கு, பொங்கலுக்கு, தீபாவளிக்கு, பிறந்தகத்திலிருந்து வரும் சீர்களை நீ எடுத்துக்கொண்டு கூட வரும் தக்ஷிணைகளை உண்டியில்சேர்த்துவிடு. நான் அப்படித்தான் செய்து வரத் திட்டம் வகுத்துவிட்டேன். மற்றப்படி அடுத்த கடிதத்தில் எழுதுகிறேன்.

உன் "மாமி"

# என் சுய சரிதை

சகோதரி R. S. சுபலக்ஷ்மி அம்மாள்
B. A., L. T., M. L. C.

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

பெரியாறு அணைக்கட்டு எல்லாம் பார்த்துவிட்டு அன்று மாலையே புறப்பட்டு இரவு மதுரை சேர்ந்து ஸ்டேஷனிலேயே மாடியில் 2 அரைகள் வாடகைக்கு எடுத்துக்கொண்டு சௌகரிய மாக இரவில் ஓய்வு எடுத்துக்கொண்டோம்.

மறுநாள் காலை மதுரையில் ஸ்ரீமான் ரங்கஸ்வாமி அய்யர் நடத்திவந்த மீனுட்சி வித்தியாலயத்துக்கு நான் மாத்திரம் போனேன். அந்த சமயம் நமது சாரதா வித்தியாலயத்தில் படித் துத்தேறின உபாத்தினிகள் சிலர் இருந்தார்கள். பாடசாலை காம்பவுண்டுக்குள்ளேயே இருந்த கட்டிடத்தில் அவர்களில் சிலர் வசித்தனர். அவர்கள் அன்று விருந்து தயாரித்து ஸ்ரீமான் ரங்கஸ்வாமி அய்யருக்கும் எனக்கும் விருந்தளித்து உபசரித் தனர். அன்றுமாலை மிஸ் ஜரர்டை அழைத்துப் பாடசாலையில் ஒரு கதம்பக்கொண்டாட்டம் நடத்தினர். அந்த ஊர் கோவில், திருமலை நாயக்கன்மால் எல்லாம் சுற்றிப் பார்த்துவிட்டு மிஸ் ஜரார்டுமாத்திரம் சென்னைக்கு அன்றிரவு ரயிலில் புறப்பட்டுச் சென்றுர். நான் திருச்சியில் இறங்கி என்னிடம் படித்து அந்த ஊரில் டாக்டராயிருந்த ஸ்ரீமதி M. பாலத்தினிடம் ஒருநாள் தங்கி, சாவித்திரி வித்தியாலயம் பார்த்துவிட்டு, தரங்கம்பாடியில், என் சித்திபெண் செல்லத்தைப் பார்த்துவிட்டு, திருவாரூரில் வடபாதி மங்கலம் ஜமீன்தார் பாடசாலையைப் பார்த்துவிட்டு, சேலத்தி லிருந்து கடலூருக்கு மாற்றப்பட்டு, அந்தஊர் கவர்மெண்ட் பாட சாலைத் தலைவியாயிருந்த ஸ்வர்ணத்தினிடம் 4 நாளிருந்துவிட்டு, சென்னை திரும்பினேன். என் சகோதரி பெண் டாக்டர் சாந்தசுந்த ரிக்கு அக்டோபர் 2-ந்தேதி பெண்குழந்தை (சித்ரலேகா) பிறந்த தாக நான் கடலூரிலிருந்தபோது தந்தி வந்தது. நான் சென்னை திரும்பின உடனேயே ஸ்வர்ணத்துக்குக் கடலூரிலிருந்து கண்ண னூருக்கு மாற்றலாகிப் புறப்பட்டுப்போனுள்.

இந்த வருஷத்திலேயே நவம்பர் மாதத்தில் L. T. வகுப்பில் என் பாடமாகிய தாவரநூல் (Natural science) படித்துக்கொண் டிருந்த என் மாணுக்கிகள் சுமார் 10 பேரை அழைத்துக்கொண்டு 5 நாட்கள் உல்லாசப் பிரயாணம் (Excursion) போய் வந்தேன். முதலில் திண்டிவனத்தில் இறங்கி அங்குள்ள கவர்மெண்ட் விவசாயத்தோட்டம், பிறகு செஞ்சிக்குப்போய் 2 மலைகளும் (கிருஷ்ணகிரி, ராஜகிரி) பார்த்தோம். பிறகு தஞ்சைக்குப்போனேம். அங்கு என் தங்கை பெண், டாக்டர் காந்தாமணியும் அவள் கணவர் இஞ்ஜினியர் ஸ்ரீமான் துரைராஜய்யரும் இருந்தனர். அவர்கள் உதவியுடன் திருவையாறு சென்று, காவிரி ஸ்நானம் செய்து, கோவில் தரிசனம், தியாகய்யர் கோவில் தரிசனம் செய் தோம். என்னுடன வந்த மாணுக்கிகளில் சங்கீதத்திறமையுள்ள

ஒருத்தி. அவள் தியாகய்யர் ஸந்நிதியில் உருக்கமாகச் சிறிதுநேரம் பாடினாள்.

அன்று பிற்பகல் புறப்பட்டு ஆடுதுறையிலிறங்கி அங்குள்ள கவர்மெண்ட் விவசாயத்தோட்டம் பார்த்துவிட்டு, வழியில் சிதம்பரத்திலிறங்கி ஸ்ரீ நடராஜர் தரிசனம் செய்துகொண்டு சென்னை திரும்பினோம். நிலக்கடலை கரும்பு, சோளம் இவற்றை வளர்ப்பதில் பலவித பரீக்ஷைகள் (Research experiments) திண்டிவனத்திலும் ஆடுதுறையிலும் நடத்துகின்றார்கள். நிலக்கடலை பூரிப்பாக ஒருபக்கம் வெண்மை ஒருபக்கம் சிவப்புமாக ஆகிறது... கரும்பு புஷ்பத்தில் சோளத்தின் மகரந்தப் பொடியைச் சேர்ப்பதால் உண்டாகும் பலன்கள், நெல்செடிகளைத் தனித்தனியாக நாற்று நடுவதால் ஏற்படும் பலன்கள் இத்தியாதி.

நவம்பர் மாதக்கடைசியில் வழக்கம்போல லேடி வில்லிங்டன் பாடசாலையில் ஒரு வாரத்துக்கு ஸேவை வாரம், (Social Service வாரம்) ராமகிருஷ்ண மடத்துத் தலைவர் ஸ்ரீமான் ஸ்வாமி சாச்வதானந்த மகராஜ் முதல் நாள் வந்து "ஸேவை" என்பதைப் பற்றிப் பேசினார். ஒரு கதம்பக்கொண்டாட்டம், டிராமா, பண்டங்கள் செய்து விற்பனை... எல்லாம் வழக்கம்போல நடந்தன. பிறகு வருஷப் பரீக்ஷைகள் முடிந்து கிறிஸ்துமஸ் விடுமுறை ஆரம்பித்தது. டிஸம்பர் 6-ஆந்தேதி ரங்கூனிலிருந்து என் சகோதரி நித்யா வந்தாள். கண்ணனூரிலிருந்து சென்னை (Hobart) பாடசாலைக்கு மாற்றலாகி ஸ்வர்ணம் வந்து சேர்ந்தாள். என் தங்கை புதல்வன ஜயராமனும் நாகை,கும்பகோணத்துக்குப் பிறகு செங்கல்பட்டுக்கு மாற்றலாகி வந்தான். ஆக, அந்த கிறிஸ்துமஸ் விடுமுறையில் நாங்கள் யாவரும் ஒன்று சேர்ந்து நாளுத்மா கொண்டாட்டம் எங்கள் காலனியில் உயர்ந்த அறிவு முறையில் கொண்டாடினோம்.

## 1940

ஜனவரி 5-ஆந் தேதி என் சகோதரி நித்யா ரங்கூனுக்குப் புறப்பட்டுச் சென்றாள்.

6, 7 இரண்டு நாட்களும் ஸ்ரீமதி (குகப்பிரியை) ஸ்வர்ணமாளும் நானும் காஞ்சி சென்று சோமசுந்தர வித்தியாலயம் பரிசளிப்பு விழாவிலும், அன்னை சாரதாதேவி தினக் கொண்டாட்டத்திலும் தலைமை வகித்துப் பேசி விட்டுத் திரும்பினோம்.

15-ஆந் தேதி டாக்டர் கோமன் நாயர் வந்து என் தகப்பனருக்கு கண் ஆபரேஷன் செய்தார். ஆயினும் குணம் அதிகமில்லை. 20-ஆந் தேதி சாரதா ஐக்கிய சங்கத்தின் 28-ஆவது வருஷ விழா லேடி ராதாகிருஷ்ணன் அவர்கள் தலைமையில் நடந்தது.

பிப்ரவரி மீ சென்னை பிரெஸிடென்ஸி காலேஜ் நூற்றாண்டு விழா மிகச் சிறப்பாக 3, 4, நாட்கள் நடந்தது. எங்கள் குடும்பத்தில் சிலர் காலேஜ் பழைய மாணாக்கர்கள் ஆகவே, விழாவில் நாங்களும் கலந்துகொண்டு, பழைய நாட்களை ஞாபகப்படுத்திக் கொண்டோம். விஜயநகரம் மகாராணி வித்யாவதிதேவி அவர்கள் வித்தியாலயத்துக்கு விஜயம் செய்தார்கள்.

(தொடரும்.)

# காளிதாசர் கனவு

## 3. தேவியின் அருள்: காவ்ய உதயம்

(கே. எஸ். ராமஸ்வாமி சாஸ்திரி)

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

"பிறகு, நானும் அவளும் சாகித்ய சங்கீத நாட்டியக் கடலில் மூழ்கி இன்புற்ரோம். எங்களுடைய சிங்காரம், சிற்றின்பம் இவைகளுக்கு எல்லையேயில்லை. நான் உலக மக்கள் எல்லாரைக் காட்டிலும் இணையில்லாத இன்பநுகர்ச்சியில் ஈடுபட்டு தேவியின் அனுக்ரஹத்தால் சகல சுகபோகங்களையும், சகல சாம்ராஜ்யத்தையும் பெற்றேன்."

அப்பொழுது நான் இடைமறித்து, "குருவே! நீங்கள் கூறுவது வியப்பாக இருக்கிறதே! நீங்கள் திரும்பிவந்ததும் அரசகுமாரிதான் உங்கள் ஞானத்திற்குக் காரணமாயிருந்ததால், அவளைத் தாயாகக் கருதி, அவளுடைய பாதங்களில் விழுந்து வணங்கியதாகவும், அதுமுதல் அவளை மனைவியென்று கருதாமல், அவளை விட்டு நீங்கியிருந்ததாகவும் ஊர் வதந்தி இருக்கிறதே, அது நிஜமா? நீங்கள் சொல்வது..." என்று இழுத்தாப்போல் கேட்டேன். அதற்கு அவர் சிரித்து, "அப்பா! ஆச்சர்யமான வதந்திகள், கதைகள் கிளம்புகின்றன. நம் நாட்டில் துறவறம், பக்தி, யோகம் என்ருல் அசாத்திய ப்ரமை. நான் உனனிடம் சொன்னது உண்மை. நான் ஏன் என் இதயராணியைத் தாயாகக் கருதவேணும்? அவள்தான் எனக்குத் தாய், தந்தை, சிஷ்யன், மந்திரி, தோழன் எல்லாம்.

க்ருஹிணீ ஸசிவ: ஸகீ மித: ப்ரிய சிஷ்யா லலிதே கலாவிதௌ |

**(அவள் என் மனைவி, என் மந்திரி, என் தோழி, மோகன அழகிய கலைகளின் பயிற்சியில் அவள் என் மாணவி)**

(ரகுவம்சம்)

ஆனல் என் துரதிர்ஷ்டம் என் ஆருயிர்க்காதலியை இழந்துவிட்டேன். அதுமுதல் நான் நடைப்பிணமாகத்தான் இருக்கிறேன்." என்று கண்ணீர்விட்டார். பிறகு மறுபடியும் "இணையற்ற ஆனந்தத்தில் தோய்ந்திருந்த அந்த ஒரு வருஷத்தில்தான் முதல் முதலாக 'ருதுஸம்ஹாரம்' என்ற ஆறு ருதுக்களை வர்ணிக்கும் ஒரு இயற்கை வர்ணனைக் காவ்யத்தை எழுதினேன்; அதுதான் நமது பாரத நாட்டில் விளங்கும் ஆறுகாலங்களின் அழகு வர்ணனை. அதில் முக்கியமாக காதலர்கள் கருத்தொருமித்து ஆதரவு பட்டு வாழும் இன்ப நுகர்ச்சியையே, பலமாதிரியாகவும், வெகு விநோதமாகவும் கூற முயற்சித்தேன். நான் ஒரு ஆண்டு காலம் என் சந்திரகலையுடன் கூடி வாழ்ந்த வாழ்க்கைச் சித்திரத்தையே ஒளிவீசும் கவிநயங்கள் மூலமாக வெளியிட்டேன்.

பிறகு அக்கினிமித்திரன் என்ற அரசன் மாளவிகை என்ற அரசகுமாரியைக் காதலித்து மணம் செய்துகொண்டு இனபமடைந்த கதையை நாடக உருவத்தில் அமைத்தேன். அது என்னுடைய நிலையையும், சந்திரகலையின் நிலையையும்தான் குறிப்

பிடுகிறது. இதையெல்லாம் படித்த என்தேவி மட்டற்ற மகிழ்ச்சி அடைந்தாள்.

அதற்குப் பிறகு அவள் கேட்ட ("அஸ்தி கச்சித் வாகர்த்த:") என்ற சொற்றொடரில் முதல் சொல்லான 'அஸ்தி' என்ற சொல்லை வைத்து 'குமாரசம்பவம்' என்ற காவ்யத்தை எழுதினேன். அதில் காதலின்பத்தைப் பெருக்கிக் காட்டும்போது கூட தூய்மை, கற்பு, பக்தி முதலிய அருங்குணங்களைத் தான் வர்ணித்தேன். அது நான் இளமையில், தேவியின் பூர்ண அருளைப் பெற்ற சமயம், புதுமையான கவித்திறனை அடைந்து எழுதிய காவ்யங்களில் ஒன்று. ருதுஸம்ஹாரத்திலும், மாளவிகாக்னிமித்திரத்திலும்கூட, நீ இந்த இளமையின் விளக்கத்தையும், அருள்வாக்கடைந்த ஆனந்தப் பூரிப்பையும், மோகனச் சொல்லணியையும் காணலாம்.

குமாரசம்பவத்தில் தூய்மையான உண்மைக் காதலிலிருந்து தனக்கென வாழாத் தனிவீரன் பிறப்பான் என்ற த்வனியை நீ அறிவாய். அந்தக் காவ்யத்தைக் கேட்டதும் சந்திரகலைக்குமிகுந்த ஆனந்தமும், உற்சாகமும் எற்பட்டது. அவள் கர்ப்பவதியானாள்.

இப்படி எங்கள் வாழ்நாள் இன்பமாகச் சென்று கொண்டிருந்தது. அப்பொழுது ஒருநாள் என் மனதில் ஒரு விசித்திர எண்ணம் தோன்றிற்று. நான் சுமார் ஒரு வருஷகாலம் சந்திரகலையைப் பிரிந்து தேவியின் ஆலயத்தில் தவமிருந்தேனல்லவா? அப்பொழுது என் மனத்தில் எழுந்த எண்ணங்களை, சந்திரகலையைப்பற்றிய நினைவுகளை எல்லாம் ஒரு புதுமையான காவ்யமாக இயற்ற ஆசை உண்டாயிற்று. அதற்கு அவள் கூறிய "அஸ்தி கச்சித் வாகர்த்த:" என்ற கேள்வியில் இரண்டாவது சொல்லை (கச்சித்) எடுத்துக்கொண்டேன்.

அதுவரையில் அமைக்கப்படாத புதுமாதிரியாக, வால்மீகி ராமாயணத்தில் அனுமான் தூதுசென்ற வர்ணனையை மனதில் வைத்துக்கொண்டு, ஒரு சந்தேச காவ்யத்தை இயற்றவேண்டும் என்று தீர்மானித்தேன். நான் அவளைவிட்டுப் பிரிந்தபொழுது கார் காலத்தில் அவள் நினைவினால் ஒருநாள் வருந்திக்கொண்டிருந்தேன். அப்பொழுது ஒரு கருமேகத்தைக் கண்டு அதனிடம் சந்திரகலைக்குத் தூது செல்லும்படி வேண்டினேன். அந்த சம்பவத்தை மனதில் நினைத்து அப்பொழுது எழுந்த கவி கற்பனைகளை ஒரு சிறு காவ்யமாக எழுதினேன்." என்றார்.

இவைகளையெல்லாம் கேட்ட என் மனம் சொல்லமுடியாத பெருமையினால் மகிழ்ச்சியடைந்து பூரித்தது. நான், "ஸ்வாமீ! நீங்கள் வரப்பிரசாதி. உங்கள் நூல்களை எனக்குப் பூர்ணமாக உபதேசம் செய்திருந்தும்கூட, ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா உத்தவருக்கு உபதேசம் செய்ததுபோல நீங்கள் இறுதி உறுதி உபதேசமாக, சுருக்கமானமுறையில், சாரமான சுவை நிரம்பிய உங்களுடைய இன்மொழிகளால், இன்னொருமுறை உங்கள் காவ்ய நாடக ரஸங்களை எனக்கு உபதேசம் செய்யவேணும்," என்று வேண்டினேன். அவரும் அதற்கு இணங்கினார்.

பிறகு அவர் "அப்பா! நீ சொல்லும விஷயம் எனக்கும் பிடித்திருக்கிறது. ஆனால் என் உள்ளுணர்ச்சியில் நீ என் இதயத்தை

உணர்ந்தபடியே இப்பிறப்பில் பிரசுரம் செய்ய இயலாது என்று தோன்றுகின்றது. வெகு காலத்திற்குப் பிறகு அன்னியர் அரசாட்சி பரத நாட்டிற்குவந்தபிறகு நீ பிறந்து அந்தக் கலைத்தொண்டைச் செய்யப்போகிறாய். விக்ரமாதித்யரைப்போன்ற அரசர்கள் அப்போது இருக்கமாட்டார்கள். ஆனால் பொது ஜனங்களே என்னுடைய நூல்களில் ஆர்வங்கொள்வார்கள். நீ என்னுடைய லக்ஷியங்களை உணர்த்தும் என்னுடைய நூல்களைப் படித்து, தேசபக்தி நிறைந்து, தார்மிக வாழ்வு வாழ்ந்து, ஜனநாயகத்தை நிலைநாட்டிப் பரப்பவேணும்.

அப்பொழுது நமது பாரத நாடு ஒன்றுபட்டு, விடுதலையடைந்து, உலகத்திற்கே ஒரு திலகமாக விளங்கும். அதைக் கண்டு ஆனந்தமடையும் பரம பாக்கியம் உனக்குக் கிடைக்கும்.'' என்றார்.

சற்று நேரம் அவர் பேசவில்லை. அவர் மனம் எதைப் பற்றியோ சிந்தித்துக்கொண்டிருந்தது. பிறகு அவர் "இரு, குமாரா! இதோ என்னுடைய சுய சரிதையை முடித்துவிடுகிறேன். கலையின்பத்தில் ஈடுபட்டிருக்கும்போது, என்னுடைய குடும்பத் துயரம் அதில் புகுந்து அதன் அழகைச் சிதைக்கவேண்டாம். நான் சந்திரகலையை வெகு சீக்கிரத்திலேயே பொன்னுலகில் காணப்போவதால், நான் அவளை இழந்த துன்பத்தை விரித்துக் கூற விரும்பவில்லை.

குமாரசம்பவத்தை என் இதயதேவியின் முன்னிலையில் அரங்கேற்றிய பிறகு அவள் கர்ப்பவதியானாள் என்றுகூறினேன் அல்லவா? கலையின் அவதாரமாகவும், ப்ரேமையின் உருவமாகவும் ஒரு மகன் பிறக்கவேண்டுமென்று அவளுக்கு ஆவல்.

புத்ரோத்ஸவே மாத்யதிகஹ ஹர்ஷாத் |

(மகன் பிறந்தால் எந்தத் தாய் மகிழ்ச்சியின் உச்சியை அடையமாட்டாள்!) (தொடரும்)

---

பிறரைத் தாக்கிப் பேசுதல், எழுதுதல், மறைமுகமாய்ச் சாட்டி வம்பளத்தல்......முதலியவைகள் மிகமிக சுலபந்தான். அதில் ஒரு இன்பத்தையும்கூட காண்பதாக நினைப்பு; ஆனால் தன்னைப்பற்றியோ, தான் நடத்தும் தொழிலைப்பற்றியோ, தன் நடத்தையைப்பற்றியோ பிறர் எப்படி நினைப்பார்கள்?.. நினைக்கிறார்கள் ?........" செய்யாதன செய்யோம்; தீக்குறளை சென்றோதோம்" என்பது கோதை தமிழ். தன் முதுகுக்குப் பின்னால் விஷயம் எப்படி உலாவி வருகிறது?...என்பதையும் ஒரு சிறிது நினைத்துப் பார்த்தால் மேல்படி விஷயங்களில் ஜாக்ரதையாகவே நடந்துகொள்ளத் தூண்டும். இதையொட்டித்தான் தன் முதுகு கூன் தனக்குத் தெரியுமா? பின்னுலவும் செய்தி முன்னர் தெரியுமா? என்று பெரியோர் முதுமொழி சொன்னார்கள். பழமொழிகளின் ஆழ்ந்த கருத்தையும் சுருங்கச் சொல்லி விளங்கவைத்தல் என்கிற நுட்பத்தையும் ஒரு சிறிது ஆராய்ந்து பார்த்தால் தன்னைத்தான் அறிந்து கொள்ளும் சக்தியை ஓரளவாவது கொடுக்கும் என்பது உறுதியாகும்.

—வை. மு. கோ.

ஸ்ரீமதி ஜயலக்ஷ்மி ஸ்ரீநிவாசன்

# பணத் திமிரும் ஏழ்மை யுள்ளத் துடிப்பும்!

அன்று ஜட்ஜ் ராஜாராம ஐயரின் குமாரி சௌ. சுகுணாவுக்கு வளைகாப்பு; கமலவிலாஸில் ஒரே வைபவம்.

காலை ஒன்பது மணிக்கு முகூர்த்தம். பங்களாவின் விசாலமான கூடத்தில் புத்தாடை சலசலக்க, வைர நகைகள் டால்வீச, பெண்டுகள் குதூஹலமாக வந்து கூடினர்.

சாவித்திரிப் பாட்டி தனதருமைப் பேத்தியை மணையில் உட்கார்த்தி கௌரீ கலியாணம் பாடவே, கொட்டுமேளமும் ஜமாய்த்தது. பிள்ளைத்தாச்சியின் கையால் பிள்ளையார் பூஜையும், வளையல் பூஜையும் செய்வித்தபின், சுபயோக சுபமுகூர்த்தத்தில் விதவிதமான வர்ணங்களில் அழகழகான கண்ணாடி வளையல்கள் சுகுணாவின் கைகளில் ஏறின. அவைகளுடன்கூடப் போட்டி போட்டுக்கொண்டு அவள் தாயார் அருமையாய் ஓதிவைத்த வைர வளையலும், சாவித்திரிப் பாட்டி பாசத்துடன் ஓதிவைத்த பச்சைக்கல் வளையலும், பொம்பாயிலிருந்து அத்தை அன்புடன் அனுப்பிய நல்முத்து வளையலும் மின்னின. இவை எல்லாவற்றையும்விட மிகமுக்யமான கருகுமணி வளையலும் வேப்பிலை வளையலும் அவைகளின் நடுவே எங்கேயோ மறைந்து கிடந்தன.

வளைகாப்பு முகூர்த்தம் ஆனவுடன், சுகுணாவுக்கு அவள் தாயார் கமலம் புடவை ரவிக்கை ஓதி இட்டு ஆரத்தி எடுத்தபின், சாவித்திரிப் பாட்டி பேத்தியை மங்கள ஸ்னானத்துக்காக அழைத்துச் சென்றாள். அங்கே நிறைந்திருந்த பெண்டுகளையும், குழந்தைகளையும் கமலம் வளை அடுக்கிக் கொள்ளும்படி உபசரித்தாள். அவள் மன்னி சுமித்ரா கணக்குக் குறித்துக் கொள்வதில் முனைந்தாள்.

இத்தனை வைபவத்திலும் கலந்துகொள்ளவேண்டும் என்று குழந்தை சுந்தரிக்கு மாத்திரம் ஆசை இராதா? ஏற்கெனவே தாமரைபோல் அழகாக மலர்ந்துள்ள விழிகளை இன்னும் அகல விழித்து இந்த வைபவத்தையெல்லாம் கவனித்தவண்ணம் ஒருபுறம் ஒதுங்கி நின்றுகொண்டிருந்தாள் சுந்தரி. சத கந்தல் பாவாடையும், மொண்ணை மூக்கும் சொள்ளைக் காதுமாக நிற்கும் எட்டு வயது பாலகி சுந்தரி, அவ்விடம் நிறைந்திருந்த சீபாட்டிகளின் செல்வக் குழந்தைகளின் பார்வைக்கு விசித்திரமானதொரு மிருகம்போல் தோன்றினதில் அதிசயம் ஒன்றும் இல்லை. அவர்கள் ரத்தத்தில் பணச்செருக்கின் பெருமிதம் ஊறிக் கிடக்கையில் அவ்வேழைப் பெண்ணைக் கண்டால் இளக்காரம் தானே. அவளைச் சீண்டுவதும், மிரட்டுவதுமாக இருந்தனர். அவள் பயந்து, ஒதுங்குவதைக் கண்டால் அவர்களுக்கு எக்களிப்பு! அவர்களைச் சொல்வானேன்? அவர்களுடைய தாய்மார்கள்கூடத்தான் அந்த ஏழைச் சிறுமியை அதட்டி, விரட்டி வேடிக்கை பார்த்தார்கள். எல்லோரும் அவளை மிரட்டுவதும், அதட்டுவதுமாக இருந்தார்களே தவிர, ஒருவராவது முன் வந்து அந்தக் குழந்தையின் கைகளிலும் நாலு கண்ணாடி வளையல்களை அடுக்கிவிடும்படிச் சிபார்சு செய்யக் காணோம்,

மற்ற சிறுமிகளின் வளையல்கள் குலுங்கும் கைகளையும், தன் வெறிச்சென்றழுளிக்கைகளேயும் நொடிக்கொருதடவை ஒப்பிட்டுப் பார்த்துக்கொண்டு பெருமூச்செறிந்தாள் சுந்தரி, மென்னியில் துயரம் துருத்திக்கொண்டு வரவே "போய் அம்மாவை ஒரு வார்த்தை கேட்கலாம்" என்று அவள் பூ உள்ளம் தூண்டிற்று. ஆனல் அவள் தாயார்தான் வெடிகார்த்தாலேயிலேயே அவள் வேலைசெய்யும் அந்தப்பங்களாவுக்கு வரக்கூடாதுஎன்று சொல்லி வந்தாளே; இப்பொழுது தான் இங்கே வந்திருப்பது தெரிந்தால் முதுகுத் தோலை உரித்து விடுவாளே. தனக்கு பக்ஷணமும் வேண்டாம், பண்டிகைச் சாப்பாடும்வேண்டாம்; இரண்டு கண்ணாடி வளை போதும்... அதோ, மஞ்சுளாவும், மாலதியும் போட்டுண்டு இருக்காளே, அதுமாதிரி இரண்டே இரண்டு வளை போதும்... அவளெல்லாம் கொள்ளை கொள்ளையான்னு அடுக்கிண்டிருக்கா!... தனக்கு இரண்டுகூட அடுக்கக்கூடாதா என்ன?......அடேயப்பா! பேசப்போனாலே எல்லோரும் புலியாட்டமா சீறி விழராளே!... அதோ அந்தப் பெண்ணையாவது போய்க் கேட்கலாம். அவள் பெயர் என்னவோ கூப்பிட்டாளே? மறந்து போச்சே...உம்!... இப்போ நினைவுவந்துவிட்டது!...மாதுரீ!...இரண்டு விரிசல் வளை தந்தாலும் போதும்!...கேட்டுப் பார்க்கிறேன்.

தயங்கித் தயங்கித் தன்னைச் சமீபித்த சுந்தரியைக் கண்ட மாதுரீ அசங்கியப்பட்டவாறு முகத்தைச் சுளித்துக்கொண்டு வேறுபுறம் திரும்பிக்கொண்டாள்.

சுந்தரி தடுமாறிய குரலில் "எம்மா, எனக்கு இரண்டு விரிசல் வளை தரையா?" என்று சங்கோசத்துடன் கேட்டாள்.

"தூ, ஒதுங்கிப் போடி, உன் பாவாடையும், நீயும்! பார்த்தாலே வயிற்றைக் குமட்டி வாந்தி வருகிறது. வளைசரம் செய்ய நான் ஒடிசல் வளைகளைச் சேர்த்துவச்சிருக்கேன்!...இவளுக்கு வேணுமாம்!...போடிதூர" என்று மாதுரி சுந்தரியை அதட்டிவிரட்டினாள். சுந்தரி தன் ஏழ்மைத் தனத்தை உணர்ந்து அவமானத்தால் குன்றிப் போனாள். மாதுரியின் தகதகவென்று மின்னும் ஜரிகை (Tissue) பாவாடையும் ஜரிகை (Brocade) சட்டையையும், மார்பில் தவழ்ந்த ஐந்து வடம் நல்முத்து மாலையையும் கணப்பொழுது ஆராய்ந்துபார்த்தாள். அந்தப் பூ உள்ளத்தில் திடீர் என்று ஆக்ரோஷக் கனல் புகைந்து குபுகுபுவென வெளியே கிளம்பிற்று.

"நானும் உன்னைப்போல் ஜோக்கான புதுப்பாவாடையும், சட்டையும் முத்துமாலையும் பூட்டிண்டால் பார்க்க அழகாகத்தான் இருப்பேன். ஆனல் நான்தான் ஏழையாச்சே; எனக்குத்தான் ஒடிசல் வளைகூட கிடையாதே. வளைச்செட்டியண்டை சிதறிக்கிடக்கும் வளை ஒடிசல்களைப் பொறுக்குவதற்குப் போனால்கூட அந்த அம்மாமிகள் எல்லாம் திட்டராளே. அதுக்குத்தான்..."மேலே பேசமுடியவில்லை. அழுகை மேலே பீறிக்கொண்டு வந்தது. அதே சமயம் அந்தப்பக்கம் காரியமாக வந்த மாதுரியின் தாயார் சாரதா, "என்னடி இது, மாதுரீ? அந்தத் துக்கிரிகிட்டே என்னடி பேச்சு? உதைத்து ஓட்டு வெளியே; எதையாவது திருடிண்டு தொலையப்போகிறது" என்று தன் பெண்ணை எச்சரித்தாள்.

"இல்லேமா! அவளுக்கு வளேபோட்டுக்கணும்னு ஆசை பாவம்! ரெண்டு விரிசல் வளேயாவது தான்னு குறைக் கெஞ்சு கெஞ்சரு. நான் 'முடியாது,சரம் பண்ணனும்'னுட்டேன்" என்று மாதுரி தாயாருக்குச் சொல்லி அனுப்பினுளே தவிர, அவளுடைய குழந்தையுள்ளம் சுந்தரிக்காக இரங்கிற்று. தன் தாயார் ஏதோ காரியமாக மறுபடியும் உள்ளே சென்றதைக் கண்டு,பரபரவென்று தன் கைகளிலிருந்து இரண்டு ஜதை வளேயல்களேக் கழற்றி சுந்தரியின் கையில் கொடுத்து, "இந்தா, எடுத்துக் கொள். ஓசைப்படாமே போய்விடு; யாராவது பார்க்கப் போரா. இது ஹைதராபாத் வளே. இந்தப் பச்சை வளேயின் பெயர் 'ஐஸ்க்ரீம்' வளே; நன்னு இருக்கோனே?" என்று களிப்புடன் மொழிந்தாள், மாதுரி. தான் ஒரு பெரிய தியாகம் செய்த உணர்ச்சி அவளுக்கு. ஆமாம், அது ஒரு பெரிய தியாகம்தானே. அனுபவசாலிகளான அந்தச் சீமாட்டிகளுக்குச் செய்யத் தோன்ருத நற்காரியத்தை இந்தச் சிறுமி செய்து காட்டவில்லேயா?

சுந்தரிக்கோ ஆனந்தம் பிடிபடவில்லே."நீ எத்தனே நல்லவள் அம்மா! இதுமாதிரிப் பச்சை வளேக்காகத்தான் எங்கம்மாவை ரொம்ப நாளாக நச்சிண்டிருந்தேன். 'அடுத்தமாதம் வாங்கித் தரேன். இப்பொ கையில் காசில்லே. அடுத்தமாதம் வாங்கித் தரேன்னு' ஏச்சுண்டே இருக்கா. இன்னிக்கு உன் தயவாலே கிடைச்சுது" என்று பூரித்துப் போனுள் குழந்தை. அது சமயம் உள்ளே இருந்து திரும்பிவந்த சாரதா "மாதுரீ! இன்னுமா இந்தத் தரித்திரத்துடன் பேசிண்டு நிக்கரே? உனக்கு அடி கேட்கிறதா? மாலதியை அழைச்சிண்டு காரில் சம்மந்தியாத்துக்குப் போய் அவாளேயெல்லாம் கையோடே சாப்பிட அழைச்சுண்டு வா! இலே போட்டாச்சு. இப்பவே வரச்சொன்னுன்னு சொல்லி அழைச்சுண்டு வா." என்று சொல்லிவிட்டு அவசரமாகச் சென்று விட்டாள். மாதுரியும் தாயாரின் கட்டளேயை நிறைவேற்றுவதற்காகச் சென்றுவிட்டாள்.

இங்கே ஏழை சுந்தரிக்கு ஆனந்தமோ ஆனந்தம். மாதுரி ரகசியமாகக் கொடுத்துச்சென்ற கண்ணுடி வளேயல்களே உருட்டி உருட்டிப் பார்த்துப் பரவசமடைந்தாள். அவள் பங்குக்கு அது சொர்க்க சுகம். இனி ஒருகணம் அந்த வீட்டில் தங்கப்படாது. அம்மா தன்னேப் பார்த்துவிட்டால் மகா கஷ்டம். இனி தனக்குத்தான் அங்கே என்ன வேலே?

முதல் நாள், தன் தாயார் தன் யஜமானியம்மாளின் பெண்ணுக்கு மறுநாள் வளேகாப்பு என்று சொன்னதிலிருந்து தானும் வந்து இந்த வைபவத்தைக் கண்டு களிக்கவேண்டும் என்று சுந்தரிக்கு ஆசை. ஆனல், அவள் தாயார் அவளே ஜட்ஜ் வீட்டுக்கு வரக்கூடாது என்று எச்சரித்துத் தடை உத்திரவு போட்டிருந்தாள். ஆதலால்தான ஓசைப்படாமே வீடு சென்றுவிடுவதே மேல் என்று தோன்றிற்று அவளுக்கு. வாசற்புறம் திரும்பி எட்டி அடிவைத்த கால்கள் முன்னுக்குப் போகாமல் சத்தியாக்கிரஹம் செய்தன. உள்ளம் இன்பத்தைச் சுவைக்க ஏங்கிற்று. குழந்தைதானே; ஏழையாகிவிட்டால், ஆசை வற்றிவிடுமா? அனுபவிக்க அதிருஷ்டம்தான் இல்லே. அச்சமயம் அந்தப் பக்கம்

வந்த ஜட்ஜ் மனைவி கமலம் சுந்தரியின் கையில் இருந்த வளையல்களைக் கவனித்துவிட்டாள். சுந்தரிக்கு அவை எங்கே கிடைத்தன என்று அதட்டிக் கேட்டாள்.

பயத்தால் நடுங்கிய சுந்தரி, "மா... து... ரீ... தந்... தாள்" என்று உளறினாள். கமலம், அவள் கையிலிருந்து வெடுக்கென்று வளையல்களைப் பிடுங்கிக்கொண்டு, "மாதுரி கொடுத்தாளாம்! கூசாமல் பொய் சொல்வதைப் பார்! திருட்டுக் கழுதை! மாதுரி வீட்டிலேயே இல்லை. பொய் சொன்னாலும் பொருந்தச்சொல்லவேண்டும்" என்று கடுகடுத்தாள்.

"இல்லை மாமி; அவளே... தான்... கொடுத்தாள். கேட்டுப் பாருங்கோ" என்று தேம்பினாள் குழந்தை.

தமக்கையுடன் கூடவே வந்து நின்ற சாரதா, "திருடி! நானும் காலம்பரமேபிடிச்சுப் பார்க்கிறேன், அக்கா! வளைச் செட்டியின்பக்கத்திலேதான் கேம்ப்(Camp) இந்தப் பெண்ணுக்கு. அதட்டி அதட்டிப் போருமாச்சு, எனக்கு. கையும் களவுமாக அகப்பட்டுக் கொண்டு விழிக்கிறதைப் பார்; சனியன்! யார் இவள்?"

"காமுவின் பெண்தான். அவளுக்கும்தான் எவ்வளவு தடவை சொல்லட்டும்? இந்தச் சனியனை நம்மாத்துக்கு அழைச்சுண்டுவரக் கூடாதுன்னு!...ஏண்டி சனியனே இப்பவே தூலையப் போறையா? இல்லை உங்கம்மாவைக் கூப்பிடட்டுமா?" என்று கமலம் சிறுமியின் கன்னங்களில் பளீர்பளீர் என்று இரண்டு அறைகள் வைத்தாள்.

சாரதா "அக்கா! காமுவை அழைச்சுண்டுவரட்டுமா" என்றாள்.

கமலம் "வேண்டாம், அப்புறம் ஏக ரகளை ஆயிடும். இப்போ சுகுணவை மணையில் உட்கார்த்திப் பூச்சூட்டணுமே," என்று உள்ளே சென்று விட்டாள். பாவம், சுந்தரி தேம்பித் தேம்பி அழுதவண்ணம் அடிபட்ட கன்னங்களைத் தன் குஞ்சுக்கைகளால் பொத்திக்கொண்டு தன் வீட்டைப் பார்க்க நடந்தாள்.

விருந்து வெகு தடபுடல்: வெடியற்காலையிலிருந்து தன் கைத் திறமையனைத்தையும் உபயோகித்துச் சிரத்தையுடன் சமைத்த பஞ்சபக்ஷ்யபரமான்னத்தையும் சமையல்காரி காமு ஓடி ஓடிப் பரிமாறினாள். வந்திருந்த விருந்தாளிகள் எல்லோரும் கொம்மாளம் போட்டுக்கொண்டு சுவைத்துச் சாப்பிட்டனர். வந்திருந்தவர்கள் எழுபத்தைந்து பேர்களுக்குமேல் இருக்கும். ஆனால், காமுவின் அன்றைய ஒத்தாசைக்கு ஒரே ஒரு பரிசாரகப் பையனைத்தான் போட்டிருந்தாள் மகராஜி கமலம். எல்லோரும் சாப்பிட்டாகி விட்டது. அந்தப் பரிசாரகப் பையனையும் உட்கார்த்திப் பரிமாறியாச்சு. பாத்திரங்களை ஒழித்துப் போட்டு, அடுக்குள்ளை அலம்பி சுத்தம் செய்தாள் காமு. அளவுமீறிய உழைப்பால் ரொம்ப களைத்துப்போய் விட்டிருந்ததால் பாவம்! சாப்பாடு வேண்டி இருக்கவில்லை. ஒருபிடி அன்னத்தை மோரில் கரைத்து, சக்கையைப் பிழிந்து எறிந்துவிட்டுக் குடித்ததுடன் சரி; மிஞ்சி இருந்தது ஒரு பிடி புளியஞ்சாதமும், ஒரு கரண்டி கூட்டும்தான். ஜிலேபி, மைசூர்பாகு, தயிர் வடை, வறுவல்...... எல்லாவற்றையும்தான் யஜமானியம்மாள் அப்பவே சாமான் அறையில் கொண்டுபோய் வைத்துப் பூட்டி விட்டாளே! சிரமப்

பட்டு செய்தவளுக்கு ருசிக்குக்கூட ஒரு விள்ளல் கொடுக்கவில்லை. ...ஐயோ!.........அதற்குள்ளாக மணி இரண்டடித்து விட்டதே! அடியம்மா, மத்தியான டிபனுக்கு அடுப்பு மூட்டியாக வேண்டுமே! இந்தப் புளியஞ்சாதத்தையாவது குழந்தைக்குக் கொடுத்துவிட்டு வந்து விடுவோம்...என்று விரும்பிற்று பேதையின் மனம். மறு கணம் 'ஐயோ!...போயும் போயும் பிரமாதமாகப் பண்டிகை சமையல்னு இதையா கொண்டு கொடுப்பது சுந்தரிக்கு?...பாவம் அப்பளாம்னு உசிரு.........ஒண்ணுகூட மிஞ்சலையே!... அடியம்மா, வந்த பெண்டுகளுக்கெல்லாம் வளை அடுக்கின கணக்கே நூறு ரூபாய்க்கு மேல் ஆச்சேன்னு பேசிண்டாளே.

'இந்தா, உன் பெண்ணுக்கு நாலேநாலு வளையல் என்று தர மாட்டாளோ? குழந்தையும்தான் எவ்வளவு நாளாகக் கேட்கிறாள்' என்று பெருமூச்செறிந்தாள் காமு. வளையல் இல்லாமல் வெறுங் கையுடன் வீடு சென்று குழந்தையை ஏமாற்ற அவள் மனம் இணங்கவில்லை. உள்ளம் இவ்வாறு சிந்திக்க, உடல் யந்திரம் போல் உழைப்பில் இறங்கிற்று.

* * * *

அதேசமயம் வீட்டில் 'திருடி, திருடி' என்ற கொடூர மொழிகள் காதில் இடைவிடாமல் ஒலிக்க, பாவம்!.........சுந்தரி, கன்னம் வீங்கிப்போய், ஜுரத்தில் அலற்றிக்கொண்டு படுத்திருப்பதைக் கண்டாளா பேதை காமு? உழைப்புக்காகப் பிறந்த அந்த ஜன்மம் உழைப்பில் ஈடுபட்டது.

பணத்திமிரே உருவெடுத்த அதிர்ஷ்டசாலிகளுக்கு ஏழ்மையின் உள்ளத்துடிப்பு புலப்படுமா?

* * * *

---

சிறுகதை 2. "கதிரவன்"

## காணிக்கையும் கணையாழியும்

"வருஷத்துக்கு ஒருநாள் தீபாவளி வருகிறது..." என்றாள் தங்கம்.

"ஆமாம், அதற்கென்ன? தினம்தினம் தீபாவளி வரவில்லை என்கிறாயா!" என்று சற்று எரிச்சலாகவே கேட்டான் வாஞ்சிநாதன்.

"அதற்கில்லை, நான் சொல்லுவது! நல்ல நாளும் அதுவுமாக, குழந்தைக்காவது துணிமணிகள் வாங்கவேண்டாமா?" என்று தழுதழுத்த குரலில் கேட்டாள் தங்கம்.

குழந்தை என்றதும், வாஞ்சியின் கோபமெல்லாம் பறந்து போய்விட்டது. வெண்ணெயாக உருகிற்று மனம்.

"தங்கம்! நீதான் ஒருவழி சொல்லவேண்டும்" என்றான்.

"இனிமேல் என்னிடம் என்ன இருக்கிறது?"

"இன்னும் ஒன்றை வேண்டுமானால்...விற்கலாம்"



1—6—54
183180

அவன் குறிப்பை அவள் அறிந்தாள். மின்சாரத்தின் பொறி தீண்டியவளைப்போல் பதறிய வண்ணம், "என்ன சொல்லுகிறீர்கள்? மோதிரத்தை விற்பதா?...முடியாது, அதை மாத்திரம் நான் பிரியமாட்டேன்."

"சரி; வேண்டாம்."

அவள் விடுவிடு வென்று உள்ளே போய்விட்டாள். திரும்பவும் வந்தபோது, அவன் உத்தியோக வேட்டையாடுவதற்கென்று பிரத்தியேகப்படுத்தியிருந்த கோட்டையும், கம்பளி கிஜாரையும் எடுத்து மூட்டை கட்டிக்கொண்டிருந்தான்.

"அதை என்ன செய்யப்போகிறீர்கள்?"

"விற்கப்போகிறேன்"

"விற்றுவிட்டால் நாளை நாலு ஆபீஸ் ஏறி இறங்கி, வேலை கேட்க, எதை உடுத்திக்கொண்டு போவீர்களாம்?"

"இனி, ஏறி இறங்க இந்தச் சென்னைமா நகரத்தில் எந்த ஆபீஸ் பாக்கி இருக்கிறது? இவை இனி எனக்குத் தேவையில்லை என்று தோன்றுகிறது. நாளைப்பொழுதை நினைத்துக் கொண்டிருந்தால், இன்று குழந்தை மனம் ஒடிந்துவிடும்"

"வேண்டாம்; இதை விற்கவேண்டாம்"

"விற்காவிட்டால்?"

குபீரென்று கண்களில் நீர்மல்க, அவள் பல்லைக்கடித்துக் கொண்டு விரலிலிருந்த கணையாழியை உருகி எடுத்து அவனிடம் தந்தாள். கொண்டுபோங்கள்; கொண்டுபோய் காசாக்கி வாருங்கள், ஆண்டவன்விட்டவழிப்படி ஆகட்டும்" என்றாள்.

நடுங்கும் கரங்களால் அதைப் பெற்றுக்கொண்டு, அக் கணையாழியுடன் வீட்டைவிட்டு வெளியேறினான் வாஞ்சி.

* * *

ஆறு வருஷங்களுக்கு முன்பு அவர்கள் வாழ்க்கைப் படகு சென்னையில் மிதக்க ஆரம்பித்தது. அந்த வருஷம்தான் அவன்காலேஜைமுடித்துவிட்டுக்கற்றபயனை எய்த, சென்னை வந்து வேலை ஏற்றான். வெகு தூரத்தில் பட்டணத்தில் வேலையாக இருக்கிறான் என்ற காந்த சக்தி, பெண்ணைப் பெற்றவர்களை இரும்பாகப் பற்றி இழுத்து அவன் பெற்றோரிடம் கொண்டுவந்து தள்ளிற்று. அவர்களோ இரும்பை ஒதுக்கி விட்டுத் தங்கம் இருக்கிற இடமாகப் பார்த்து அவன் திருமணத்தை நிச்சயித்தனர்.

அன்று சென்னையில் தமிழன் என்ற பெயருக்கே தனி உயர்வு இருந்தது. வேலை செய்யும் காரியாலயங்களில், சலியா உழைப்பு என்ற கொம்பின்மீது, நன்னடத்தைக் கயிற்றைக் கட்டி, அவர்கள் மதிப்புக்கொடியைப் பறக்கவிட்டிருந்தார்கள். அத்தகைய பெருமையை அடைந்தவர்களுள் ஒருவனாக இருக்கும் பாக்கியம் கிட்டியதால்தான் போலும், வாஞ்சியின்

கல்யாணச் செய்தி, காரியாலயத்திலே ஒருவித கலகலப்பை உண்டாக்கிற்று. அக் கலகலப்பின் விளைவாகப் பிறந்ததுதான் இம்மோதிரம். ஆம்; காரியாலய நண்பர்களின் திருமணப் பரிசு இது. ஆச்சரியத்தில் ஆழ்த்த வேண்டுமென்று, அவன் அறியாமல் செய்த கணையாழி, துரதிருஷ்டவசமாக அளவில் சிறுத்துவிட்டது. இதை அறிந்தபோது, பாவம்! அந்த நண்பர்கள் அடைந்த ஏமாற்றத்தைத் தவிர்க்க அவன், "பரவாயில்லை; என் விரலுக்குச் சிறிதாகிவிட்டாலும், வரப்போகும் மனைவியின் விரலுக்கு இது தரமாகத்தான் இருக்கும். மணமான தினத்திலிருந்து நானும் அவளும் ஒன்றே ஆதலின் உங்கள் அன்பின் அடையாளம் என் விரலில் இருந்தாலென்ன? அவள் விரலில் இருந்தாலென்ன?" என்று சொன்னான்.

ஆனால், முதல் நாள் இரவு அவன் அக் கணையாழியை தங்கத்தின் விரலில் இட்டபோது அதை அவள், அவன் நண்பர்களின் காணிக்கையாக ஏற்றுக்கொள்ள மறுத்தாள்.

"உங்களுக்கு அன்பளிப்பாக அவர்கள் கொடுத்தார்கள்; எனக்கு நீங்கள் கொடுக்கிறீர்கள். எனவே, இது உங்கள் அன்பின் சின்னம்! காலையில் என் கழுத்தில் பூட்டிய மாங்கல்யத்தை எவ்வாறு பாதுகாப்பேனோ, அவ்வாறு இதையும் பாதுகாப்பேன்" என்றாள்.

அன்று சொன்ன வார்த்தையை அவள் இன்றளவும் காப்பாற்றி வந்தாள். என்ன வந்தாலும் அதைப் பிரிவதில்லை என்பது அவள் பூண்டிருந்த விரதம்! இரண்டொரு தடவை அதைச் சற்றுப் பெரிதாக்க நேர்ந்தபோதுகூட, தானே தட்டானிடம்போய், அங்கேயே இருந்து, பெரிதாக்கி மாட்டிக்கொண்டுதான் வீட்டுக்கு வந்தாள். இன்னொரு சமயம், அதை அணிந்திருந்த விரலில் காய் கறி அறுக்கும்பொழுது காயம் ஏற்பட்டு ஏகமாக வீங்கிவிட்டது. ரத்த ஓட்டத்திற்கு வழியின்றி விரலை அமுக்கி வேதனையைப் பெருக்கியபோதும் அவள் அதைக் கழற்ற மறுத்துவிட்டாள்.

"இது என்ன பிடிவாதம், தங்கம்? பைத்தியக்காரக் கொள்கைகளுக்கும் ஒரு அளவு இல்லையா?" என்று வாஞ்சி கேட்டபொழுது, அவள், "நீங்கள் என்ன வேண்டுமானாலும் சொல்லுங்கள்; இதைமட்டும் கழற்றமாட்டேன்! மாங்கல்யம் நமது இல்லற இணைப்பின் அத்தாட்சிப்பத்திரம்; இந்தக் கணையாழி நம் அன்புப் பிணைப்பின் அழியாச் சின்னம்! நம்முடைய அன்பைப் பிரதிஷ்டை செய்து அணிந்துகொண்டிருக்கும் இதை என் விரலினின்று அகற்றினால் அந்த அன்பு என்னைவிட்டு அகன்றுவிட்டது போன்ற தோற்றம் ஏற்பட்டுவிடும். இந்த வேதனையை நான் பொறுத்துக்கொள்வேன்; அந்த வேதனையை என்னால் கணங்கூட பொறுக்கமுடியாது" என்று சொன்னாள்.

அப்படிப்பட்ட மோதிரத்தை, வறுமை காரணமாக இன்று அவளைக் கழற்றச் செய்ய நேர்ந்ததென்றால், அது அவளுக்கு அழுகையையும், அவனுக்கு மன வேதனையையும் அளிக்காமல் என்ன செய்யும்!

காலச் சுழற்சியின் சக்ரவ்யூகத்துடன் விதிச் சக்ரமும் சுழற்றப்பட்டு, தாழ்ந்த நிலையை எய்தியிருந்த சமயத்தில்தான் நண்பர் ஒருவர் கூறிய ஆலோசனைப்படி, சேவகா விருத்தியைவிட்டு, வியாபாரத்துறையில் இறங்கினான் வாஞ்சி. கையிலிருந்த பணத்தை முதல் செய்து சிறு அளவில் வியாபாரத்தை ஆரம்பித்தான்.

வியாபாரத்தை ஆரம்பித்தபோது அவன் மனசில் தோன்றிய கற்பனைகள் குளுமையானதாகவே இருந்தன. ஆனால், அனுபவத்தில் கடுங்கோடையைத்தான் எதிர்கொள்ள வேண்டியிருந்தது. யார், யார் அவன் வியாபாரத்தைக் கைகொடுத்துத் தூக்கிவிடுவார்கள் என்று எதிர்பார்த்தானோ, அவர்கள் எல்லோரும் அவனைக் கையைப்பிடித்துக் குப்புறத் தள்ளிவிட்டனர். மூன்றே மாசத்தில் கையிலுள்ள காசைக் கடனாக எட்டில் ஏற்றிவிட்டு, அவன் வியாபாரம் படுத்து விட்டது. எட்டுப் பணம் சோறுபோடுமா? எனவே வயிற்றை நிரப்பத் தங்கத்தின் தங்கங்களுக்குத் தலைவலி பிடித்தது!

நிலைமை நாளுக்கு நாள் மோசமாக ஆரம்பித்ததும் தங்கமும் அவனும் ஒரு தீர்மானம் செய்துகொண்டனர். 'நம் குறை நம்முடனேயே நிற்கட்டும். உலகமறியாத பச்சைக் குழந்தையிடம் அதைப் பாவச்செய்யவேண்டாம். அப்பா திணறுகிறார்... அம்மா கதறுகிறாள்... என்கிற விஷயம் அந்தப் பிஞ்சு மனத்தை வெம்பச்செய்துவிடும். ஆகவே, எதை விற்றாவது, எங்கே கடன்பட்டாவது அவனை அன்றிருந்த நிலைக்கு அழிவின்றி வைத்திருக்கவேண்டும்' என்பதே அத்தீர்மானம். அது செயலாக ஆரம்பித்ததிலிருந்துதான் தங்கத்தின் தங்கங்கள் தங்கி நிற்க முடியவில்லை.

துடிக்கும் நெஞ்சத்தோடு கடிகாரத்தைப் பார்த்தாள்: அது தன் இதய ஒலியை ஆறுமுறை பரப்பிவிட்ட அமைதியில் 'டக்டக்'கென்று சுருதி சேர்த்துக்கொண்டிருந்தது.

* * * *

கணையாழியை விற்றுக் காசாக்கிவரச் சென்ற கணவன் வாசற் கதவைத் தட்டும் சத்தங்கேட்டு, கதவைத் திறந்தாள்; உள்ளே வந்த கணவனது முகமலர்ச்சியைக் கண்டு அவள் உள்ளம் மலர்ந்தது.

ஆவலுடன், "என்ன ஆயிற்று? ஏன் இவ்வளவு நேரம்?" என்று வினவினாள்.

"இந்தா உன் மோதிரம்!" என்று கணையாழியை அவளிடம் கொடுத்தான்.

"ஏன்...இதை விற்கவில்லை?"

"இல்லை..."

"அப்படியானல், தீபாவளிக்குக் குழந்தைக்கு என்ன சொல்லுவது?"

"இந்தா இதைக்கொண்டு தீபாவளியை நடத்திவை" என்று தன் சட்டைப்பையிலிருந்த பர்ஸை அவளிடம் கொடுத்தான். அத்துடன் ஒரு கடிதமும் இருந்ததைக்கண்டு தங்கம் ஆச்சரியத்துடன் அதைப் பிரித்தாள். அக்கடிதம் கிராமத்திலிருந்த வாஞ்சிநாதனின் கூடப்பிறந்த தங்கையிடமிருந்து வந்திருந்தது.

"அன்புள்ள அண்ணு அவர்களுக்கு,

இங்கே யாவரும் நலம். நலம் அறிய நாட்டம்.

இவர் இந்த வருஷம் தீபாவளிக்குக்கூட அங்கே வர வேண்டுமென்று சொல்லிக்கொண்டிருக்கிறுர். 'கல்யாணமாகி நான்கு வருஷமாகிறது. இன்னுமா நமக்கு அங்கே தீபாவளி!' என்று நான் எவ்வளவோ சொல்லிப்பார்த்தேன்; கேட்கவில்லை. உங்களுடைய கஷ்டம் எனக்குத் தெரியும்; அவருக்கு என்ன தெரியும்?...'எனக்கு உடம்பு சரியாக இல்லை. எங்கேயாவது வெளியேபோய் நாலு நாளாவது தங்கவேண்டும் போலிருக்கிறது' என்று சொல்லுகிறுர். என்னுல் அதைத் தட்டிப்பேச முடியவில்லை. அப்படித் தட்டிப்பேசினுலும், 'உன் பிறந்தகத்து லக்ஷணம் இவ்வளவுதானு!' என்று ஏசிக்காட்ட ஆரம்பித்துவிடுவார். நான் என்ன செய்வது அண்ணு? நாங்கள் வந்தால் உனக்குத் துணிமணிகள், பண்டிகைச் செலவு எல்லாம் அதிகரிக்கும். ஆகவே, வீட்டுச் செலவுக்கு அவர் கொடுக்கிற பணத்தில் நான், மிச்சம் பிடித்து நூறு ரூபாய் வரையில் சேர்த்துவைத்திருந்தேன். அந்தப் பணம்தான் இப்பொழுது உங்களுக்கு அனுப்பியிருப்பது. உங்கள் அருமைத் தங்கையின் இச்சிறு உதவியை ஏற்றுக் கொள்வீர்கள் என்று நம்புகிறேன். மற்றவை நேரில்.

உமதன்புள்ள தங்கை,

செல்லம்."

கடிதத்தைப் படித்து முடித்த தங்கம், "பார்த்தீர்களா, நான் இந்த மோதிரத்தைப் பிரிவது தெய்வத்துக்குக் கூடச் சம்மதமில்லை. அதனுல்தான் இதை என்னிடமே திருப்பிய தோடு நம்முடைய மானமும் தக்கியது!" என்று உள்ளத்து உவகையை உள்ளபடி எடுத்துரைத்தாள்.

# "அட ராகவா!"

அடுத்த வீட்டிற்கு ராமு குடிவந்த நாள்முதல் கோபாலுக்கு அவன் மீது கண்பட்டுவிட்டது. அவனுடைய அழகில் மயங்கினன். அந்தஸ்தைக் கண்டு ப்ரமித்தான். ஆசார சில ஒழுக்கங்களைக் கண்டு ஆச்சரியமடைந்தான். உத்யோகத் தட புடலைக்கண்டு பூரித்தான். ஒருநாளைக்கு குறைந்தது 100 முறைகள் ராமுவைப் பார்த்தாலும் அவனுடைய குரலின் இனிமையைக் கேட்டாலும் அவனுள்ளம் அடையும் பேரின்பம் சொல்லி முடியாது. வாசலில் கார் வந்துநிற்கும்போதெல்லாம் வாசலுக்கு ஓடுவான். எங்குக் குரல் கேட்டாலும் காதை நீட்டுவான். அவனுக்கு எப்படியாவது ராமுவை வலுவில் சிநேகம் செய்து கொள்ளவேண்டுமென்றும் தனது மூத்தமகள் ஜானகியை மணம் முடித்து விடுவதென்றும், ஆசை துடித்தது. சமயம் பார்த்துக் கொண்டே இருந்தான்.

தானே ஆச்சரியப்பட்டுப் பூரிக்கும்படி ராமுவே திடுதிடுப் பென்று அவன் வீட்டிற்கு ஒருதினம் வந்து நின்றபோது அடைந்த ஆனந்தம் உவமைவைத்தே கூற முடியாது பொங்கியது. சாக்ஷாத் கடவுளே நேரில் வந்திருந்தால்கூட இத்தனை ஆனந் தத்தை அடையமுடியாது. "வாருங்கள்!! வாருங்கள்!" என்று தடபுடல் உபசாரம் செய்து ப்ரமாதமாய் வரவேற்றுன். வந்தவர் ஒரு கடிதத்தை இவனிடம் கொடுத்துவிட்டுப் புன்முறுவல் செய்தார். அந்தப் புன்முறுவலின் அழகு புருஷனுகிய அவனுக்கே மயக்கத்தை உண்டாக்கிவிட்டதென்ருல் பெண்கள் பார்த்தால்?...

கடிதத்தை முதலில் படித்தான். தான் ஏதோ ஒரு அனுதை நிலையம் ஸ்தாபிக்கப்போவதாயும், அதற்கு நிதி உதவ வேண்டு மென்றும் கடிதத்தில் எழுதி இருந்தது கண்டு பேரானந்த மடைந்தான்... வரதக்ஷிணைக்குப் பதில் ஒரு 5000 ரூபாயை இப்படி தர்ம காரியத்திற்குக் கொடுத்துவிட்டால் போகிறது...என்றுகூட தீர்மானித்துவிட்டான். அவனுக்குக் கல்யாணமாகவில்லை என்று மட்டும் தெரியும் அதனுல் அளப்பரிய சந்தோஷத்துடன்...... "இத்தனை சின்னவயதில் இத்தகைய தர்மசிந்தையும் பக்தியும் உண்டாகி இருப்பது அதிசயத்திலும் அதிசயம்! என்ன உபயோக மான தர்ம காரியம்!...என்று வர்ணித்தான். இதைக்கேட்ட ராமு, ஜேபியிலிருந்து ஒரு புனல்போன்ற குழாயை எடுத்தான்; காதில் வைத்துக்கொண்டு, "ஸார்! இதன்மூலம் பேசுங்கள். காது சொல்ப மந்தம்; என்ன செய்வது? வெங்காய வெடி செய்த வயிற் றெரிச்சலிது!" என்ருன்; அவ்வளவுதான்!.........கோபாலுவின் ஆசைக்கயிறு டபார் என்று அறுந்துவிட்டதால் சப்தநாடியும் ஒடுங்கிப்போய் நாற்காலியுடன் 'நாற்காலியாய்ச் சமைந்துபோய், "ஐயையோ! டப்பான் துரையா??" என்று வாய் முணுமுணுத்தது.

# வாழ்க்கையில் ஒரு சம்பவம்

ஸ்ரீ. வை. மு. கோ.வின் நாவல் நூற்றுப்பத்தில் பாதிக்குமேல் நான் படித்துப் பூரித்திருக்கிறேன். இத்தகைய கற்பனைகள் எப்படித்தான் ஊற்றுப்போல் சுரக்கிறதோ என்று ப்ரமிக்கிறேன். தத்ரூப வாழ்க்கையைச் சித்திரிப்பதில் தனது கற்பனையின் மகிமை போதாமல் வாழ்க்கைக் குறிப்புகளைச் சில மாதமாக வெளியிடுவதை நான் மிகமிக ரஸிக்கிறேன். அதன் பலன் எனக்கும் எழுதவேணும் என்று ஆசை பிறந்தது; எழுதுகிறேன்.

எனது சிறிய பிராயத்தில் என் அத்தை என்னை அழைத்துப் போயிருந்தாள். என் அத்தையின் கணவர் டாக்ட்டர். எனக்குப் புதிய ஊரில் பொழுதுபோகாமல் திண்டாடுவேன். அத்திம்பேரிடம் வரும் நோயாளிகளை நான் பார்ப்பதில் மிகவும் விருப்பங் கொண்டு அங்கேயே அசடுவழிய நிற்பேன். அவர்கள் "அப்பா! அம்மா!" என்று அலற்றுவதைப் பார்க்கும்போது எனக்கு ஏதோ மாதிரி இருக்கும். இதைப் பார்க்காமலும் இருக்கமாட்டேன். சில வருஷங்கழித்து எனக்கு விவாகமாகியது. எனக்கு ஒரு டாக்ட்டரே கணவராக வந்தார். நான் அப்போது அடைந்த சந்தோஷம் எல்லை இல்லை. நான் குடும்பத்துக்கு வந்ததும் என் கணவர் சில வருஷங்களில் நல்ல கைராசி டாக்ட்டராகி விட்டார். அதன் பிறகு அவரை ஒரு க்ஷணமும் வீட்டிலிருக்க விடாமல் சதா அழைத்துப் போவதைக் கண்டு கோபமும் அழுகையுமாய் வந்தது. வீட்டிலேயே டிஸ்பென்ஸரி வேறு நோயாளிகள் தொல்லை சகிக்கமுடியவில்லை..........ஆதியில் அத்திம்பேர் டிஸ்பென்ஸரியில் வேடிக்கைப் பார்த்த நானா இப்படியாகிவிட்டேன... என்று எனக்கு நானே வியந்து போவேன். என் வீட்டிலோ, சொந்தக்காரர்களின் வீட்டிலோ நாள்கிழமைகளுக்கு வரவே முடியாது, சதா...வைத்தியம்...வைத்தியம...என்று ப்ராணனை விடும்போது, எனக்கு எங்குமில்லாத எரிச்சலாக வந்து அழுகையாக மாறும்.

ஒருதினம் அவர்வந்து "அபாடா!" என்று இரவு படுக்கையில் படுக்கும்போது மணி 11 ஆகிவிட்டது. 12 மணி சுமாருக்கு ஒரு பெருங்கூட்டம் வாசலில் வந்து "டாக்ட்டர்! டாக்ட்டர்!" என்று கத்தியதும், நான் அதிக கோபத்துடன் எழுந்துபோய், "டாக்ட்டருக்கு வரமுடியாது இப்போதுதான் தூங்குகிறார். அவருக்கு உடம்பு சரியில்லை" என்று துணிந்து சொன்னேன். அவர்கள் அழுததும் துடித்ததும், ஏனோ...முதலில் என் கல் நெஞ்சுக்கும் படவே இல்லை. அவரால் வரமுடியாது வேறு டாக்ட்டரிடம் பாருங்கள்" என்று சொல்லிவிட்டு உள்ளே போகத் திரும்பினேன்.

என்ன ஆச்சரியம்! எப்படியோ இந்த சத்தத்தைக் கேட்டு அவர் எழுந்து வந்து, "யாரப்பா அது? இப்படி வாருங்கள்" என்று கூப்பிட்டதைக் கேட்டு நடுநடுங்கி விட்டேன். வந்தவர்களுக்கு வைத்யம் செய்து அனுப்பிவிட்டு என்னைக் கண்டபடி

திட்டி இனி உன் உறவே எனக்குத் தேவை இல்லை. மனதில் ஈவிரக்கம் பச்சாத்தாபம் இல்லாத வரண்ட கட்டை எனக்கு வேண்டாம்: போய்விடு உன் தாய் வீட்டிற்கு'' என்று கண்டிப்பாய்க் கூறிவிட்டார். புத்தியில்லாமல் நான் செய்துவிட்ட காரியத்தின் பலன் 5 வருஷகாலம் அவர் என்னிடம் பேசவே இல்லை. நான் கைதியைப்போல் அவ்வீட்டிலிருந்தேன். பலதரம் மன்னிப்புக் கோரினேன்; கெஞ்சினேன்.

என் மூத்தமகள் செல்வநாயகிக்கு டைபாயிடு ஜுரம் வந்துவிட்டது. ''கல்நெஞ்சம் படைத்த நீ குழந்தையிடம் இருக்க வேண்டாம்'' என்று கடிந்து கொண்டார். குழந்தை அம்மாதான் பக்கத்திலிருக்கவேணும் என்று கத்தியது. எந்த நோயாளிகளுக்கு நிர்தாக்ஷிண்யமாய்ப பதில் சொல்லி இந்த நிலைமையை வரவழைத்துக் கொண்டேனோ அதே நோயாளியின் தம்பியே என் கணவரிடம் கம்பவுண்டராக வந்தான். அவனும் என் மகளும் சேர்ந்து என் பாவ தண்டனைக்கு விமோசனமளித்தார்கள். பிறகு என் மகள் பிழைத்து எழுந்தாள். என் கணவரும் நாளடைவில் கோபம் தணிந்து பேசினார். தப்பித்தவறிக்கூட பதிலே சொல்வதில்லை. ''இந்த சம்பவத்தை மோகினிக்கு எழுது: இதுவும் உபயோகமாக இருக்கும்'' என்று என் கணவர் வற்புறுத்தி எழுதச் சொல்லியதால் இதை எழுதினேன். வை. மு. கோ.வின் நாவல்கள் ஒவ்வொன்றும் வாழ்க்கைக் களஞ்சியம் போன்றது. கற்பனையை விட அதிகமான விஷயம் வாழ்க்கையில் நடக்கிறது என்று அவர் பலஇடங்களில் எழுதியிருப்பது மிகமிக உண்மை, முக்காலும் உண்மை என்பது என் அனுபவம்.

உலகமே ஒரு விசித்திரம்என்கிறார்கள். உலகத்து வரையில் போகவேண்டாம். தன்னையே, தன் மனத்தையே......சற்று உற்று கவனித்தால் இந்த விசித்திரத்திற்கு முன்பு உலகமும் தோற்றுவிடலாம்! மனம் நினைப்பது ஒன்று, நடப்பது ஒன்று. செய்கையில் முதல் நினைப்பு ஒன்று, செய்துமுடிப்பதற்குள் நினைப்பதுவேறொன்று. சில விஷயங்களை, சம்பவங்களை மனிதர்களைப் பார்ப்பதற்கு முன் நினைத்ததொன்று; பார்த்த பின் நினைப்பதொன்று; அந்த நினைப்பு முடிவதற்குள்ளேயே கடலில் அலைமோதி உடைவது போல் மற்றொரு நினைப்பு மோதியடித்துக் கொண்டு வந்து சகலத்தையும்மாற்றிவிடுகிறது. காலை எழுந்தால் இரவு கண் உறங்குவதற்குள் இந்த மனக் கடலுக்கு ஓய்வு உண்டா? எண்ணங்களாகிய அலைகளுக்கு —நினைப்புகளாகிய குமிழிகளுக்கு —அளவு சங்கை உண்டா? அது தான் இல்லை. இதை அனுஸரித்துத்தான...''ஸாகர அலைக்கும் ஓய்வில்லை; சங்கட நெஞ்சுக்கும் ஒழிவில்லை'' என்கிற பழமொழி உதித்ததுபோலும்.

—வை. மு. கோ.

''பாழான என்மனம் குவிய ஒருதந்திரம்
பண்ணுவது உனக்கு அருமையோ'' —தாயுமானவர்.

வை. மு. பத்மினி ஸ்ரீநிவாஸன்

# அன்பின் வெற்றி!

"சுமதி!...சுமதி!!"...என்று அதட்டும் குரலில் கூப்பிட்டான் நடேசன். சுமதி குனிந்த தலை நிமிராமல் வந்துநின்றாள். உள்ளத்தில் வேதனை பிடுங்கித்தின்றது.

உள்ளத்தில் ஒருவர் மேல் அன்பு விழுந்தால் அவர்களைத் தலையில் தூக்கிவைத்துக்கொண்டு அன்பு காட்டுகிறோம். ஒருவர்மேல் வெறுப்பு ஏற்பட்டால் அதபாதாளத்தில் தள்ளத்தானே மனம் வேலைசெய்கிறது. அது உலக இயல்பு இல்லையா? சுமதி மாத்திரம் அதற்கு விலக்கா என்ன?

*　　*　　*

சுமதி கல்யாணமாய்ப் புக்ககம் வந்து 15 வருஷங்கள் ஆகிறது. ஆனால் உலகத்தவர்களைப்போல் கொஞ்சிக்குலாவி விளையாடிச்சீராட்ட ஒரு குழந்தை கிடையாது. அதே வேதனையால் மனம் குமுறும்...என்ன செய்வாள் பாவம்! வேண்டாத தெய்வங்கள் இல்லை!...இந்த நிலையில்தான் நடேசன் சென்னைக்குக் குடிமாறி வந்தான். முதல்முதலில் அவர்கள் குடிவந்தது கலாவதியின் வீட்டில்தான். அந்த வீட்டில் வந்தது சுமதிக்குக் கொஞ்சம் மனஆறுதலைக்கொடுத்தது. வீடு நிறைய குழந்தைகள். அதில் எல்லோரையும்விட கைக்குழந்தை குமார்தான் சுமதியின் உள்ளத்தைக் கவர்ந்தான். சதா அவனோடு விளையாடியே தன் பொழுதைக் கழிப்பாள். குமாரும் சுமதியைவிட்டு ஒரு நொடியும் பிரியமாட்டான். சாதம்கூட ஒருவேளை தங்கள் வீட்டில் சாப்பிட்டால் இரண்டுவேளை சுமதியின்வீட்டில் சாப்பிடுவான். சுமதியும் கலாவும் பேதமில்லாது சகோதரிகளைப்போல் பழகிவந்தார்கள். இருவர் அன்புக்கு நடுவில் குமார் அதிக செல்லமாய் வளர்ந்தான்.

குமார் இயற்கையிலேயே நல்ல அழகன். தங்கள் வீட்டில் பால் தயிர் சாப்பிடுவது போதாது, சுமதியின் வீட்டில் பக்ஷணமும், பழமுமாய்த் தின்று இன்னும் செழிப்பாய் வளர்ந்து க்ருஷ்ணவிக்ரகத்தைப்போல் விளங்குகிறான். அவனைக் கண்டவர்கள் ஒரு முத்தமாவது தராமல் விடமாட்டார்கள். குமாரும் பேதமில்லாது எல்லோருடனும் சகஜமாய்ப் பழகுவான். கலா வீட்டில் இல்லாவிட்டாலும் பரவா இல்லை. சுமதியைவிட்டு ஒரு நிமிஷம் இருக்கமாட்டான். அவர்கள் பீச்சோ, சினிமாவோ எங்குப் போனாலும் குமார் இல்லாது வீட்டைவிட்டு நகரமுடியாது. அனேகர் குமாரை சுமதியின் குழந்தை என்றுதான் நினைத்திருந்தார்கள்.

சுமதி நவராத்திரிக் கொலுவுக்காக எப்பொழுதும் பிறந்தகம் போவது வழக்கம். அதுபோல் இந்தத் தடவையும் போயிருந்தாள். குமார் சுமதியைப் பிரிந்ததால் பொழுது

போகாது அலைந்துகொண்டு இருந்தான். வீட்டில் இருப்பவர்கள் அத்தனைபேர்களும் அவனுக்கு மனிதர்களாகவே தோன்றவில்லை. சதா 'சித்தி!...சித்தி' என்று மூலைமூலையாய்த் தேடத் துடங்கினான். நாள் பூராவும் தேடித்தேடி சுமதியைக் காணாததால் அதே ஏக்கத்தால் அழத்துடங்கிவிட்டான். இரவு எவ்வளவோ சமாதானம் செய்து தூங்கவைத்தார்கள். கலாவுக்கு இதே ஏக்கத்தால் எங்கு குமார் படுத்துவிடுவானோ என்று பயம் உண்டாகிவிட்டது.

அழுகையும் சிரிப்புமாய் இரண்டுநாள் சென்றது. குமார் அதே ஏக்கத்தில் ஜுரம்வந்து படுத்துவிட்டான். ஜுரவேகத்தில், "சித்தி எங்கே?...சித்தி எங்கே?"....என்று கத்தத் துடங்கிவிட்டான். நடேசன் குழந்தையின் கதறலைப் பார்த்து உடம்புக்கு என்ன ஆகுமோ என்று பயந்து சுமதியை உடனே புறப்பட்டு வரும்படிக் கடிதம் எழுதிப்போட்டான். சுமதி குமாரிடம் உயிரையே வைத்து இருப்பதால் கடிதத்தைப் பார்த்த அடுத்த க்ஷணமே தாயாரிடம்கூட மனஸ்தாபப் பட்டுக்கொண்டு ஓடிவந்தாள்...சுமதியைப் பார்த்த குமார் துள்ளி எழுந்து தழுவிக்கொண்டான்...சூரியனைக்கண்ட பனி எப்படித் தானாய் மறைகிறதோ அதுபோல் குமாரின் ஜுரம் காற்றாய்ப் பறந்தது. இதைப் பார்த்த சுமதி இனி குமாரை விட்டுப் பிரிவதே இல்லைஎன்று சங்கல்பம்செய்துகொண்டாள்.

குமாருக்கு இரண்டாவது பிறந்தநாள். வீடே அமர்க்களப் பட்டுக்கொண்டு இருந்தது. சுமதி ஓடிஓடி குழந்தைக்கு அலங்காரம் செய்வதில் ஈடுபட்டு இருந்தாள். குமாருக்குக் கண்ணனைப்போல் கொண்டைபோட்டுத் தன் நகைகள், கலாவின் நகைகள் எல்லாம் போட்டுச் சிங்காரித்து இருந்தாள். அசல் க்ருஷ்ணபெருமானே வந்ததுபோல் அவ்வளவு பொருத்தமாய் இருந்தது. தன்னையும் மறந்து தூக்கிக் கொண்டு கூத்தாடினாள். அந்த சமயம் வீதியில் வண்டி வந்து நின்றது. சுமதியின் தாயார் பெட்டி படுக்கையுடன் வந்து இறங்கினாள்.

சுமதி சந்தோஷத்தோடு வீதிக்குக் குமாருடன் ஓடிப் போய், "வாம்மா! வாம்மா!...நல்ல சமயத்தில் வந்தாய்... எங்க கண்ணுவுக்கு இன்று பிறந்தநாள்...பாட்டி ஊரிலிருந்து வந்துவிட்டாள்." என்று சொல்லிக் குழந்தையைக் குலாவினாள். சுமதியின் தாயார் சுப்புலக்ஷ்மியின் முகம் சுருங்கியது. "அட அசட்டுப்பெண்ணே! ஊரார்வீட்டுக்குழந்தையை வைத்துக்கொண்டு இப்படிக் கூத்தாடுகிறாயே! நமக்கு என்று ஒரு குழந்தை இல்லையே என்ற கவலை உனக்கு இருக்கிறதா? பணத்தாலும், சரீரத்தாலும் இந்தக் குழந்தைக்குச் செய்கிறாயே! நாளைக்கு இதுவா உன்னைத் தாங்கப்போகிறது? சீ! மூடம்!" என்று முணுமுணுத்துக்கொண்டு உள்ளே போனாள்.

கபடமற்ற சுமதியின் உள்ளத்தில் இச்சொற்கள் அறை கொடுத்ததுபோல் வேதனை செய்யத்துடங்கின. இரண்டு வருஷங்களாய் மறந்துபோன தன் குறைகள் மறுபடியும் தலை தூக்கத்துடங்கின. மனதைத் தளரவிடாது பிறந்தநாள் வைபவத்தில் கலந்துகொண்டாள். ஆனல், தன் தாயாரின் கடும் சொற்கள் மூளையில் வேலை செய்துகொண்டே இருந்தன. "கரைப்பார் கரைத்தால் கல்லும் கரையும்" என்பது பழமொழி. அதுபோல் தாயாரின் தூபத்தால் சுமதிக்குத் தன் உயிராய் நினைத்துக்கொண்டு இருந்த குமாரிடம்சிறுகச்சிறுக அன்பு குறையத்துடங்கியது. ஒன்றும் அறியாத குழந்தை சுமதியிடம் வழக்கம்போல் ஓடிவரும். குமார் உள்ளே வரும் போதே, சுப்புலக்ஷ்மி ஒரு முறை முறைப்பாள். சுப்புலக்ஷ்மியைப் பார்த்ததுமே ஒரு பயம்பிடித்துவிட்டது குமாருக்கு; சுப்புலக்ஷ்மி இல்லாத சமயம் உள்ளேபோய் சுமதியைக் கொஞ்சிவிட்டு ஓடிவிடுவான். சுமதியின் மனதில் ஒருவித கலவரம் இருந்தாலும் குமாரைப் பார்த்தால் தன்னை அறியாது அவள் கைகள் தழுவிக்கொள்ளும். அவன் குறும்புக்கண்களும் மழலைச் சொல்லும் சுமதியால் மறக்கவே முடியவில்லை. தன்னை மறந்து யோசனையில் ஆழ்ந்துவிடுவாள். தான் குழந்தையை வெறுப்பது சரியா? தப்பா?...என்று கேள்வி எழும். பதில் தனக்கே தெரியாது குழம்பித் தவிப்பாள்...ஆனல் குமாரிடம் நாளடைவில் ஒருவித வெறுப்பு ஏற்பட்டது. ஸ்வபாவமாகவே குமார் ரொம்ப துஷ்டன். ஏதாவது சேஷ்டை செய்துகொண்டே இருப்பான். சுமதி அன்பாய் இருந்தவரையில் அவன் செய்யும் ஒவ்வொரு சேஷ்டையும் விளையாட்டாகத் தோன்றும்.

ஆனல் இன்று அன்பு குறைவு காரணமாய் அவன்மீது சதா குற்றச்சாட்டுகள் கலாவிடம் சொல்லத் துடங்கினள். புத்திசாலியான கலா சுமதியின் மாறுதலை அறிந்து குமாரை அதிகம் அவள் அறைப்பக்கம் போகவிடாது தடுக்கத்துடங்கினள். குமார் அவளையும் மீறிச் சிலசமயம் ஓடிவிடுவான். இந்த மாறுதல்களை அறியாத நடேசன் குமாருடன் எப்பொழுதும் போல் சகஜமாய்ப் பழகிவந்தான். தான் டிபன் சாப்பிடும் போது குமார் இல்லாது உள்ளே வரமாட்டான். அன்றும் குமாரை டிபன் சாப்பிட நடேசன் கூப்பிட்டான். குழந்தையும் மலர்ந்த முகத்தோடு ஓடிவந்து நடேசனின் தோளில் ஏறிக்கொண்டது. இருவரும் உள்ளே போனர்கள். சுமதி வழக்கத்திற்குமாருய் நடேசனுக்கு மட்டும் டிபனைக் கொண்டு வைத்தாள். நடேசன், "குமாருக்கு எங்கே?" என்று கேட்டான். சுமதி, கோபத்தோடு, "ஆமாம்! மத்யானம் எல்லாம் சாப்பிட்டாச்சு, இப்போது கிடையாது"...என்று வெடுக்கென்று பதில் சொன்னள். நடேசன் கோபத்தோடு பதில்

ஒன்றும் சொல்லாது தன் டிபனில் பாதி குமாருக்குக் கொடுத்துத்தானும் சாப்பிட்டுவிட்டு, பரபரவென்று எழுந்துபோய் விட்டான். என்றும் இல்லாத சுமதியின் நடத்தை நடேசனை ஆச்சர்யத்தில் ஆழ்த்தியது. 'சரி! இது அவள் தாயாரின் உபதேசம்தான்'...என்று ஒருவாறு புரிந்துகொண்டான்.

சுமதி அன்புமொழிகளால் குமாரைக் கொஞ்சியதுபோக எப்பொழுதும் திட்டுவதும், புகார் சொல்வதுமாய் ஆரம்பித்தாள்; காலை எழுந்தால் இரவுக்குள் முப்பது தடவையாவது புகார்சொல்வாள். கலாவுக்கு இந்தச் செய்கை தலைவேதனையைக்கொடுத்தது. 'சீ'என்று கூட சொல்லாத குமாரை சுமதியின் காரணமாய் அடியான அடி அடிக்கத் துடங்கினாள்.

சமயல் அறையில் கலா அவசரமாய் வேலைசெய்து கொண்டு இருந்தாள். திடீர் என்று குமார் 'வீல்'...என்று அழும் குரல் கேட்டது. அடுத்து சுமதியின் குரல் எழுந்தது. மனம் தாளாது வெளியே ஓடிவந்தாள். காரணம் சுமதி பிடித்துவைத்து இருந்த ஜலத்துப் பக்கத்தில் குமார் எச்சல் உமிழ்ந்தான்...அதுதான்! சுமதி, கோபம்தாளாது குமாரை இரண்டு அடிகொடுத்து,கலாவிடமும் பெரியபுகார் செய்தாள். என்னதான் தன் குழந்தை பொல்லாததாய் இருந்தாலும் பிறர் அடித்துப்புகார்செய்தால் எப்படி இருக்கும்?கலாவுக்குக் கோபம் எல்லை மீறியது. தரதரவென்று குழந்தையை இழுத்துக்கொண்டுபோய் அடுப்பில் எரிந்துகொண்டு இருந்த கொள்ளிக்கட்டையை எடுத்து, ''இனி சித்தி அறைப்பக்கம் போகமாட்டாயே! இந்தக் கால்தானே உன்னை இழுத்துக்கொண்டுபோகிறது!' என்று இரண்டு கால்களிலும் சூடு வைத்துவிட்டாள்.காண்டியைக் காய்த்துவைத்தாலே பொறுக்காததேகத்தில் நெருப்பையே வைத்தால் எப்படிப் பொறுக்க முடியும்? குமார் புழுவாய்த்துடித்தான். கலா ஆத்திரத்தில் வைத்தாளே தவிர, பிறகு தன் மதி ஹீனத்தை நினைத்து வருந்தினாள். குழந்தை பிடிக்கமுடியாது துள்ளித்துள்ளி அழுகிறது. ஒன்றும் புரியாத நிலையில் கலா தவித்தாள். அதேசமயம் ஆபீஸிலிருந்து வந்த நடேசன் குழந்தையின் துடிப்பைப்பார்த்து ஒன்றும் புரியாது திகைத்தான். இரண்டு கால்களும் நெருப்பில் பொசுங்கிப் பூமியில் பாவமுடியாது தவித்துக்கொண்டு இருந்தது. அங்கு சுத்திமுத்திப்பார்த்தான். சுமதியைக் காணவில்லை. சட்டென்று ஓடி குமாரை எடுத்துக்கொண்டு கலாவிடம் நடந்ததை விசாரித்தான். வெறுப்போடு இருந்த கலா, ''என்னவோ பொறுக்கமுடியாது சுமதியைத்தொந்தரவு செய்தான். என்னையும் மீறிக் கோபம் வந்தது; சூடுபோட்டேன்'' என்றாள். அவளை அறியாது கண்களில் நீர் ததும்பிவிட்டது. நடேசன் விறுவிறு என்று டாக்டர் வீட்டை அடைந்தான், டாக்டர்கால்களைப் பரிசோதனை

செய்துவிட்டு, "ஸார்! குழந்தையின் காலில் அழுத்திச் சூடு போட்டு இருப்பதால் தோல்மட்டும் இல்லாது சதையும் எரிந்துவிட்டு இருக்கிறது. ரணஜன்னி ஒன்றும் வாராதுதடுக்க ஆஸ்பத்ரியில் வைப்பதுதான் நலம்" என்று சொன்னார். நடேசன் நேராய் பெரிய ஆஸ்பத்ரியை அடைந்து அங்குக் குழந்தையை அட்மிட் செய்தான். எரிச்சல் பொறுக்கமுடியாது குழந்தை தவிக்கிறது. நடேசனுக்கு ஏதோ மாதிரிதான் இந்தச் செய்கை நடந்து இருக்கிறது என்று பூர்ணமாய் விளங்கிவிட்டது. இதற்குள் ஆஸ்பத்ரிக்கு கலா, அவள் கணவன் எல்லோரும் ஓடிவந்தார்கள். அந்தச் சமயத்தில்கூட குமார், "சித்தி!...சித்தி!..." என்றுதான் கத்திக்கொண்டு இருந்தான்.

சுமதியின் மனச்சாட்சி அவளையே கொன்றுகொண்டு இருந்தது. தினத்தைப்போல் தான் செய்த புகாருக்குக் கலா இப்படி விபரீதமாய்த் தண்டனை கொடுப்பாள் என்று சுமதி எதிர்பார்க்கவே இல்லை. என்னதான் குமாரிடம் வெறுப்பாய் இருந்தாலும் குழந்தை துடிப்பதைப் பார்த்து அவளால் சகிக்கவே முடியாது வேதனை செய்தது ...சீ!...பால் மணம் மாறாத பச்சைக் குழந்தையைத் தன் தாய்ப் பேச்சுக்கேட்டு வெறுப்பது மகா பாதகம்... என்று மனதில் உறுத்தியது. ஓடிப்போய், குமாரை எடுத்து சமாதானப்படுத்த மனம் தவித்தது... ஆனால், ஏதனாலோ முன்பக்கம்போக மனம் இடம் தரவில்லை. தவித்தவாறே அடுப்பம் கரையோடு கிடந்தாள். அந்தசமயம்தான் ஆரம்பத்தில் தெரிவித்தபடி நடேசன் சுமதியை அழைத்துக்கொண்டே வந்தான். கணவன் குரலைக் கேட்டு நடுங்கித் தலைகுனிந்தவாறு நின்றாள் சுமதி.

நடேசன்:—சுமதி! ஏன் உன் புத்தி இப்படித் தடுமாறி விட்டது? உன் தாயாரின் உபதேசமா? ஒரு குழந்தை இல்லை என்று ஏங்கிய மனதுக்கு ஏதோ ஒரு குழந்தையைக் காட்டி பகவான் ஆறுதலை அளித்தார் என்று பார்த்தால் அந்தக் குழந்தை உயிருக்கே உலைவைத்துவிட்டாயே பாவி!—என்று கண்டபடி திட்டினான்.

சுமதியால் பொறுக்கமுடியவில்லை... மனது சுக்கல் நூறாகியது. ஓடிவந்து கணவனின் கைகளைப் பிடித்துக்கொண்டு, "நான் செய்தது ரொம்பவும் பாதகம்! குழந்தைகளின் அன்பை அறியாதபாவி என்றுதிருபமாய்விட்டது! போதும்! போதும்! இனி இம்மாதிரி மதிஈனமாய் நடக்கவேமாட்டேன். என் தாயின் பேச்சைத் தவறாய் நினைக்காது என் மனதைத் தளரவிட்டுவிட்டேன். என்னை மன்னித்துவிடுங்கள்; வாருங்கள் சீக்கிரம்ஆஸ்பத்ரிக்குப்போகலாம்" என்று அழைத்தாள்; "ஊம் இனியாவது இந்தபுத்தி நிலைத்து இருந்தால் போதும்" என்று சொல்லிக்கொண்டே சுமதியை அழைத்துக்கொண்டு ஆஸ்பத்ரிக்கு வந்தான். அவர்கள் நுழையும் சமயம் குமார், "ஐயோ எரிகிறதே! எங்க சித்தி எங்கே? கூப்பிடு! சித்தி!...சித்தி!"

...என்று கத்திக்கொண்டு இருந்தான். குழந்தையின் ஆழ்ந்த அன்பை அறியாத சுமதியின் காதில் இந்தச் சொற்கள் விழுந்து மனதைப் பாகாய் உருக்கியது. உணர்ச்சிமேலிட்டு ஓடிவந்து ஆஸ்பத்ரி என்று பாராது குமாரைச்சேர்த்து அணைத்துக்கொண்டு கோவென்று கதறிவிட்டாள்! இதைப் பார்த்த கலாவும் அவள் கணவரும் திகைத்து நின்றார்கள். சித்தியின் அன்பைச் சில தினங்களாய்ப் பெறுதகுமாரின் முகம் தாமரைபோல் மலர்ந்தது...எரிச்சலைக்கூட மறந்து சித்தியின் அணைப்பில் ஆனந்தமாய்ப் படுத்தான். சுமதி, கலாவின் கைகளைப்பிடித்துக்கொண்டு கண்ணீர்பெருக, "அக்கா! நான் மகாபாவியாய்விட்டேன்! கேட்பார் வார்த்தைகேட்டு மதியை இழந்து பாழானேன்! இனி என் கண்மணியை ஒரு நிமிஷம் கூடப் பிரியமாட்டேன். இனி குமார் என்னுடைய மைந்தன்; என்னை மன்னியுங்கள் அக்கா!" என்று கெஞ்சினாள்; புத்திசாலியான கலா, "உன்மேல் தப்பு இல்லை சுமதி! உங்கள் அன்பைப் பலப்படுத்தத்தான் பகவான் இப்படி ஒரு லீலை செய்தார்" என்று சமாதானமாய் பதில் சொன்னாள். இதைப் பார்த்த நடேசனின் மனம் நிம்மதி அடைந்தது. எல்லோரின் அன்பினாலும், பகவானின் க்ருபையாலும் குமார் குணமடைந்து வீடு வந்துசேர்ந்தான்.

---

## ஆத்திசூடி கதைகள்

M. K. சுலோசனா

### 9. ஐயமிட்டுண்:

சிவாநந்தன் என்ற ஒரு வேளாளர் காசிப்பட்டணத்தில் வசித்துவந்தார். அவர் யார் வரினும் எப்பொழுது வரினும் இன்சொல்கூறி, சிரித்த முகத்துடன் அன்னமிடுவதை ஒரு தொண்டாகக் கொண்டிருந்தார். ஒரு சமயம், இவருக்கு, வேளாண்மைக் குறைவால் வருவாய் குறைந்து, வறுமையால் வாடி மெலிந்தார். அநேகநாள் பட்டினியும் இருந்தார். பிறகு கொஞ்சம் அரிசி கடன்வாங்கி, சமையல்செய்து, சாப்பிட உட்கார்ந்தார். வடித்திருக்கும் சாதம் சிவாநந்தருக்கும் அவர் மனைவிக்குமே போதாது. இருவரும் பசியால் வாடிக்களைத்திருந்தனர். சாப்பிடப் போகும் சமயம் ஓர் பரதேசி, "ஐயா, பசிக்குது! சாப்பிட்டு, இரண்டு நாள் ஆகின்றது" என்று கூச்சலிட்டான். சிவாநந்தர் தன் இலையில் இருந்த சாதத்தைப் பரதேசிக்குக் கொடுத்தார். அவன் சாதத்தைச் சாப்பிட்டுவிட்டு, இன்னும் சாதம் வேண்டும் என்று கேட்டான். உடனே அவர் மனைவி தன் இலை சாதத்தையும் எடுத்து பரதேசிக்குப்போட்டுவிட்டு, இருவரும் பட்டினியாகக் கிடந்தனர். உடனே பரதேசி, மாயமாய்மறைந்துவிட்டான். சிவபெருமான் சிவாநந்தர் எதிரில் தோன்றி அவர்களின் உத்தம குணத்தைப் புகழ்ந்து, வேண்டிய வரம்கொடுத்து மறைந்தார். ஆதலால்,

ஏழைகளுக்குப் பிச்சையிட்ட பிறகே நாம் உணவு கொள்ளுதல் தரும முறையாகும்.

**10. ஔவியம் பேசேல்:**

இராமன், கோவிந்தன் இருவரும் பக்கத்து வீட்டுக்காரர்கள். இராமன் எல்லோரிடமும் அன்பாகவும், மரியாதையாகவும் இருப்பான். கோவிந்தனுக்கு யாரைப் பார்த்தாலும் பொறாமை; அவர்களைக் கண்டபடி திட்டுவான். அந்த ஊரில் ஜில்லாகலெக்ட்டர் வந்திருந்தார்—இராமன் ஊராருக்கு உதவி செய்வதையும் அவன் நல்ல குணத்தையும் ஊரார் மூலமாக அறிந்து அவனை வரவழைத்து ஊர் மணியம் பார்க்கும்படி உத்திரவு இட்டார். இதைக்கேட்ட கோவிந்தன் பொறாமையால், அவனுக்குத் தீங்கு செய்யக் கருதி, ஒருவரும் அறியாமல் சாவடியில் இரவில் புகுந்து, சர்க்கார் கடிதங்களைக் களவாடி ஒளித்து வைத்துவிட்டான். சர்க்கார் கடிதங்கள் காணாமல்போகவே கலெக்ட்டர்இராமனைக் கூப்பிட்டு விஜாரித்தார். அவன் தனக்கு ஒன்றும்தெரியாது என்று சொல்லி, அழுதான்.

கலெக்ட்டர் இதில் ஏதோ சூது இருக்கின்றது என்று உணர்ந்து, ஊரார் அனைவரையும் வரவழைத்து இராமனைப் பற்றித் தனித்தனியாக விஜாரித்தார். ஊரார் எல்லோரும் இராமன் தவறுசெய்யமாட்டான் என்று கூறினார்கள். கோவிந்தனைக்கேட்டதும் அவன் மனதில் உள்ளபொறாமைத்தீ எதிரிலிருப்பவர் கலெக்ட்டர் என்பதையும் மறந்து இராமனைத் திட்டத் தொடங்கினான். இதில் சந்தேகம்கொண்ட கலெக்ட்டர் ரகசியமாக, கோவிந்தன்தான் கடிதங்களை ஒளித்தான் என்பதை அறிந்து, கோவிந்தனுக்கு மூன்று மாதம் ஜெயில் வாசம் செய்யும்படி உத்திரவிட்டார். இராமனைப் புகழ்ந்து அவனுக்கு சம்பளஉயர்வு கொடுத்தார். ஆதலால், பொறாமைப் பேச்சுகள்பேசினால் அது பேசுபவருக்கே கேட்டைவிளைக்கும். ஆதலால் ஒருவரிடமும் பொறாமைகொள்ளுதல் கூடாது.

---

## மதிப்புரை

ஸ்ரீமத் பாகவதஸங்க்ரஹம் என்னும் அரிய நூலை எழுதி வெளியிட்ட ஸ்ரீமான் கே. ஏ. துரைஸாமி ஐயங்கார் (கே. ஏ. வேங்கடேச சர்மா) [''தக்ஷிணதேச க்ரந்தாலயம்''கோயம்பேடு போஸ்ட், வில்லிவாக்கம் மார்க்கம்] இன்னும் சில அத்யாவச்யமான புத்தகங்கள் லோகோபகாரமாக எழுதி வெளியிட்டுள்ளார். அவற்றுள்,

**1. நித்யகர்மாநுஷ்டான விதிகள்: விலை: 1. ரூபாய்**

இதில் ஒவ்வொருவரும் விடியற்காலையில் எழுந்திருப்பது முதல் இரவில் படுப்பதுவரையில் அநுஷ்டிக்கவேண்டிய வைதிக க்ரியைகளும் அவற்றின் முறைகளும் நன்கு விளக்கிக் காட்டப்பட்டுள்ளன. கர்மாக்கள் விதிப்படி செய்தால்தான் செய்தனவாகுமேயன்றி விதி தவறிச் செய்யப்படின் செய்யா

தனவேயாகும். மேலும் தோஷத்திற்கும் ஆளாக்கிவிடும். விதிகள் பல கடினமாயிருந்தாலும் சம்மாவியன்றவளவு அறிந்து அநுஷ்டானத்திற்குக் கொண்டுவரவேண்டும். "புத்தியால் சித்தியாது ஓதி உரு எண்ணும் அத்தியால் ஆம்பயம் அங்கு என்?" என்று ஸித்தோபாய நிஷ்டரான ஆழ்வார் அருளிச்செயலையும் நோக்குக. விதிகள் தெரியாது இருத்தல் தகாது, கூடாது. இவ்வரிய நூலுக்கு மூலம் ஸ்ரீ வைத்ய நாததீக்ஷிதர் தொகுத்த ஸ்ம்ருதிமுக்தபலஆந்ஹிக காண்டமாகும். இது சுருக்கமாகவும் விளக்கமாகவும் இருப்பதால் அனைவர்க்கும் மிகவும் உபயோகமாயிருக்கும்.

2. வர்ணாச்ரம, ஆசௌச காண்ட ஸங்க்ரஹம் விலை ரூ. 1.

இவைகளும் முற்கூறிய தீக்ஷிதர் க்ரந்தத்தின் 1, 3, காண்டங்களின் சங்க்ரஹங்களாகும். இதில் கர்ப்பாதானம் முதல் மரணபர்யந்தமுள்ள ஸம்ஸ்கார விவரணங்கள், 4 வருண தர்மங்கள், 4 ஆச்ரமதர்மங்கள், விவாஹாதி விஷயங்கள் முதலியன பல விளக்கப்பட்டுள்ளன. ஆசௌசம் என்பது, ஜனன மரணங்களில் யார்யாருக்கு எத்தனை நாள், நாழிகை தீட்டு என்பது கூறும். இதுவும் அனைவர்க்கும் மிகமிக அவசியமானதே.

—தி. அ. ரா.

---

கவலைஎன்பதுபெரியகுடும்பத்தினருக்கு மட்டுமல்ல. குழந்தைப்பருவம் நீங்கியஉடனேயே கவலை என்கிற சக்தி எல்லாருடைய இதயத்திலும் இடம் தனக்கே சொந்தம், உரிமை என்றெண்ணிப் புகுந்து விடுகிறது. எந்தெந்த விஷயத்திலும், தொழிலிலும், குடும்பத் தொல்லையிலும், உத்யோக முறையிலும், இனி எண்ணிக்கையற்ற விதத்தில் மக்களை வாட்டி வருத்துகிறது. பகவானாலேயே உண்டாக்கப்பட்ட கவலை என்கிற பொருளுக்கு அவனே முக்யத்வத்தைக் கொடுத்து விட்டுத் தானும் அதையனுபவிக்கின்றான். இதுதான் வியப்பிலும் வியப்பு! தாமரை இலை நீர்த்துளிபோன்ற உள்ளமுடையவர்களையும் கவலை பாதிக்காமலில்லை. இதையொட்டித்தான் ..."கவலையற்ற மனிதனையும், அவதியற்ற குடும்பத்தையும் காண்பதரிது." என்றார்கள். கவலையும் அதனால் அவதியும்... அல்லது அவதியின் பயனால் கவலையும் மனிதர்களின் உயிரும் உடலும் போல் பிரியாத பொருள்களாய்ப் பின்னிக்கொண்டு வாட்டும் அனுபவத்தை அறியாதார் இருக்கவே முடியாது. அப்படி யாரேனும் ஒருவர் இருந்தாரேயானால் அவர் தெய்வப் பிறவியே? என்று வணங்கலாம். இத்தகைய கொடிய கவலையையும் அவதியையும் பாதிக்காமல் தடுத்து ரக்ஷிக்கக்கூடிய மருந்துதான் பகவந்நாம சங்கீர்த்தனமாகும்; பகவானை பக்தி செய்வதாகும். இதைச் சுலபமாகப் பழகிவிட்டால் கவலை நம்மிடம் ஆதிக்கம் செலுத்தச் சிறிது அச்சமே கொண்டு விலகும். இதையறிந்தால் போதும். —வை. மு. கோ.

*"தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க்கு அல்லால்,*
*மனக்கவலை மாற்றல், அரிது"* —எழுதுணடிறை

# குணக் குன்று

வை. மு. கோ.

109-வது நாவல்

## 12

கல்யாண விருந்திற்காக ஊரழைத்துவிட்டு இன்னும் வாராததால் மீனாக்ஷிக்குக்கூட சற்று பயமும் யோசனையும் உண்டாகியது. மணி, தன் கடமையில் கண்ணாகி, உருண்டு கொண்டே இருக்கிறது...எத்தனையோ வீடுகளுக்குப்போய்க் கூப்பிடவேணுமல்லவா? அதனால்தான் நேரமாகிறது...என்ற சமாதானத்தையும் தானே செய்துகொண்டு வீட்டிலுள்ள வேலைகளில் கவனத்தையும்—மறக்காமல்—அதிகாரத்தையும் செலுத்திக்கொண்டிருந்தாள்!

லக்ஷ்மிக்கோ வனஜா இன்னும் வரவில்லையே என்கிற கவலை ஒருபுறம். தன் பிதாவைத் தனிமையில் பார்க்கவிடாமல் தன்னைச்சுற்றி சில பெண்கள் காவல் இருப்பதுபோல் அலைவது போதாமல் தன்பிதாவையும் ஒருவா மாற்றி யொருவராகப் பலர் சுற்றிக்கொண்டிருப்பதால ஒன்றுமே செய்யமுடியாது தவிக்கிறாள்...ஆபீஸுக்கு நேரமாகிவிட்டதே! இன்னும் கார் வரவில்லையே...என்று சந்திரசேகரன் பதைக்கிறான். இந்நிலைமையில டாக்ஸியை வைத்துக்கொண்டாவது ஆபீஸுக்குப்போய் வந்துவிடுவதென்று சேகர் தீர்மானித்து விட்டான். "லக்ஷ்மி! நான் டாக்ஸியில் போய்வருகிறேன். கார் வந்த உடனே முதலில் ஆபீஸ் நம்பருக்கு நீ டெலிபோனில் விஷயத்தைச் சொல்லு; பயப்படாதே. உனக்கு முடியவில்லை என்றால் அப்பாவையாவது 'கார் வந்துவிட்டது' என்று சொல்லும்படிக்குச் செய்; நான் வருகிறேன்." என்றுகூறிச் சென்றுவிட்டான்.

வீட்டு எஜமானி என்கிற கர்வத்துடனும் பெரிய ஹோதாவுடனும் மீனாக்ஷியம்மாள் வருகிறவர்களிடம் ஏதோ பேசுகிறாளேயன்றி உள்ளுக்குள் இன்னும் தன்மகள் வந்துசேரவில்லையே என்கிற வருத்தம் வாட்டிக்கொண்டே இருக்கிறது. அதோடு ஊரிலிருந்து வந்தவர்கள், "வனஜா எங்கே? இன்னுமா காலையில் போனவள் வரவில்லை" என்று குத்திவிடும்போது, மார்பு படபடவென்று அடித்துக்கொள்கிறது...மருமகளை இப்படி அலங்காரம் செய்யவேணும்; தான இப்படிச் செய்துகொள்ளவேணும்...விருந்தினர்களை உபசரிப்பதில இம்மாதிரி நடந்துகொள்ளவேணும...என்றெல்லாம்மனத்திற்குள்

பெரிய முஸ்தீப்புகள் போட்டுக்கொண்டே கவலைக்கும் இடம் கொடுத்துத் திண்டாடுகிறாள்!

சேகர் ஆபீஸுக்குப் போய் வேலையில் மனம் ஓடாமல் தவித்தான். சாதாரணமாய் ஊர் அழைக்கச் சென்றால் கவலையே இல்லை. சினிமாக்காரர்கள் வீட்டுக்குப் போகும் முன் ஏற்பாடுகளுடன் போயிருப்பதால் வனஜாவுக்குள்ள அசட்டு ஆசையில்...எங்கே முதல் சந்திப்பிலேயே ஐக்யமாகிவிடுகிறாளோ! அவளுடன் கூடி இன்னும் என்ன விபரீதத்தை விலைக்கு வாங்கிக்கொண்டு வந்துவிடுகிறாளோ!...என்கிற மகத்தான கலக்கம் மனத்தைப் போட்டு வாட்டுவதால் தனக்கு மேலுள்ள எஜமானரிடம் நேராகச்சென்று தன்வீட்டு விருந்துக்கும் ப்ரத்யேகமாய் அழைத்துவிட்டு லீவும் வாங்கிக் கொண்டு வருவதற்காக அதிகாரியிடம் சென்றான்.

“ஹல்லோ, மிஸ்டர் சேகர்! கல்யாணம் விசாரிக்க நானே வரவேண்டும் என்றிருந்தேன். நீங்களே வந்துவிட்டீர்கள். உங்களுக்கு ஒரு பெரிய அதிர்ஷ்டந்தான், இத்தகைய மனைவியும் மாமனாரும் கிடைத்தது என்று எல்லோரும் சொல்கிறார்கள். வெகுவெகு சந்தோஷப்படுகிறேன். வயதில் நான் உங்களைவிடப் பெரியவனாகையால் மனமார வாழ்த்தி ஆசீர்வதிக்கிறேன். சில புத்திமதிகளும் கூறுகிறேன்...அதை நீங்கள் வித்யாஸமாக நினைக்கமாட்டீர்களல்லவா!”...என்றார்.

சேகர்:—எனது எஜமானரும் பிதாவுக்குச் சமமானவரும் என்னுடைய வாழ்க்கையில் க்ஷேமத்தைக் கோருகிறவர்களுமான நீங்கள் சொல்லும் புத்திமதிகளை நான் என் வாழ்க்கையிலேயே ஒரு பெரும் புதையலாக எண்ணி மகிழ்வேன். இத்தகைய மகான்களின் வாக்யங்களை என் மனைவி தேவவாக்காக எண்ணிப் பூரிப்பாள்.

எஜமானர்:—அத்தகைய உத்தமமான மனைவி வந்திருப்பதாகக் கேள்விப்பட்டுத்தான் நானும் சொல்கிறேன். ஆசை அறுபது நாள், மோகம் முப்பது நாள்: அறுபதும் முப்பதும் 90—நாள் சென்றபிறகு?...இது ஒரு பழமொழி! கல்யாணமான உடனேயே சில பிள்ளைகள் பெண்டாட்டிக்குத்தான் ஏதோ ப்ரமாதமான சலுகைகாட்டிச் செல்வாக்குக் கொடுத்து த்ருப்தி செய்துவிடுவதாக எண்ணி, பழமைக்கும் விரோதமாய் பெரியோருக்கும்மனக்கசப்பாய் தலைமீது தூக்கிவைத்துக்கொண்டு மரியாதைமட்டு, கவுரம், கண்ணியமின்றி கண்ட இடத்திற்கும் இழுத்துக்கொண்டுபோவது...கண்ட சினிமாவுக்கும் அழைத்துச்செல்வது தன்னுடைய சினேகிதர்களிடமெல்லாம் (நாகரீகம் நாகரீகம்...என்று உளறிக்கொண்டு) பேசச்செய்வது, அவர்களுடன்கூட தனித்து அனுப்புவது, நினைத்தபடி நினைத்த இடத்திற்கு அவள் தானாகப்போகவிடுவது...இவைகளைப்போன்ற பயங்கரம் இனி ஒரு பெரிய நல்லபாம்பு விஷத்

தினல்கூட உண்டாகாது!...சேகர்! இது என்னமோ நான் உளறுவதாக எண்ணுகிறீர்கள்! என் வாழ்க்கையில் நானே இம் மாதிரி நடந்து பாழானேன்; ஏமாந்து பாவியானேன்...

சேகர்:—என்ன? நீங்களா வாழ்க்கையில் வழுக்கி விழுந் தீர்கள்?...எனக்கு ஒன்றும் புரியவில்லையே!...

எஜமா:—சேகர்! புரியாதுதான்; புரியவேண்டிய அவசியமும் இல்லை. நேற்று என் நண்பர் ஒருவரிடம் வெகுநேரம் பேசிக்கொண்டிருந்தேன். அவர் உங்கள் மனைவியைப்பற்றி ப்ரமாதமாய் எடுத்துக்கூறினர். அதுமுதல் நான் உங்களைச் சந்தித்து அதைப்பற்றிப் பேசவே இருந்தேன். நீங்களே வந்தீர்கள். என்னைப் பார்த்தால் தலை நரைத்துத் தாடை குழிவிழுந்து முகத்தின் பொலிவுகுன்றிக் கிழவன்போலக் காணப்படுகிறேனல்லவா? எனக்கு என்ன வயதிருக்கும்? ஒரு மதிப்பு சொல்லுங்கள் பார்க்கலாம்...என்றதும், சேகருக்குத் திடுக்கிட்டது! உண்மையாய் அவருக்கு 50 வயதுக்குமேலாகி இருக்கும். இன்னும் இரண்டொரு வருஷத்தில் ஓய்வு எடுத்துக் கொள்வார் என்று தான் அவன் தீர்மானமாய் எண்ணி இருந்தான். திடீரென்று இவ்வாறு கேட்டதும் தடமாடிப் போய் பதில் சொல்லத்தெரியாமல் விழித்துநிற்பதைக் கண்ட எஜமானர், சிரித்துவிட்டு, "சேகர்! சுமார் 50 வயதுக்குமே லிருக்கும் என்றுதானே நீங்கள் மதிப்பிடுகிறீர்கள். பயப்பட வேண்டாம்; தைரியமாய்ச் சொல்லுங்கள்" என்றார். சேகர் ஒருமாதிரிக் குழப்பத்துடன், "ஆமாம்; அப்படித்தான் நினைக்கிறேன்"...என்று இழுத்தாப்போல் சொன்னான்.

"சேகர்! எனக்குச் சரியாய் 38 வயது நிரம்பவில்லை. இன்னும் 7 மாதங்கள் சென்றால் 38 பூர்த்தியாகிறது" என்றதும், சேகரைத் தூக்கிவாரிப்போட்டது. "என்ன! 38 வயதா? இதென்ன ஆச்சரியம்! நம்பவே முடியவில்லையே! எதனால் இப்படித் தளர்ந்துவிட்டது? நான் உங்களைவிட வயதிலும் சிறியவன். உத்யோகத்திலும் கீழ்ப்படிந்தவன்...இத்தகைய பெரிய விஷயங்களைக் கேட்பது நியாயமில்லை...

இடைமறித்து, "சேகர்! நீங்களாகவா கேட்கிறீர்கள்; நானாகவே சொல்ல வந்ததைக் கேட்பதில் என்ன தவறு? களங்கமற்ற நீரோடையைப்போல் தெளிந்த புதிய இன்பத்தில் நீங்கள் மூழ்கி இருக்கையில் நான் அஸம்பாவிதமாய்ச் சொல்வதும் சரியில்லைதான். இருப்பினும், உலகம் இன்று நேற்றுத் தோன்றியதில்லை; மிகமிகப் பழமையானது. ஆனால் புதிய புதிய புதுமைகளையும் விசித்திரங்களையும் தினேதினே கண்டு தனக்குள் சிரித்துக்கொள்ளும் சக்திவாய்ந்தது. ஆகையால் சுமார் 12 வருஷங்களுக்கு முன்பு—இதே உலகம், இதே மனிதன், உம்மைப்போல் கல்யாணம் என்கிற நூதன உணர்ச்சி மயமான கடலில் குதித்துத் திளைத்து தேகம் தெரியாமல்

பூரித்தபோது, இப்போது நான் உமக்கு சொல்வதுபோல், அப்போது ஒரு பெரியவர் எனக்கும் சில புத்திமதிகளைப் போதித்தார். அதை நான் கரும்பாக எண்ணி வாழ்க்கையில் கடைப்பிடித்து ஒழுகாமல் வேம்பாக எண்ணித் திரஸ்கரித்தேன்; திட்டினேன்...தூற்றிப் பிதற்றிப் பலர் எதிரில் அவமானப்படுத்தி அவருடைய உறவையே, சினேகத்தையே, விட்டும் விலகினேன். அன்று அச்செய்கையால் ப்ரமாதவெற்றிச்சிகரத்தைக் கண்டுவிட்டதுபோன்ற களிப்பும் கொழுப்பும் அடைந்து பெருமிதமாகப் பூரித்தேன். ஆனால் பிறகு வெகு சீக்கிரத்தில் பெரியவரின் வாக்கை வேம்பாக எண்ணி மனத்தைப் புண்படுத்திய பலன் என் வாழ்க்கையின் ஸாரமே வேம்பாக மாறி வெறியனைச் செய்துவிட்டது!...சேகர்! நான் சொல்வதிலிருந்து நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் தெரியுமா? நான் ஏதோ தடபுடலாய் இடங்கொடுத்துத் தலைக்குமேல் ஏறவிட்டதின் விளைவால் என் மனைவி ஓடிவிட்டாள்...கெட்டுவிட்டாள்...என்றுதானே நினைக்கிறீர்கள்?'' என்றார்.

திடும்திடும் என்று புதிர்போடுவதுபோல் கேட்கும் கேள்வி சேகரைத் திடுக்கிடச் செய்தது!...கட்டாயம் ஏதோ விபரீதமான முறையில் இவரை அலக்ஷியம் செய்துவிட்டுத்தான் ஓடிவிட்டாள்....என்று முடிக்கப்போவதாக சேகர் தனக்குள் முடிவுகட்டிவிட்டதை எப்படி இவர் அறிந்தார்!... என்று ஆச்சரியமாகிவிட்டது. பதிலே பேசாது மேல்கொண்டு விஷயத்தைக் கேட்கவே அதிக ஆவலுடன் இருந்தான். எஜமானர் மேலும் பேச்சைத் தொடர்ந்தார்.

''மிஸ்டர் சேகர்! இந்தக் காலத்தில் வேண்டுமானால் ஐ. ஸி. எஸ்., ஐ. ஏ. எஸ். எல்லாம் கிள்ளுக்கிரையாகிவிட்டது? மதிப்பே இல்லை. அந்தக் காலத்தில் நான் சீமைக்குச் சென்று ஐ. ஸி. எஸ். பாஸ் செய்துவிட்டு வந்தவன். எனக்கிருந்த கண்ணியமும் கவுரவமும் சொல்லிமுடியாது. பாரம்பரைப் பணக்காரர்களாகையால் மிகவும் சந்தோஷமாகவே வாழ்ந்துவந்தோம். நம் வீட்டுப் புழக்கடைப் பச்சிலையின் வீர்யம் நமக்குத் தெரியாததுபோல் நம் நாட்டிலுள்ள கலாபிவிருத்தியின் மகிமையும் சிறப்பும் தெரியாமல், மேல்நாட்டின் மோகத்தால் சென்று, அங்குள்ள நாகரீகமென்கிற நச்சுப் பொய்கையில் மூழ்கி உத்யோக உயர்வுக்கான படிப்பும் அந்த நாட்டுப் பழக்கவழக்கங்களின் மீது அபார மோகமும் கொண்டு பழகி, கப்பல் கப்பலாக இதயத்தில் ஏற்றுமதி செய்து கொண்டுவந்து இறங்கிவிட்டேன்.

உடனே சில மாதத்திற்கெல்லாம் கல்யாணமாகியது. பெண்ணென்றாலும் பெண்ணு! அழகிலும், அறிவிலும், குணத்திலும், ஒழுக்கம், பக்தி முதலியவைகளிலும் அபாரமான உதாரணப்பெண்ணாய் விளங்கினாள். இத்தனைச் சிறப்பு

களையும் மகாபாவியாகிய நான் அப்போது உணரவில்லை. எனது மேனாட்டுப்ப்ரயாணத்தில் நான் படித்துப் பாஸ்செய்த ஐ. ஸி. எஸ்ஸைவிட நாகரீகத்தை நான் அப்படியே இறக்குமதிசெய்துகொண்டுவந்த பெருமையை—அத்தனையையும்—அந்த உத்தமியிடம் காட்டிப் பேரானந்தமடைய எண்ணி, முதல் முதல் கல்யாணம் நிச்சயமான உடனேயே அவளிடம் பேசிப்பழக எத்தனித்தேன். தோல்வியையே கண்டேன். கல்யாணப்பந்தலில் பேசிக்களிக்க ப்ரியப்பட்டேன். பதில் உத்தாமே இல்லாது ஏமாற்றமடைந்தேன். கல்யாணமாகிய பிறகு தனித்துச் சந்திக்கப் பல முயற்சிகள் செய்தேன். தோல்விதான் அடைந்தேன்.

கல்யாணமாகியதும் ரயிலில் தனியாக ப்ரயாணம் செய்யத் துடிதுடித்தேன். அதிலும் படுதோல்வி! இதெல்லாம் சேர்ந்து எனக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்து அந்தப் பெண்ணிடம் கடும்கோபமாக மாறியது. சீக்கிரமே அவளைக் கொண்டுவிடும்படிக் கடுமையான உத்தரவு பிறப்பித்தேன். அப்படியே நடந்தது. முதல் சந்திப்பிலேயே கடுமையாய்த் திட்டி,...நாகரீகவாழ்வில் பேரானந்தத்தை அனுபவிக்காமல் கர்நாடகப்பேர்வழியாய் இருந்தால் எனக்குப் பிடிக்காது. நான் சீமை முதலிய வெளிநாட்டைச் சுற்றிவந்தவன். ஆகையால் என்னிஷ்டப்படி எல்லாம் நீ நடக்கவேணும்...என்று பிதற்றினேன். அந்த உத்தமியின் முகத்தில் ஒரு சிறிதாவது கோபமோ துக்கமோ வெறுப்போ வரவேண்டுமே! ஒன்றுமே இல்லாமல் புன்னகைப் பதுமையாகவே காணப்பட்டாள். நானே வியப்படைந்தேன். சினிமா, ட்ராமா, ஸர்கஸ், க்ளப்புகள் முதலிய இடங்களுக்கெல்லாம் அவளை பலாத்காரமாய் இழுத்துச்சென்றேன். சிநேகிதர்கள் வீடுகளுக்கெல்லாம் அழைத்துச்சென்று அவளுக்கு விருப்பமில்லாமலேயே கட்டாயமாய்ப் பலருடனும் பேசும்படி உபத்திரவித்தேன்.

மேல் நாட்டு நாரீமணிகள் பழகும் விதத்தைப் பெருமைப்படுத்திப் பேசி நம் பழமையைத் தூற்றியும் ஏளனம்செய்தும் பேசுவேன். அவள் கோபிக்காமல் நம் நாட்டுப் பழமையைப் பற்றியும் கலாசாரப் பண்பாடுகளைப்பற்றியும் ப்ரமாதமாய் எடுத்துப் பேசுவாள்...நான் அதைக் காதிலேயே வாங்காது எதிர்த்துப்பேசி, "என்னிஷ்டப்படி எல்லாம் நடக்கவேண்டும். இல்லையேல் வாழ்க்கையே வெறுத்துவிடும். பிறகு தள்ளிவிடவும் நேரும்!" என்று முன்பின்யோசியாது மிரட்டியும் பேசுவேன்.

விதியே என்று அவள் என்னுடன் சில இடங்களுக்கு வந்தாலும் ஆங்கில நண்பர்களிடம் பேசமாட்டாள். கலகலப்பாகப்பழகமாட்டாள். தேள் கொட்டியதுபோல் தவித்துப் போவாள். எனக்கு அஸாத்யமாய்க் கோபம்வந்து உபத்

திரவப்படுத்தினேன். ஐ. ஸி. எஸ். உத்தியோகஸ்தனின் மனைவியாயிருக்க நீ லாயக்கில்லை என்று சீறிவிழுந்து அவளை வெறுத்து மறுமணத்திற்கும் துணிந்தேன். அவளைத் திருத்த நான் முயன்றேன். என்னைத் திருத்த அவள் முயன்றாள். இரண்டும் பலிக்காததால் "பெண்களின் பெருமை" என்ற கட்டுரையொன்று எழுதி என் ஜேபியில் வைத்துவிட்டு அவள் தற்கொலை புரிந்துகொண்டாள்.

சேகர்:—ஹா!... தற்கொலையா புரிந்துகொண்டார்கள்?...

எஜமா:—ஆமாம்! தற்கொலை புரிந்துகொண்டு நிம்மதியடைந்துவிட்டாள். அந்தக் கட்டுரையை முற்றும் பிறகு படித்துப்படித்து நானே உருகத்தொடங்கினேன். பண்டைய காலத்தின் பெண்களின் சிறப்பையும், கற்பின் உயர்வையும் எழுதியிருந்த அழகைச் சொல்லிமுடியாது. ஐ.ஸி.எஸ்.ஸின் மனைவி, அதிலும் புதியவாழ்வு துடங்கிய உடனே இத்தகைய விபரீதம் சேர்ந்துவிட்டதால், தலைகாட்டமாட்டாது தவித்தேன். அவளுடைய பொன்மொழிகளும் கட்டுரையும் அப்போதும் என்னை முற்றிலும் வசியப்படுத்தவில்லை. மறுபடி சில காலத்தில் மற்றொரு கல்யாணமாயிற்று. மேல்காட்டு நாகரீகத்தின் மோகம் என்னை விடவில்லை. இளையவளை நான் மணந்த உடனே மூத்தவளின் சகலமும் மறந்துவிட்டது. இவளோ ஒரு துளியும் சிரமப்படாது சதா என்னோடு ஊர் சுற்றவும் அசல் மேனாட்டாரைப்போலவே இருக்கவும் சர்வசகஜமாக ஆரம்பித்தாள். சில சமயம் எனக்கே வெறுப்பாகும்படி என் சினேகிதர்களுடன் கைகுலுக்குவதும் அவர்களுடன் தனிமையில் ஊர்சுற்றுவதுமான செய்கையைக் கண்டு கலங்கினேன்.

தினம் விருந்தும் கும்மாளமும் செலவும் அபரிமிதமாயிற்று. என் சொந்தக்காரர்கள் என்மீது கடுங்கோபங்கொண்டு திட்டவும் செய்தார்கள். அவர்களுக்கும் என் மனைவிக்கும் பிடித்தமற்று சண்டை உண்டாகி அநாகரீகமுறையில் விளைந்துவிட்டதால் அவர்கள் விலகியும்போய்விட்டார்கள். கண்ட சினிமாக்காரர்களின் சகவாஸமும் அவளுக்கு உண்டாகிக் கடைசியில் தானே நடிக்கவும் துணிந்து, வீடே கூத்தாடிகள் வாஸமாகிவிட்டது...

அதன் பிறகுதான் மூடிக்கிடந்த என் கண்கள் திறந்தது. பிறகு உபயோகமென்ன? என்னை நான் செருப்பாலடித்துக் கொண்டேன். உத்தமியை வயிறெரியச்செய்து நானே கொலை செய்வதற்கொப்பமுடிந்ததுதான் இந்தப்ராரப்தம் இப்படியாயிற்று. அவளையும் பிரிந்து வேலையை மாற்றிக்கொண்டுவந்து சன்யாசியாகிவிட நினைத்தேன். ஆனால் காஷாயம் வாங்காத சன்யாசியாகவே ஆய்விட்டேன்! சினிமாக்காரர்களால்சீரழிந்து அந்தப் படுபாவி ஊர்சிரிக்கிறாள்...கல்யாணத்திற்கு அழைக்க

வந்த இடத்தில் இந்த உதவாக்கரைக் கதையை ஏன் சொன்னேன் தெரியுமா? உமது உத்தமமான மனைவியை நாகரீக எமனுக்குப் பலிகொடுத்துவிட்டீர்கள். தவிரவும், உங்கள் தங்கையின் போக்கை முளையிலேயே வேரறுக்கவேண்டும். அடிக்கடி அவளை நான் தனிமையில் வெளியில் பார்த்துமிகவும் வெறுக்கிறேன். உங்கள் மனைவியினால் தங்கையும் திருந்தட்டும். இன்னொருசெய்தி. அடுத்தவாரம் முதல் உமக்கு வேறு எஜமானர் வரப்போகிறார். நான் வேறு ஊருக்கு மாற்றிக்கொண்டுவிட்டேன். காரணம்...அந்தப் பப்பாவி இந்த ஊரிலேயே மானங்கெட்டுக் குடிவந்துவிட்டதையறிந்து துடிக்கிறேன். அந்த மூதேவி எங்கே கண்ணில் பட்டுவிடுமோ என்கிற பயத்தினால் நான் இந்த ஊரிலேயே இருக்க விரும்பவில்லை.

நான் ஏதோ காரியமாய் இன்றுகாலை வெளியே சென்று திரும்புகையில் உங்கள் காரில் உங்கள் தங்கையும் இன்னொரு பெண்ணும் அந்தப் பாதகியின் வீட்டில் புகுவதை என் கண்ணால் பார்த்ததுமுதல் உங்களை அழைத்து எச்சரிக்க எண்ணினேன். நீங்களே வந்தீர்கள்...

“என்ன ஸார்’...எனக்கு ஓரே வியப்பாக இருக்கிறதே!... உத்திராதேவி......

“சட்! உத்திராதேவியாம் தேவி!...பத்திரகாளி மூதேவி! ...என்று சொல்லுங்கள். அந்தக் கழுதையின் பெயர் கல்யாணி என்பதாகும்...சரி! சரி! இத்தனை பேச்சுக்களும் அனாவசியம் என்றுதான் எண்ணுகிறேன். இருப்பினும் எனது சொந்த அனுபவத்தைக் கூறி உங்களுக்கு எச்சரிக்கவே சொன்னேன். நாளை கட்டாயம் வருகிறேன்”...என்று தானே மிஷின்போல் கூறிவிட்டு நிறுத்தினார்.

சேகரனுக்கு இவ்விஷயங்கள் ஷாக்கடித்ததுபோலாகிவிட்டது! உத்தம மனைவியை உபத்திரவப்படுத்திக் கொன்றாயிற்று. மறுமனைவியை உயிருடன் பலிகொடுத்து இதயம்வெந்து புண்ணாகிவிட்டது; அதனால்தான் பாவம் இத்தனை வயதில் இவ்வளவு பெரிய கிழவர்போல் காணப்படுகிறார்...ஐயையோ! உத்திரா இவர் மனைவியா?...இத்தகைய பெரும் புகழும் உதயோக கம்பீரமும் அழகும் வாய்ந்த கணவனை விலக்கிவிட்ட மகாபாவி சந்திசிரிக்கிறாள்! ஊரைக்கெடுக்கிறாள்! அந்த மூதேவியிடமா வனஜா போயிருக்கிறாள்...என்று ஓரே குழப்பமாகக் குழம்பிப்போய்த் தவிக்கும் நிலைமையில் பதிலே பேசாமல் திக்பிரமை பிடித்துவிட்டதைக்கண்ட எஜமானர் தன்னுள் அடங்கியிருந்த துக்கம்திர ஒரு பெருமூச்சு விட்டார். எக்கமும், நிராசையின் ஜ்வாலையும் வீச ஒரு சோகச் சிரிப்பு சிரித்தபடியே! மிஸ்டர் சேகர்! என்னுடைய ஜீவிய சரிதையை இன்றுவரையில் நான் பிறருக்கு என்வாயால்

சொல்லியது கிடையாது. ஆனால் சரிதையைச் சொல்லாமல் அனுபவத்தைக்கூறி புத்திமதிகள் மட்டும் சொல்வதுண்டு. இன்று என்னையுமறியாது உள்ளம் துடிதுடித்துப் பொங்கி விட்ட வேகத்தில் நானாகச் சொல்லிவிட்டேன். காலையில் உங்கள் சகோதரியை அந்தச் சண்டாளியின் வீட்டில் பார்த்ததும் என் குடல் குமுறி இதயம் வெடித்துவிடுமேபோலாகி வேதனைசெய்துகொண்டே இருந்தது. பெரிய உத்யோகஸ்த னுடைய விஷயத்தை அதிலும் வாழ்க்கையில் அந்தரங்க மானவிஷயம்... அதைப்போய் தன் கீழ்ப்படிந்துள்ள உத்யோ கஸ்தரிடம் சொல்லலாமா?...சொல்வார்களா! ஆனால் நான் எனது அந்தஸ்தை நினையாமல் மறந்து உங்களுடைய க்ஷே மத்திற்காக நானே சொல்ல முன்வந்ததன் காரணம் என்ன தெரியுமா! காலையில் அந்த மூதேவியின் வீட்டில் உமது சகோதரியைப் பார்த்ததேயாகும். அந்தக் கொலைபாதகி தனது சீரழிந்த மானங்கெட்ட நிலைமையிலும் என் கணவர் இன்னார்; அவரிடம்தான் உங்கள் தமயனார் உத்யோகம் செய் கிறார்...என்று ஜம்பத்திற்காகப் பறைசாற்றுவாள்.

சின்னஞ்சிறுமியின் உள்ளத்தில் அத்தகைய பெரிய மனி தரின் மனைவியா இந்த சினிமா நக்ஷத்திரம்! இவளிடம் நாமும் சிநேகம் செய்தால் என்ன?...சினிமாவில் நடித்தால்தான் என்ன?...என்ற துணிபும் கப்பாசையில் குண்டு தைரியமும் உண்டாகி அதனால் உமது குடும்பமே நாசமாகிவிடும் என்கிற பயத்தினால் நான் இத்தனை விஷயங்களையும் நீங்கள் அறிய வேண்டும் என்று நினைக்காமலேயே அறிவிக்க என் மனம் தூண்டியது. என்னுடைய செல்லரித்துப்போன பயங்கரச் செய்தி உமக்கு வெறுப்பாகக்கூட தோன்றலாம்...

என்பதற்குள் சேகர் இடைமறித்து,''தாங்களப்படிச்சொல் லக்கூடாது. எனது வாழ்க்கைப் படகைச் சரியான பாதையில் திருப்பிவிட்ட மகத்தான ஆசாரியனைப்போலத் தாங்கள் விளங்குகிறீர்கள். நானும் நாகரீகப் போர்வைக்குள் புகுந் திருப்பவன்தான். தாங்கள் சொல்வதுபோலவே என் மனை வியை நான் வற்புறுத்தி சினிமாவுக்கு அழைத்தேன். அவள் எடுத்துக்கூறிய நீதிகள் என்னையே ப்ரமிக்கச்செய்தன. அத் தகைய மனைவியால் விளைந்த மகத்தான விபத்தைத் தாங்கள் கூறக்கேட்டு சரீரமே நடுங்குகிறது. என் தங்கையை நீங்கள் அங்கு பார்த்ததாகச்சொல்வதுகேட்டுப்பின்னும் இதயம் வேத னைக்குள்ளாகிறது. வீட்டிற்கு வந்துவிட்டாளா என்று பார்க்க வேண்டும். நாளை நீங்கள் கட்டாயம் வரவேண்டும். நான் போய்வருகிறேன். இன்று அரை நாள் லீவு வேண்டும்; நாளை யும் முழுநாள் வேணும்; எழுதிவைக்கிறேன். போய்வருகி றேன். இத்தனை நேரம் ச்ரமம் கொடுத்ததற்கு மன்னிக்கவும்'' என்றுகூறி விடைபெற்று வெளியே வந்தான்.

சிலுசிலுப்பான மின்ஸார விசிறியின் கீழ் உட்கார்ந்திருந்தும் அவன் கால்முதல் தலைவரையில் நெருப்பினால் தகிக்கப்படுவதுபோன்ற எரிச்சலும் வேதனையும் உண்டாகித் தபிக்கச் செய்தது.

---

## 13

நாய்களின் குலைப்பைக் கேட்டு நடுநடுங்கிப்போய் நிற்கும் ட்ரைவருக்குத் தான் இப்போது,"என்ன செய்வது? எப்படி இந்தப் பெண்களை இழுத்துக்கொண்டுபோய் வீட்டில் தள்ளுவது?...எஜமானருக்கு எவ்விதம் சமாதானங்கூறுவது?... எனக்கல்லவா தர்மசங்கடமாகிவிட்டது. கொலைக்கும் அஞ்சாத படுபாவி...கிராதகன்—குடிகெடுக்கும் குண்டுணி—கந்தசாமியல்லவா காரில் உள்ளேபோயிருக்கிறான். இந்தப் பெண்களோ இன்னும் வரவில்லையே! முதலில் வீட்டிற்குப்போய் எஜமானரிடம் விஷயத்தைச்சொல்லி அவர்களையும் அழைத்துக்கொண்டுவந்து இந்தப் பெண்களைக் கூட்டிப்போகலாமா? என்ன செய்வேன்?"...என்று தவிக்கிறான்.

முதலில் கண்ணைத்திறந்துபார்த்து விஷயமறிந்த கிரிஜா உண்மையில் மனம் கலங்கி நடுங்கிப்போய் வனஜாவின் தெளிவையே எதிர்பார்த்துக்கொண்டிருந்தாள். சிறிது தாமதமாகவே வனஜா கண்ணைத் திறந்து கலங்கிக்குழம்பிப் பிறகு உத்திராதேவியைக் கவனித்ததாகச் சென்ற அத்தியாயத்தில் கூறியபடி தன்னுடைய பயங்கரமான நாய்க்கடி நிலைமையையும் மறந்து, "தாங்கள்...தாங்கள்...என்று இழுத்து, அவள் முகத்தையே பார்த்தாள்.

உத்திரா:—கலகலவென்று வெங்கலமணி அடிப்பதுபோன்று சிரித்துவிட்டு...சினிமா நக்ஷத்திரம் தாங்கள்தானா? என்று தானே கேட்க ஆரம்பித்துத் தவிக்கிறாய்...என்று முடிப்பதற்குள், "ஆம்! ஆம்!...அதுவேதான் கேட்கிறோம்!" என்று ஆர்ப்பரித்தார்கள்.

மீண்டும் நக்ஷத்திரம் நகைத்தவாறு, "சந்தேகமேவேண்டாம். உத்திராதேவி நான்தான்; என்ன சமாசாரம்? எங்கே வந்தீர்கள்? நீங்கள் யார் வீட்டுப் பெண்கள்? என்னை எதற்காக இவ்வாறு விறைத்துப்பார்க்கிறீர்கள்?" என்றுகேட்டாள்.

அத்தனை வலியிலும் வனஜா சடக்கென்று எழுந்து உட்கார்ந்துகொண்டு, "ஹா!...தாங்களா உத்திராதேவி?"... "சந்தி சிரிப்பு" என்கிற படத்தில் பெரும் புகழுடன் உலகப் பரிசும் பெற்ற நக்ஷத்திரம் தாங்களா? "சோம்பேறி!" என்ற படத்தில் அபாரமாய் நடித்துப் புகழ்ச் சிகரத்தை எட்டி

விட்ட நடிகை உத்திராதேவி நீங்கள்தானு? உங்களை நேரில் பார்த்து எங்கள் மன ஆவலடங்கப் பேசிப் பின் கல்யாணத்திற்கு அழைப்பதற்காக வந்தோம். எங்கள் துரத்ருஷ்டம் தான் உங்களுடைய நாய் கடித்துவிட்டது. அதனால் என்ன?...பாதகமில்லை!...உங்களைப் பார்க்கவேண்டுமென்று பரிதவித்தோம். நீங்கள் நடித்த எந்தப் படமாகட்டும், ஒரு தரத்திற்குப் பத்துதரம் போய்ப்பார்ப்போம்!'' என்று புகழத் தலைப்பட்டாள்.

கிரிஜா:—நீங்கள் நடித்த ''தலைவிதி'', ''கண்ணராவி'' என்கிற இரண்டு படத்தையும் நானும் வனஜாவும் சுமார் 15 தரத்திற்கு மேல் பார்த்திருக்கிறோம்! அத்தனை ஜோரான படம் அது! உங்களைப்பார்த்தாலே எங்கள் ஜன்மம் சாபல்யமடைந்துவிடும் என்று எண்ணி ஓடிவந்தோம்.

வனஜா:—நீங்கள்தான் உத்திராதேவி என்று நாங்கள் நம்பவே முடியவில்லையே! படத் தோற்றத்திற்கும் நேரில் பார்ப்பதற்கும்...

இதற்குள் நாம் முன்பு தெரிவித்தபடி காரில் வந்தவர்கள் உள்ளே வந்தார்கள். ''வணக்கம், உத்திராதேவி! அந்த பஸந்த்ஸேட் சரியான்படி வலையில் விழுந்து 5 லக்ஷ ரூபாய்க்கு ஆக்ஷேபணையே இல்லாமல் கை எழுத்துப்போட்டு ஒப்புக்கொண்டுவிட்டான்'' என்று குஷியாய்த் தன் போக்காகச் சொல்லிக்கொண்டே வந்தவன், இங்கு கட்டுகளுடன் பலே ஷோக்காக இரண்டு நாரீமணிகள் படுத்திருப்பதைக் கண்டு வெகுவெகு வியப்புடன் உற்றுநோக்கிவிட்டு, ''பலே பேஷ்! உத்திராதேவி! முகவெட்டு அபாரமாயிருக்கிறதே! எந்தப் பக்கம் 'ஆங்கில்'வைத்து எடுத்தாலும் வெகு ஜோராக இருக்கும்போலிருக்கிறதே! எக்ஸ்ட்ராவுக்காகப் பிடித்திருக்கிறுயா?'' என்று சொல்லிக்கொண்டே வந்து வெகு சுதந்திரமாய் வனஜா படுத்திருந்த கட்டிலின் மீதே உட்கார்ந்து உற்றுப்பார்த்தான்.

என்னதான் நக்ஷத்திரமண்டலத்தில் தத்திக்குதித்துத் தாண்டவமாடவேண்டும் என்ற ஆசை, வெட்கத்தையும் பயத்தையும் அறியாது தலைதூக்கி நிர்த்தனம் செய்து, துணிச்சலுடன் வரச்செய்துவிட்டபோதிலும், அசல் எம ஸ்வரூபம் போல் பயங்கரமான தோற்றத்துடன் வெகு தைரியமாய்ப் பக்கத்தில்வந்துஉட்கார்ந்ததைக் கண்ட வனஜாவுக்குத் தூக்கி வாரிப்போட்டது. சடக்கென்று சுருட்டிமுடக்கிக்கொண்டு எழுந்திருக்க முயன்றாள்.

கிரிஜாவும் தன்னையறியாதபடி பயந்து நடுங்கிப்போய்த் தானும் அலறியடித்துக்கொண்டு எழுந்து நின்றாள். ''சே! சும்மா இரும்மா!'' என்று வந்த தடியன் இருவரையும் பார்த்துக் கையை அமர்த்தினான். மான் மிரளுவதுபோல்

மிரளமிரள விழித்தபடியே நாய்க்கடியின் வலிதாங்காமல் துவண்டுபோய் ஒருபுறமாய் அமர்ந்தவாறு ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டார்கள்.

இதற்குள், இவர்கள் நடிகைகள் அல்ல என்ற விவரத்தை நக்ஷத்திரம் வந்தவனிடம் கூறிவிட்டு,‘ நீங்கள் சற்று வெளியே இருங்கள்; நான் இவர்களைப் பேசியனுப்புகிறேன்'' என்ருள்.

வந்தவன்:—நடிகை என்று பட்டம் கட்டிக்கொண்டா நீ பிறந்தாய்? உன் புகழ் வெளிநாடெல்லாம் சக்கைபோடு போட்டு ஆட்டுகிறது! நீயும் ஆரம்பத்தில் இப்படித்தானே மூணுமூணுத்தாய்!...ஏ குட்டிகளா! இதோ பாருங்கள்; இப்போது ஒரு அத்புதமான கதை “அபசகுனி'' என்கிற படத்தில் நடிக்க 5 லக்ஷ ரூபாய் இந்த நக்ஷத்திரம் ஒருத்திக்கே வாரி வழங்கி ‘புக்' செய்தாயிற்று; நீங்களும் இப்படத்தில் நடித்தால் பேருக்கு 5 ஆயிரம் முதல் தடவையாகப் போடுகிறேன். பிறகு ஸைபர்கள் ஏறிக்கொண்டேவரும்!......தெரிந்ததா?....அனுயாஸமாய் இந்த ப்ரதான நடிகையுடன் ஜோடி ரத்தினமாகிவிடுவீர்கள். இந்தச் சந்தர்ப்பத்தைக் கைவிட்டுவிட்டால் பிறகு கஜகர்ணம்போட்டால்கூட உபயோகப்படாது...என்று தனக்குத்தானே பேச்சைக் கொட்டியளந்ததோடு,“அடேடே! நாய்கடித்தால் மகத்தான விஷமாயிற்றே! அது ரத்தத்தில் கலக்காதவாறு உடனே ஜாக்ரதையாய்ப் பார்க்கவேணுமே! நாய்க்கடிக்காகவே ப்ரத்யேகமாய் வைத்யம் செய்யும் நிபுணர் நாகராஜன் எனக்கு மிகமிக சிநேகிதம். அவருடைய நர்ஸிங்ஹோமில் கொண்டுவிட்டால் உடனே சரியானபடி சிகிச்சைசெய்வார்...உம்!கிளம்புங்கள்!...உத்திராதேவி! பெரியமனிதர்கள் வீட்டுப்பெண்களுக்கு உன் வீட்டில் விபத்து வந்துவிட்டால் நீதானே அதற்கான சிகிச்சைசெய்து அனுப்பவேணும். கமான்! கிளம்பு! இப்போதே நாம் அங்கு கொண்டு காட்டிப் பிறகு அவர்கள் வீட்டிலேயே கொண்டு விட்டுவிடலாம்''...என்று தடபுடலாகப் பேசிவிட்டு, உத்திராதேவியைத் துரிதப்படுத்தினன்.

இதைக் கேட்ட இரு பெண்களுக்கும் சொல்லவும் முடியவில்லை; போகவும் ஏதோ ஒருமாதிரி பயமும் லஜ்ஜையும் தோன்றிவதைக்கிறது. “வேண்டாம்!...நாங்கள் வீட்டிற்குப் போய்ப் பிறகு டாக்ட்டரிடம் கொண்டுகாட்டுகிறோம்'' என்று வனஜா தழுதழுத்தவாறு சொல்கிருளேயன்றி வார்த்தை தாட்டியாய் வரவில்லை.

கிரிஜாவுக்கோ “நாய்க்கடி ஸ்பெஷல் டாக்ட்டரிடம்காட்டிக்கொண்டபிறகு வீட்டிற்குப் போனல் நல்லது; அதோடு ஸினிமா நக்ஷத்திரத்தின்மீது வீட்டிலுள்ளவர்களுக்கு நல்ல அபிப்ராயம் உண்டாகும்; அடிக்கடி இதையே சாக்காகக் கொண்டு நக்ஷத்திரம் நம் வீட்டிற்கு வருவதற்கும் நாம்

அவர்கள் வீட்டிற்குப் போவதற்கும் சரியானபடி பழக்கமுண்டாகிவிடும்; ஆகையால் அங்குப் போனபிறகே வீட்டிற்குப் போகலாம்... என்று தோன்றுகிறது”—என்று வனஜாவிடம் அழுத்தமாகச்சொன்னாள். வனஜாவுக்கும் அதுவே சரியாகத் தோன்றியதால் இசைந்துவிட்டாள்.

அடுத்த சில வினாடிகளுக்குள், உத்திராதேவி தத்ரூபம் கந்தர்வலோகத்துப் புதுமைப் பெண்ணோ!... தேவலோக ரம்பையோ!... என்று வியப்புற்று, மோகிக்கும்படி வனமோகினி போல் வந்து நின்றாள். புன்னகை தவழும் வதனத்துடன் “சகோதரிகளே! வாருங்கள்! என்னுடைய பொல்லாத நாயின் செய்கையால் உங்களுக்கு இத்தகைய ஆபத்து வந்துவிட்டதை நான்தானே கவனித்துப்பரிகாரம்செய்யவேண்டும்; வாருங்கள்! கார் ஷெட்டிலிருக்கிறது. எடுத்துக்கொண்டுபோகலாம். முதலில் ஏதாவது ஆகாரம் சாப்பிடுங்கள்... பட்லர்! நால் கப் காபி கொண்டுவா!... என்றாள்.

அடுத்த நிமிஷமே தயாராகவந்த காப்பியை எல்லோரும் குடித்துவிட்டு நாஸுக்காகக் கையில் சில பிஸ்கெட்டுகளை எடுத்துக்கொண்டு கிளம்பினர். அந்த மனிதனும் உத்திராவும் பெரிய ஸிகரேட்டுகளைப் பற்றவைத்துப் புகைப்பதைக்கண்ட இரண்டு நங்கைகளுக்கும் வியப்பும் திகைப்பும் கப்பிக்கொண்டது! இதைப்பார்த்த உத்திராதேவி, சிரித்தபடியே என்ன பார்க்கிறீர்களம்மா? எங்களுடைய தொழிலுக்கு சுகத்தையும் ஆரோக்யத்தையும் கொடுக்கும் பலவித ஸாதனங்களில் இதுவும் ஒன்று” என்று கூறிக்கொண்டே காரை எடுத்துத் தானே ட்ரைவ்செய்யவாரம்பித்துப் பின்பக்கத்து வழியாகவே விர்ரென்று ஒய்யாரமாக விட்டுச்சென்றாள்.

பங்களாவின் அபூர்வ வனப்பையும் உத்திராவின் சிநேகம் கிட்டியதையும் அவளே காரை ஓட்ட அந்தக் காரில் தாம் செல்லும் பாக்யம் கிட்டியதையும் இந்த இரண்டு நங்கைகளும் சொர்க்கபோகமாக எண்ணிப் பூரித்துச் செல்லும் ஆனந்தக் குதூகலத்தில் நாய்க்கடியின் பாதையைக்கூட சற்று மறந்துவிட்டார்கள் என்றால் மிகையாகாது.

வீதியில்நின்று பதறிக்கொண்டுள்ள ட்ரைவர், பாழும் பங்களாவில் யாருமே வாசல்பக்கம் வராததால், “ஐயா!” என்றும் “அம்மா!” என்றும் கூப்பிட்டுப் பார்த்ததெல்லாம் விழலுக்கிறைத்த நீர்போலாகிவிட்டது. நாயின் பயத்தையும் பொருட்படுத்தாமல் பங்களாவின் முகப்புவரையில் மெல்லச் சென்றுபார்த்தான். பெரிய கன்றுக்குட்டியளவில் நிற்கும் நாயைப் பார்த்ததும் பேயை.... பிசாசை... எமனைப்பார்ப்பது போல் பயம்உண்டாகி நடுங்கியது!... இனி இம்மாதிரி பார்த்து பயப்படுவதில் பயனில்லை. எப்படியாவது வீட்டிற்குப்போய்ச்

சின்ன எஜமானரிடம் சகலத்தையும் சொல்லியே யாகவேண்டும்... என்று எண்ணியவனாய்க் காரை எடுத்துக்கொண்டு வெகு வேகமாய் வீட்டிற்கு வந்தான்.

வீட்டு வாசலிலேயே காத்திருந்த மீனாட்சி காரின் ஹாரனைக்கேட்ட உடனே வாசலுக்கே ஓடிவந்து, "என்னப்பா! குழந்தைகள் வந்தார்களா?" என்று பதைக்கப் பதைக்கக் கேட்டாள். தேகமே நடுங்கும் உணர்ச்சியுடன், "அம்மா! குழந்தைகள் சினிமாக்காரி வீட்டுக்குப் போகும்படிச் சொன்னாங்க; நான்வாண்டாம்னு கூடத் தடுத்துப்பார்த்தேனுங்க; கேக்கலே. வேட்டை நாயிங்க வந்து கடிச்சுட்டதாம்... என்று முடிப்பதற்குள், "ஐயையோ! நாய் கடித்துவிட்டதா! நீ பார்த்தாயா? உனக்கு யார் இந்த விஷயத்தைச் சொன்னார்கள்? குழந்தைகள் இப்போது எங்கே இருக்கிறார்கள்?" என்று துடித்தவாறு கேட்கையில் அவள் கணவர் ஓடிவந்து, "எம்பா! குழந்தைகள் எங்கே?" என்றார். மீனாக்ஷியின் துடிதுடிப்பையும், பதற்றத்தையுங் கண்டு பயந்த அவள் கணவரும் நடுங்கிவிட்டார். ஏதோ கார் விபத்து வந்துவிட்டதாக ஒரு எண்ணம் தோன்றியதால் ட்ரைவரை உற்று நோக்கி, "என்னப்பா விஷயம்?" என்று அதட்டிய குரலில் கேட்டார். இதற்குள் நடந்த சகலத்தையும் ட்ரைவர் விடாமல்கூறியதைக் கேட்டது தான் தாமதம்... அவருடைய ஆத்திரம் உச்சஸ்தாயியை எட்டிவிட்டது.

அதே சமயம் சேகரும் டாக்ஸியில் வந்து இறங்கினான். தன்கார் வாசலில் இருப்பதைத்தூரத்தில் கண்ட உடனேயே, "சரி! வீட்டிற்கு வனஜா வந்துவிட்டாள்" என்கிற சந்தோஷமே உண்டாகியது. காரைவிட்டு இறங்கியதும் தாயும் தகப்பனும் ட்ரைவரும் இருக்கும் நிலைமையைக்கண்டு சந்தேகித்தவாறு அருகில் வந்து விஷயத்தைக் கேட்டான்.

ட்ரைவர் சகலத்தையும் கூறியதைக் கேட்டதும் தீயில் குதித்ததுபோன்ற அதிர்ச்சியும் அதைவிட ஆயிரம் பங்கு அதிகரித்த அவமானமும் மனத்தில் தோன்றி ஒரேயடியாய்க் கலக்கிவிட்டது. வீட்டிலோ விவாகவிருந்திற்காக யார்யாரோ அன்னியர்கள் கூடியுள்ள சமயத்தில் அஸங்கியமான விஷயம் பரவிவிடப்போகிறதே! சினிமாக்காரி வீட்டிற்கு ரகஸியமாய்ப் போய் நாய் கடித்துவிட்டதென்பதைக் கேட்டால் சிலர் பரிகஸிப்பார்கள்... சிலர் வம்பளப்பார்கள்... விருந்தே கலகலத்துவிடுமே!... என்று பயந்தபடி தாய் தந்தையருக்கு நல்லதனமாய்க் கூறி 'இதையாருமே வெளியிடவேண்டாம்; நான்போய் முதலில் கூட்டிக்கொண்டு வந்துவிடுகிறேன்' என்று சமாதானம் சொல்லிவிட்டு ஒரே ஓட்டமாய் மீண்டும் காரில் சென்றான்.

தன்னுடைய எஜமானரின் மனைவியா இந்த அல்பக் கழுதை! இதன் முகத்தில் விழித்துக்கொண்டா தான் அங்குச் செல்வது...என்று வருந்தியபடியே அவ்வீட்டையடைந்தான். கார் நேராகப் போர்டிகோவிலேயே போய் நின்றது; அங்கு தயாராகக் காத்திருந்த பெரிய வேட்டை நாய்களைப் பார்த்ததும் சேகரனையும் ட்ரைவரையும் ஒரு முழ உயரம் தூக்கி வாரிப்போட்டு நடுக்கலுறச் செய்தது!

கார் கம்பீரமாகவந்து நின்றதால் நாயை அதன் அதிபன் அடக்கிக் கட்டிவிட்டிருந்தான். மற்றொரு அழகிய அணங்கு தடபுடல் உபசாரத்துடன் காரருகில் வந்து, "யாரு!... யாரைப் பார்க்கவேணும்?" என்று கேட்டாள். சேகரன் கோபம்....வெறுப்பு....ஆத்திரம்......அவமானம்......எல்லாம் கலந்த த்வனியில், "இந்த வீட்டுக்கார அம்மாளைத்தான் பார்க்கவேண்டும்" என்பதற்குள், ட்ரைவர், "காலையில் இரண்டு பெண்கள் வந்தார்களே! அவர்களைக்கூட நாய் கடித்ததே! அவர்களை அழைத்துப்போக வந்திருக்கிறோம்" என்றான்.

"ஓ! அதுவா? சற்றுமுன்புதான் அந்தப் பெண்களுடைய சொந்தக்காரர் ஒருவர் வந்து காரில் அழைத்துச் சென்றுவிட்டார்கள். எங்கள் எஜமானியம்மாள் ஷூட்டிங்கிற்குப்போய் விட்டார்கள்" என்று கூறிவிட்டு, பதிலுக்கு எதிர்பார்க்காமல் உள்ளே போய்விட்டாள்.

இதைக் கேட்டதுதான் தாமதம்..எரிமலையே சேகரன் தலைமீது புரண்டு விழுந்துவிட்டதுபோன்ற அபாரமான அதிர்ச்சி உண்டாகி, கண்களில் தீப்பொறி பறந்தது!

ஏற்கெனவே சினிமா என்றாலும் சினிமா நக்ஷத்திரங்கள் என்றாலும்மோகம் தலைக்கேறியுள்ள சேகர், லக்ஷ்மியின் வார்த்தைகளால் ஒரு சிறிது மாறுபட்டிருப்பினும் நேராக சினிமா ராணியின் வீட்டிற்கே போயிருக்கிறாரே! எப்படி மனம் தளர்ந்துவிடுமோ...என்ன நடக்குமோ! என்கிற கவலை லக்ஷ்மியின் மனதில் எதனாலோ அறியமுடியாதபடி விசித்திரமாகவே தோன்றியது. மறுபடியும் கார் திரும்பி வரும் வழியையே எதிர்பார்த்துக்கொண்டிருந்தாள்.

மீனாக்ஷியின் சந்தோஷமும் குதூகலிப்பும் தவிடுபொடியாகி ஓரேயடியாய் இதயம் குன்றி நடக்கக்கூட முடியாதபடி விழுந்துவிட்டாள். அவள்கணவனுக்கோ என்னசெய்வதென்று யோசித்து விருந்தையே ஏதாவதொரு தக்க காரணத்தைக்கொண்டு நிறுத்திவிடலாமா! என்று துடிக்கிறது மனம்.

சேகர் சென்று சீக்கிரமே திரும்பிவந்துவிட்ட கார் ஓசையைக்கேட்ட மூவரும் பரபரப்புடன் ஓடிவந்தார்கள். சேகர்,

கண்களில் தீப்பொறிபறக்க...யாரோ சொந்த மனிதர்கள் வந்து அந்த இருவரையும் அழைத்துச்சென்றுவிட்டார்களாமே! சினிமாக்காரி சினிமாவுக்கு நடிக்கப்போய்விட்டாளாம். நாயாவது நாய்! நம்ம சீமைக்கன்றுக்குட்டியளவல்லவா இருக்கிறது! சொந்தக்காரர்கள் யாருக்கு இந்த மூதேவிகள் அந்த சினிமாக்காரி வீட்டிற்குப்போனது தெரிந்து வந்து அழைத்துச் சென்றிருக்கக்கூடும். எனக்கு ஒன்றுமே புரியவில்லை. பந்துக்கள் வீடுகளில் போய்த் தேடிப்பார்க்கலாம் என்றால் நாமே இந்த விஷயத்தை ப்ரசாரம் செய்வதுபோலல்லவா ஆகும். இப்போது என்ன செய்யலாம். நேற்றிரவு அவள் நடந்துகொண்டமாதிரியும் செய்கையும் எனக்கு ஏதோ கலக்கமும் பயமுமல்லவா உண்டாகிறது. முட்டாள்தனமாய் அம்மா கொடுத்த இடந்தான் இது....என்று கர்ஜித்தான்.

இதைக்கேட்ட அவன்பிதா,"சேகர்! அம்மாவை மட்டும் ஏன் சொல்கிறாய்! அம்மாவை இவ்வளவு தூரத்திற்குக் கொண்டுவந்து, அவளுடைய மூடத்தனமான ஆசையை வளர்த்த தர்மப்ரபு நீயுந்தான் என்பதை மறக்காதே! நான் ஆதிமுதல் முட்டிக்கொண்டேனே, கேட்டீர்களா! நேற்றிரவு சினிமாவுக்கு நீதானே வலுவில்கூட்டிக்கொண்டு போனாய். இப்போது இந்த அவமானத்தை யாரடா சகிப்பது? இந்த வெட்கக்கேட்டை யாரிடம் முறைஇடுவது? எந்த சினிமாக்காரனாவது சொந்தக்காரன் என்று சொல்லி, இந்த சனியன்களைக் கொள்ளைநகைகளுடன் இழுத்துக்கொண்டு போயிருப்பானோ என்னமோ! ஒன்றுமே புரியவில்லையே! என்று கடுங்கோபத்துடன் துள்ளிக்குதித்தார்.

இதற்குள் லக்ஷ்மி தைரியமாய் அங்குவந்து வணக்கத்துடன், "மாமீ! இந்த விஷயத்தை இப்படி ஆத்திரப்பட்டுப் பேசி நாமே பகிரங்கப்படுத்துவது மிகவும் ஆபத்தாக முடிந்துவிடும். வீட்டில் வந்துள்ளவர்களுக்குக்கூடத் தெரியக் கூடாதென்று நான் வனஜாவுடன் டெலிபோனில் பேசுவது போல்பேசி நடித்து ஒருவாறு சமாதானப்படுத்துகிறேன். நீங்கள் நம்முடைய முக்யமான பந்துக்கள் வீட்டிற்கெல்லாம் ஏதோ சாக்குவைத்துக்கொண்டுபோய் நோட்டம்பார்த்து வாருங்கள். அதிலும் தகவல் கிடைக்கவில்லை என்றால் பிறகு யோசிப்போம்...என்று சாந்தமாக் கூறினாள்.

சேகர்:—எந்த சொந்த மனிதர்கள் அழைத்துச் சென்றாலும் நம்ம வீட்டில் கொண்டுவிடுவார்களேயன்றி அவர்கள் வீட்டிற்கு அழைத்துப்போகமாட்டார்கள்; அப்படிப்போனாலும் உடனே தகவல்கொடுக்காமல் இருக்கமாட்டார்கள். ஆகையால் இதில் ஏதோ ஒரு மர்மம்...பயங்காம்...புகுந்திருப்பது நிச்சயம். ஒவ்வொரு பெண்ணின் உடம்பிலும் சுமார் 15

ஆயிரம் ரூபாய் நகைகள் அணிந்திருப்பதால் அந்த சினிமாக்காரியே ஏதாவது சூழ்ச்சி செய்திருப்பாளோ என்றுதான் நான் பயப்படுகிறேன். அந்த நாசமாய்ப்போன உத்திராதேவியாம், உத்திராதேவி—பாதகி! த்ரோகி! பெயரைப்பாரு! அந்தச் சண்டாளி —குடிகெடுக்கும் நாய்— யார் என்பதைத் தெரிந்தால் நீங்கள் துள்ளிக்குதிப்பீர்கள்! என் ஆபீஸில் மேல் அதிகாரி ஸ்ரீமான். பாஸ்கரன் I. C. S. இருக்கிறாரே! அந்த உத்தமருடைய மனைவியாம் இந்தக் கொலைபாதகி! ...என்றதைக் கேட்டதும் உண்மையில் லக்ஷ்மியின் சரீரமே திடுக்கிட்டு நடுங்கியது.

சேகரின் பிதா இதைத் தாங்கமுடியாத அதிர்ச்சியுடன் "என்ன! என்ன! பாஸ்கரனின் மனைவியா! உண்மையாகவா!" என்று வியப்பே வடிவமாய்க்கேட்டார். மீனாக்ஷியின் இதயத் துடிப்பில் பேசமாட்டாது வாயே அடைத்துவிட்டதென்றால் மிகையாகாது. தன் பெண்ணைக் காணாத அதிர்ச்சியொரு புறம் வதைக்கிறது. கூடச்சென்றுள்ள கிரிஜாவின் வீட்டார் வந்து கேட்டால் என்ன சொல்வது என்கிற திகில் பிடரியைப் பிடித்து உலுக்குகிறது. எல்லாவற்றையும்விட இரவல் நகைகளை வாங்கித் தன் மகளுக்குப்போட்டு அனுப்பியதுமல்லாமல் தங்கத்தில் குங்குமபரணி சந்தனக்கிண்ணி இரண்டையும் இரவல் வாங்கிக்கொடுத்தனுப்பியுள்ள பயங்கரம் பூதம்போல் எதிரில் உறுமுகிறது. இத்தனை அவஸ்தைக்கு மத்தியில் அவள் வாயடைத்துப்போய் ஊமையாயிருப்பதில் என்ன வியப்பு! இத்தனைக்கும் மத்தியில் 'அத்தனை பெரியமனிதனின் மனைவியா உத்திராதேவி!' என்று மட்டும் தனக்குள் ஒரு மின்னல் தாக்குதல்போல் எண்ணினாள்.

லக்ஷ்மி அதிர்ச்சியும் ஆச்சரியமும் பொங்க...ஸ்வாமீ! இத்தகைய பெரிய மனிதர் சம்மதித்தா இவள் இத்தகைய நடிகையாக இருக்கிறாள்!...என்றாள்...உம்.. சம்மதிப்பதா... உத்தமமான புருஷனை மாலையிட்டும் அந்த பெருமையை அபாரமான பாக்யத்தை அனுபவிக்கக் கொடுத்துவைக்காத நாய். ஓடிவந்து தான்தோன்றியாகிச் சந்தி சிரிக்கிறது! அந்த மகனை ஆண்டிப் பரதேசியாக்கி மனவேதனையின் பலனாய்க் கிழக்கோலமும்பூண்டுத் தவிக்கும்படிச் செய்துவிட்ட பாதகி அந்தப்பாவியை மனத்தால் நினைத்தால்கூட பாவம்வரும்... அந்த உத்தமர் வாயினாலேயே இன்றுதான் இந்த விஷயங்களைச் சொன்னார்...இப்போது அந்தத் துணிச்சல்கழுதைகளை எங்குத்தேடுவது? என்று சத்தம் போட்டுக் கத்தினான். ஒவ்வொருவருடைய நெஞ்சிலும் இவ்வொருப்போராட்டம் எழுந்து வதைத்தது.

183180

# மகாத்மாஜி ஸேவா சங்கம் (REGD)

## திருவல்லிக்கேணி

1954ஞ மார்ச்சுமீ 7வ வருஷாந்திர விழா நடந்ததற்குப் பிறகு யுகாதிப் பண்டிகை மிகச்சிறப்பாக நடந்தது. ஸ்ரீராமநவமி உத்ஸவத்தை முன்னிட்டு ஒன்பது நாளும் பஜனையும், பண்டித திருவாலி ராமாநுஜாசார்ய ஸ்வாமியால் ஸ்ரீபாசுரப்படி ராமாயணம் உபன்யாஸம் மிக ஆனந்தமாக ஒன்பது தினங்களும் நடந்து, ஸ்ரீராமநவமியன்று பட்டாபிஷேக மஹோத்ஸவம் மங்களகரமாக முடிவுபெற்றது. தினமும் அங்கத்தினர்களே உபயங்களை மிக உத்ஸாகத்துடன் சிறப்பாக நடத்தினர்கள்.

ஏப்ரல்மீ 10வ பாலிகா கழகத்துச் சிறுமிகளுக்குப் பாட்டுப் போட்டியை ஸ்ரீமதிகள். M. G. தங்கம்மாள், T. A. பூமா, K. R. ராதா மூவர்களுடைய தலைமையில் நன்றாக நடத்தினர்கள். பல குழந்தைகளுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன.

சித்திரைவருஷப் பிறப்பை முன்னிட்டு 5 வயதுக்குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரையில் முறையே பலபல விளையாட்டுக்களை நடத்திக் களித்தார்கள். பலபேர்கள் பரிசுகளைப் பெற்றார்கள். அறிவுப் போட்டியில் பரிசுபெற்ற கட்டுரை - கதைகளைச் சென்ற மோகினியில் ப்ரசுரித்திருந்தது நினைவிருக்கலாம்.

ஏப்ரல்மீ 26வ அன்று குழந்தைகளின் வித்யாலயத்தின் பெற்றோர்கள் தினத்தை கார்ப்பரேஷன் கமிஷனர் ஸ்ரீ V. N. சுப்பராயன் அவர்கள் தலைமையில் மிகமிக ஆனந்தமாக நடத்தப்பட்டது. வித்யாலயத்தின் குழந்தைகளே பலவித கதம்ப நிகழ்ச்சிகளை நிகழ்த்தினர்கள். தலைவர் குழந்தைகளை வாழ்த்தி வித்யாலயத்தின் அபிவ்ருத்தியைப் பாராட்டிப் பேசினர். குழந்தைகளுக்குப் பல பரிசுகளும் தின்பண்டங்களும் வழங்கப்பட்டன. முறையே குழந்தைகளுக்குப் பரீக்ஷை நடத்தி ஜூன் 21வ வரைவிடுமுறையளிக்கப்பட்டது.

மேமீ 5வ அன்று புதிதாக E. S. L. C. வகுப்பு ஸ்ரீமதி. சகோதரி சுபலக்ஷ்மியம்மாள் அவர்களால் ஆரம்பிக்கப்பட்டது.

மேமீ 14வ அன்று தேவி உபாஸகி ஸ்ரீமதி ராஜம்மாள் அவர்களால் ராதா கல்யாண ஹரிகதை மிகவும் ஆனந்தமாக நடைபெற்றது.

15வ அன்று ஸ்ரீமதி S. பத்மா அவர்களால் பாலிகா கழகத்தின் சார்பில் வீணைக் கச்சேரி மிகமிக இனிமையாய் நடந்தது. வாய்ப்பாட்டும் வீணையும் மனோரம்யமாய் இழைந்து ஆனந்தமாயிருந்தது.

இதற்கிடையில் ப்ரதி வெள்ளிக்கிழமை பஜனை, ஏகாதசி பஜனை, ரோகிணியன்று கீதாபாராயணம், பூரநக்ஷத்திரத்தன்று திருப்பாவை பாராயணம்முதலியன முறையே நடந்து வருகின்றன. —வை. மு. கோ.


கொஞ்சம் பிரதிகளே கைவசமிருக்கின்றன

தாரண வருடத்தில் தமிழகம் கண்ட புதுமை!

முற்றிலும் ஸ்திரீ எழுத்தாளர்களால் எழுதப்பட்ட மலர்கள்

## தாரண நந்தவனம்

* கற்பனை ஊற்று * நவரஸ அலங்காரம்
* ஓவியச் சோலை * அழகுப் பொக்கிஷம்

புத்தக உலகிலேயே இதொரு புதுமை. ரூ. 9.



JAGANMOHINI, owned and edited by V. M. KOTHAINAYAKI AMMAL is printed & published by V. M. PARTHASARATHY at the JaganMohini Press, 26. Car St., Triplicane, Madras. 5.

**100**

**ஸ்திரீ எழுத்தாளர்கள்**
**சிறப்பிக்கும்**

# தாரண நந்தவனம்

ருது மலர்கள்

★



சுமார்
700 பக்கங்கள்
100 படங்கள்

9 ரூபாய்

ஜகன்மோகினி பிரசுரம்